Registered as a News Paper
பக்கம் - 20

# ஈழநாதம்

விலை: 15.00
வெள்ளிநாதம் Weekly
நாதம்-15 வெள்ளி-13 21-27 மே 2004





## அகாஷியின் வருகை...



## தாயகத்திலிருந்து பாலா...

# ஈழநாதம்

வெள்ளிநாதம்

யாழ்சாலை, கிளிநொச்சி 21 . 05 . 2004

மின் அஞ்சல : weekly @ eezhanatham.com


## வாயடக்கம் வேண்டும்...!

ஒரு அதிகார மிக்கத் தலைவர் ஒரு நிலைப்பாட்டையும் அவரின் அதிகாரமிக்க இன்னுமொரு பிரதிநிதி வேறொரு நிலைப்பாட்டையும் கொண்ட ஒரு அரசோடு எந்தளவு தூரம் நம்பிக்கையோடு சமாதான முயற்சி மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அணுகமுடியும் என்ற கேள்வி எழவே செய்கின்றது.

அதுவும் அரசின் பொறுப்புமிக்க ஒரு அமைச்சுக்குப் பொறுப்பானவரின் கூற்றுக்களை உதாசீனம் செய்துவிடமுடியாது.

தமிழீழ விடுதலைபுலிகள் இயக்கத்துடன் சமாதான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள இதய சுத்தியுடன் செயற்படுவதுபோல தன்னை வெளிப்படுத்தும் சனாதிபதி சந்திரிகாவின் அமைச்சரவையில் வெளியுறவு அமைச்சராக இருக்கும் லக்ஷ்மன் கதிர்காமர் புலிகள் தொடர்பாகவும் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பாகவும் கூறிவரும் கூற்றுக்கள் பல சந்தேகங்களை தோற்றுவிக்கவே செய்கிறது.

இதற்குக் காரணம் ஒரு நாட்டின் வெளிவிவகாரக்கொள்கையானது ஒரு நாட்டின் தேசிய முடிவுகளோடு ஒத்துப்போகின்றதொன்றாகவே பொதுவாக இருக்கும்.

அத்தோடு வெளிவிவகார அமைச்சின் பணிகளில் முக்கியமாக கொள்கைகளை வெளிப்படுத்துவதும் அமையும். அது வெளிவிவகார கொள்கையாக இருந்தாலும் சரி நாட்டின் உள்விவகாரங்களுடன் தொடர்புடையதாக இருந்தாலும் சரி.

இதன் அடிப்படையில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அண்மையில் வோஷிங்டனில் வைத்து புலிகள் இயக்கம் தொடர்பாகவும் புலிகளால் முன்வைக்கப்பட்டிருக்கும் இடைக்கால தன்னாட்சி அதிகார திட்டவரைவு தொடர்பாகவும் கூறிய கருத்துக்களை இலங்கை அரசின் கொள்கையாக எடுத்துக்கொள்ளலாமா என்ற சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது.

இது சனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசு சமாதான முயற்சி தொடர்பாக இருவேறுபட்ட நிலைப்பாடுகளைக் கொண்டுள்ளதா என்று சிந்திக்கவைக்கின்றது.

ஏன்னென்றால் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் முன்பு நாடுகள்தோறும் புலிகளுக்கு எதிராக கருத்துக்களை விதைத்தது மட்டுமல்லாமல் புலிகளை ஒரு பயங்கரவாத அமைப்பாக சித்தரிப்பதிலும் முன்நின்றவர். அவர் அந்த நிலைப்பாட்டிலிருந்து இன்னும் விடுபடவில்லையோ என்று எண்ண வைக்கிறது.

அவ்வாறாயின் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் இக்கூற்று அரசின் கூற்றாக அமையுமிடத்து இந்த அரசோடு சமாதானப் பேச்சுக்களை முன்தொடர்வதில் எந்தவித நன்மைகளையும் பெற்றுவிடமுடியாது.

இந்த நிலையில் புலிகள் இயக்கத்தோடு தொடரப்போகும் சமாதான முயற்சிகளுக்கு முன்னர், சந்தேகங்களையும் ஐயங்களையும் களைவதற்குப் பதிலாக தோற்றுவிப்பதில் அரசு ஈடுபடக்கூடாது. அதற்குக் கதிர்காமர் போன்றவர்கள் தங்களது வாயடக்கத்தை அதிகமாகவே நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். இதுவே சமாதான முயற்சிக்கும் சந்திரிகா அரசிற்கும் அதிக நன்மை பயர்க்கும்.

### தூரனின் பார்வை...

# இந்தியப் பிரதமர் பதவிக்கு ஏன்...? இத்தனை குழப்பம்.

கடைசியில் சோனியா பிரதமராகும் சாத்தியம் பெரும்பாலும் இல்லாமல் போய் விட்டதென்றே கூறவேண்டும். பிரதமர் பதவிக்கு முன்னர் நீதியமைச்சர் மன் மோகன் சிங்கின் பெயர் பெரும்பாலும் உறுதி செய்யப்பட்டுவிட்டதாகவே தெரிகிறது.

ராமராஜ்ஜியவாதிகள் ரோம ராஜ்கியம் ஏற்படுவதை தடுத்துவிட்டார்கள் என்று நினைக்கலாமா? பிரதமர் பதவிக்கு யாக தன்னை மற்றிக் கொள்ளும் வகை யில் தன் இயல்புகளை மாற்றிக் கொண்டமை காரணமாக அவரை இந்திய மக்கள் தங்களில் ஒருவராக ஏற்றுக்கொள்ளவும் வைத்தது.

அவர் ராஜீவின் மனைவி என்பதற்கு அப்பால் ராஜீவின் பிள்ளை களான ராகுல், பிரியங்கா போன்ற நேரு குடும் பத்தின் வாரிசுகளின் தாய் என்ற அடையாளமே சோனியாவுக்கான இந்தியத் தன்மையை வழங்கியது எனலாம்.

தியாக மட்டுமே அறியப்பட்ட திருமதி சோனியாகாந்தி காங்கிரஸ் தலைவியானதும் பரபரப்பற்ற அரசியல் தலைவியாக, இந்திய அரசியல் தலைவர்களுக்குரிய குறிப்பாக காங்கிரஸ் கட்சியில் பாரம்பரிய தலைவர்களுக்குரிய எந்த வித குணாம்சங்களுமின்றி அவர் அரசியலில் தன்னை அறிமுகப்படுத்தியபோது, இந்திய எதிர் கட்சிகள் அவரை ஒரு அளுமைத்திறனற்ற, ஆுத்தற்ற அரசியல் கற்றுக் குட்டியாகவே எண்ணிக கொண்டனர்.

ராஜீவ் காந்தியின் மனைவி என்ற தகுதியை விடவும் வேறு எந்த அரசியல் அனுபவத் தகைமையும் அப்போது அவருக்கு இல்லை என்றது மெய்யேயாகும் .

ஆனால் கடந்த ஒரு தசாப்தத்துக்கும் அதிகமான காலப்பகுதிக்குள் அவர் இந்தியாவை மட்டுமல்ல இந்திய அரசியலையும், இந்திய அரசியல் வாதிகளையும் ஏன் இந்திய மக்களையும் அவர் நன்கு தெளிவாக கற்றுணர்ந்தும் பட்டுணர்ந்தும். கொண்டாரென்றே கூற வேண்டும்.

ஆனால் கடந்த காங்கிரஸ் அல் லாத கட்சிகளின் ஆட்சிக்கால ஆளும் கட்சியானது தொடர்ந் தும் அவரை ஒரு இத்தாலிய நாட்டுப் பிரஜை யாகவே விரல் சுட்டி விமர்சித்துக்கொண்டி ருந்தே வந்துள்ளது.

தாங்கள் ராமராஜ் ஜியம் அமைக்கப்பாடுபடும் இந்துத்துவ சிந்தனைமிக்க அரசியல் ஞானிகளாக-இலட்சியவாதிகளாக தம்மை மக்கள் முன் தோற்றம் காட்ட முயன்ற ஆர். எஸ்.எஸ். அமைப்பின் அரசியல் பிரிவான பார்தீய ஜனதா கட்சியினர் அதன் ஏனைய கிளையமைப்புக்களும்"சோனியா" ரோமராஜ்யத்தை இந்தியாவில் ஏற்படுத்தப்போகிறார் என யதார்த்தத்திற்கு முரணான பிரசாரத்தையே கடந்த காலத்தில் முக்கியத்துவப் படுத்தி வந்துள்ளன.

இராம ராஜீய வாதிகள் கடந்த ஆட்சிக் காலத்தில் அயோத்தியில் இராமர் கோயில் அமைப்பதையே இந்திய தேசிய கடமையாக பிரகட னம் செய்துகொண்டு இந்து மத வெறியை ஏற்படுத்தி, முஸ்லிம் மக்களு க்கு எதிரான கலவரங்களுக்கு மூல காரணமாக இயங்கியமையானது அவர்களின் சனநாயகத் தன்மை குறித்த சந்தேகங் களை பரந்த அளவில் எழுப்ப வைத்த மையே இந்த தேர்தலில் அவர்கள் சந்தித்த தோல்விக்கும் காரணம் என்றும் கூறப் படுகிறது.

"இந்தியா ஒளிர்கிறது" எனப் பிரசாரம் செய்த பாரதீய ஜனதா கூட்டணி ஆட்சியாளர்கள், இந்தியாவின் இருண்ட பகுதிகளுக்கு கலாசார, பண்பாட்டு, பொருண்மிய ஒளியை ஏற்றமறந்துவிட்டு, மதவெறியிருளை மேலும் அதிகமாக்கவே முயன்றார்கள் என்றால் அதில் சந்தேகமே இல்லை.

இந்த ராமராஜ்ஜிய தேசிய வாதிகள் மீதான நம்பிக்கையை மக்கள் இழந்தமையே ரோம ராஜ்ஜிய விதேசிய வாதியென வர்ணிக்கப்பட்ட சோனியாவையும் அவர் தலைமையிலான காங்கிரஸ் கூட்டணியினரையும் இம் முறை தேர்தலில்

(19ஆம் பக்கம் பார்க்க)

சோனியாவை பிரேரிக்க வசதியாக காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவராக அவரை தேர்ந்தெடுத்த உடனேயே, பாரதீய ஜனதாக் கட்சியின் இந்துத்துவ முகாமையாளர்களான ராஷ்ட்ரீய ஸ்வயம் சேவக் எனப்படும் ஆர்.எஸ்.எஸ் அமைப் பினரும், அதன் கிளை அமைப்பினர்களான ஹிந்து முன்னணி விஸ்வஹிந்து பரிஷத் போன்றவர்களும் சிவசேனா போன்ற ஹிந்து வெறியர்களும் சோனியா பிரதமராவதைத் தடுக்க நாடளாவிய ரீதியில் கிளர்ச்சிகளை மேற்கொள்ளத்தொடங்கியமையானது இந்திய தேசியத்தைப் பாதுகாக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என இந்து மத அடிப்படை வாதிகளால் பிரசாரப்படுத்தப்பட்டாலும் உண்மையில் அது இந்திய சனநாயகத்திற்கும், மக்கள் விருப்புக்கும், அரசியல் யாப்பின் அமைப்பிற்கும் விரோதமானதென்றே விமர்சிக்கப்படுகின்றது.


முதல் பிரச்சினை, சோனியா இந்தியப் பிரஜையா, இல்லையா என்பதே ஆகும். விரும்பியோ விரும்பாமலோ அவர் நேரு குடும்பத்தில் முக்கியத்துவம் மிக்க ஒருவராக இணைந்துகொள்ள நேரிட்டபோது சில பண்பாட்டுச் சிக்கல்கள் கலாசார முரண்பாடுகள் உருவான போதிலும், இந்திராகாந்தியின் ஆளுமையின் ஆற்றலால் அப்பிரச்சினைகள் மேலெழாமல் பாதுகாத்ததுடன் காலப்போக்கில் சோனியாவையும் முழுமையான இந்தியப் பிரஜை

எந்தவகையிலும் ஒரு குடும்பப் பெண்ணாக ஆரம்பம் முதல் தன்னை இனம் காணவைத்து, இந்திய மருமகளாகத் தன்னை அடையாளப்படுத்த முயன்ற சோனியா, அரசியல் பதவிகள் குறித்து கனவு கண்டது கிடையாது.

அவர் அரசியலுக்குள் கொண்டு வரப்பட்டதென்பது ஒரு விபத்தென்றே கூற வேண்டும். அரசியலுக்கு எந்த விதமான பரீட்சயமுமில்லாத அதுவும் இந்திய அரசியலின் ஆழமூலம் எதுவும் அறியாத சோனியாவை ராஜீவின் மரணத்தை ஒட்டிய அனுதாப அலையை பெருப்பித்து அதன்மூலம் நொந்து நலிந்து போய்க்கொண்டிருந்த இந்திய காங்கிரஸ் கட்சிக்கு உயிர்ச் சத்து என்ற காங்கிரஸ்காரர் பயன்படுத்தமுனைந்த நேரு குடும்பம் மீதான பற்றினாலல்ல... அரசியல் அதிகாரபீடத்தை மீண்டும் கைப்பற்றிக்கொள்ளவேண்டும் என்ற பேரார்வத்துடன் கூடிய பேராசையால்தான் என்பதை விளக்கிக் கூறவேண்டிய அவசியமே இல்லை.

அப்போதிருந்த நெருக்கடி நிலையில்-ராஜீவின் பின்னர் காங்கிரசின் தலைமை ஆழுமை மிகுந்த தலைமைத்துவமின்றி கேள்விக் குறியான சூழலில் -சோனியாவின் சோக முகமும், விதவைக் கோலமும் காங்கிரஸ் காரர்களுக்கு பிரசார.... சாதனமாகிவிட, ராஜீவின் மரணம் காரணமாக ஏற்பட்ட அனுதாப அலையானது காங்கிரஸ் சரிந்து வீழ்ந்துவிடாமல் காப்பாற்ற உதவியதெனலாம்.

ராஜீவ்காந்தி உயிருடன் இருக்கும் வரையில் வெறுமனே திருமதி ராஜீவ் காந்



# சந்திரிகா எதுவரை விட்டுக்கொடுப்பார்?







நிலாந்தன்

பிரதிச் சபாநாயகர் தெரிவில் சந்திரிகா எப்படியோ வெற்றி பெற்றுவிட்டார்.

போட்டியின்றித் தெரிவுகள் நடந்திருப்பது என்பது சபாநாயகர் தெரிவில் தான் பெற்ற வெற்றிகளைத் தொடர்ந்தும் பாதுகாக்கமுடியாத அளவுக்கு கட்சி நிலவரங்கள் மாறி இருப்பதாக யு.என்.பி அஞ்சியதே காரணம்.

சில கிழமைகளுக்குள் சந்திரிகா நாடாளுமன்றத்தில் கட்சி நிலவரங்களைத் தனக்குச் சாதகமாக மாற்றி அமைத்து விட்டார் என்பதே இதன் அர்த்தம்.

முஸ்லிம் காங்கிரஸைக் குழப்பியதிலும் இ.தொ.கா வைத் தளம்பச் செய்ததிலும் கூட அவர் கணிசமான அளவு வெற்றி பெற்று விட்டதாகவே தோன்றுகிறது.

சந்திரிகா இப்படிச் செய்வார் என்பது ஏற்கெனவே நன்கு எதிர்பார்க்கப்பட்ட ஒ்ன்றுதான். நாடாளுமன்றத்தில் தனது கூட்டு முன்னணியின் நிலையை ஸ்திரப்படுத்தும் முகமாகவே அவர் அவசரப்பட்டு சமாதானம் செய்யத் தொடங்கினார். இதற்காக கொழும்புக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் பல தடவைகள் ஹெலிகொப்டர்கள் பறக்க வேண்டியிருந்தது. நோர்வேயில் இருந்து அதன் வெளியுறவு அமைச்சர் பீற்றசனும் துணையமைச்சர் ஹெல்கேசனும் மினக்கெட்டு கொழும்புக்கும் கிளிநொச்சிக்கும் வரவேண்டியிருந்தது.

முதலில் சந்திரிகா நிபந்தனைகளை விதிப்பது போல ஒரு தோற்றம் உண்டாகியது. பேச்சுக்களில் இடைக்கால நீர்வாக ஏற்பாட்டைப் பற்றிக் கதைக்கும் அதேநேரம், இறுதித் தீர்வைப் பற்றியும் கதைக்கப்படவேண்டும் என்று அவர் நோர்வே தூதுவர்களிடம் சொல்லி அனுப்பியிருந்தார். அதோடு, பேச்சுக்கள் வெளிநாடுகளில் நடப்பது அவருக்கு விருப்பம் இல்லை என்றும் சொல்லப்பட்டது.

ஆனால் புலிகள் தமது நிலைப்பாட்டை திட்டவட்டமாக தெரிவித்தபோது அவர் உடனடியாக தனது நிலையிலிருந்து இறங்கினார். இது அவர் தனது நிபந்தனைகளை விட்டுக்கொடுத்ததுபோல ஒரு வெளித்தோற்றத்தைத்தரக்கூடும். ஆனால் இப்படி விட்டுக்கொடுப்பது என்று அவர் ஏற்கெனவே முடிவெடுத்து விட்டிருந்தார். அதை எடுத்த எடுப்பில் செய்யாமல் முதலில் நிபந்தனைகளைவிதிப்பது போல் விதித்து பின்பு அவற்றை விட்டுக்கொடுப்பது போல் விட்டுக்கொடுத்து சமாதானத்தின் பால் தனக்கிருக்கும் பற்றுறுதியை வெளிப்படுத்துமாப் போல அவர் நடந்துகொண்டார். இதன் மூலம் தமிழர்கள் தனது சமாதானத்தில் அதிக நம்பிக்கை வைத்து நாடாளுமன்றத்தில் தனது கூட்டு முன்னணிக்கு எதிராக வாக்களிக்கமாட்டார்கள் என்றும் அவர் நம்பினார்.

மேலும், சமாதானச் செயலராக கதிர்காமரோடு ஒத்துப் போகாத ஒரு அனைத்துலக இராஜதந்திரியான ஜயந்த தனபாலவை நியமித்ததும்கூட தனது சமாதான முயற்சிகளின் நம்பகத்தன்மையை கூட்டுவதற்கே.

தனபால முன்பு ஐ.நா.வில் முக்கிய பொறுப்பில் இருந்தவர். முன்னைய ரணில் அரசு தனது சமாதான முயற்சிகளின் போது அவரை சமாதானச் செயலராக பொறுப்பேற்குமாறு கேட்டது. ஆனால் அப்போது ஐ.நா.வில் தான் ஏற்கெனவே ஏற்றுக்கொண்ட ஒரு பணியை பூர்த்தி செய்ய வேண்டியிருந்ததால் தனபால யு.என்.பியின் அழைப்பை ஏற்கமுடியவில்லை. என்று சொல்லப்பட்டது.

இப்பொழுது அதே தனபாலவை சந்திரிகா கொண்டு வந்துள்ளார். இதன் மூலம் அவர் இரண்டு திசையில் செய்திகளை அனுப்பியுள்ளார். முதலாவது தமிழர்களுக்கு அதன்படி கதிர்காமருடன் முன்பு முரண்பட்ட தனபாலவை கதிர்காமருக்குப் பதில்சொல்ல தேவையில்லாத அள்வுக்கு அதிகாரமுடைய ஒரு பொறுப்பில் நியமித்ததன் மூலம் தனது சமாதான முயற்சிகளை தமிழர்கள் நம்ப வேண்டும் என்று அவர் எதிர் பார்க்கின்றார்.

மற்றது, சர்வதேச சமூகத்திற்கு குறிப்பாக மேற்கு நாடுகளுக்கு தனபால ஒரு விருப்பமான இராஜதந்திரி. அவரை சமாதான செயலராக நியமித்த தன் மூலம் சமாதான முயற்சிகளை தான் ஒரு நாடகமாக முன்னெடுக்கவில்லை என்று நிரூபிப்பதே அவருடைய நோக்கம். உண்மையில் தனபாலவின் நியமனம் சர்வதேச அளவில் சந்திரிகாவின் சமாதான முயற்சிகளின் நம்பகத்தன்மையை உயர்த்தியிருக்கின்றது.

இதன்மூலம் அவர் தனது இலக்குகள் சிலவற்றை நெருங்கிவரத்தொடக்கிவிட்டார். சந்திரிகாவுக்கு இப்போது நான்கு பிரதான இலக்குகள் உண்டு. முதலாவது தான் சமாதானத்தின் எதிரி என்று தமிழர்கள் மனதில் விழுந்திருக்கும் படிமத்தை அகற்றுவது. இரண்டாவது, சர்வதேச அளவில் தனது சமாதான முயற்சிகளின் நம்பகத்தன்மையை கூட்டுவது. மூன்றாவது, தான் சமாதானம் செய்வது தனது கட்சியை நாடாளுமன்றத்தில் ஸ்திரப்படுத்துவதற்காகவோ அல்லது நிதி உதவிகளைப் பெறுவதற்காகவோ அல்ல என்று நிரூபிப்பது. நாலாவது, சமாதான முயற்சிகளில் இந்தியாவை முடியுமானால் பங்காளியாக்குவது.

இந்த நான்கு இலக்குகளையும் அடைவதற்கான முதற்கட்ட முயற்சிகளை பொறுத்தவரை அவர் சில விசயங்களில் வெற்றிகரமாக முன்னேறியிருப்பதாகத்தோன்றுகிறது.

சபாநாயகர் தெரிவில் அவர் பெற்ற எதிர்பாராத தோல்வியிலிருந்து அவர் பாடங் கற்றிருப்பதாகவும் தெரிகிறது. இழப்புக்களும் தோல்விகளும் அவரை மேலும் மேலும் வெற்றிக்கான குறுக்கு வழிகளை நோக்கியே உந்தித்தள்ளியுள்ளன. தொடர்ச்சியான இழப்புக்கள், புறக்கணிப்புக்கள், அவதூறுகள் போன்றவற்றின் ஊடாகவே உருவாகியவர் அவர்.

விஜயக்குமாரணதுங்கவை காதலித்த காரணத்தினாலேயே அவர் தனது குடும்பத்தை பகைக்கநேர்ந்தது. இது ஒரு கட்டத்தில் கணவனோடு சேர்ந்து தாய்க்கு எதிராக அதாவது இன்று தான் தலைமைதாங்கும் கட்சிக்கு எதிராக அரசியல் நடத்தும் ஒரு நிலைக்கு அவரை இட்டுச்சென்றது. சிறுவயதில் தகப்பன் சுட்டுக்கொல்லப்பட்டது. பின் நாளில் குடும்பத்தை பகைத்து மணந்த கணவன் கண்முன்னால் சுட்டுக் கொல்லப்பட்டது... என்று இரு பெரிய இழப்புக்களால் உருவாகியவர் அவர்.

கொழும்பில் அவருக்கு முன்பிருந்த சிங்கள தலைவர்களில் அவரளவுக்கு இழப்புக்களால் உருவாகியவர் வேறு எவருமில்லை. ரணிலைவிடக் கூடுதலாக அவருக்கு இருக்கும் தகுதிகள் இவை.

பிரேமதாசவைப்போல ஒரு தலைவரால்தான் இப்போது சந்திரிகாவுக்கு எதிராக யு.என்.பிக்கு தலைமை தாங்கமுடியும். ரணிலுக்கு அப்படியொரு அரசியல் பாரம்பரியம் இல்லை.

எனவே, சந்திரிகாவை தோற்கடிப்பதைவிடவும் தன்னுடைய தலைமைத்துவத்தை தனது கட்சிக்குள்ளேயே பாதுகாப்பதற்கான உத்திகளைப் பற்றியே ரணில் அதிகம் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

இத்தருணத்தில் சந்திரிகா தன்னை மேலும் பலப்படுத்தும் முயற்சிகளில் இறங்கி விட்டார்.

சமாதானம் செய்வதில் தனது பலம் என்று ரணில் நம்பியது அவருடைய சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னல்தான். இப்படி ஒரு பலம் சந்திரிகாவுக்கு தற்சமயம் இல்லை. அவர் அதை இனித்தான் உருவாக்கவேண்டியிருக்கிறது.

ஆனால் இப்பொழுது தமிழர்களுக்கு பலமாய் இருப்பது இந்த விசயம்தான். அதாவது சந்திரிகா தன்னை சர்வதேச அளவில் ரணில் அளவுக்கு இனிமேல் தான் ஸ்தாபித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதையும் கூட அவர் கணிசமான அளவிற்கு புலிகளுடன் சேர்ந்துதான் செய்ய வேண்டியிருக்கிறது.

பிராந்திய மட்டத்தில் சந்திரிகா ரணிலைவிட பலமானவர் போல காணப்படுகின்றார். உள்நாட்டில் அரசியலமைப்பின் படியும் அவருடைய சூழ்ச்சிகரமான தலைமைத்துவ ஆளுமைப்படியும் ரணில் விக்கிரமசிங்கவின் போதாமைகளின்படியும் சந்திரிகா ஒப்பீட்டளவில் பலமானவராக காணப்படுகிறார். ஆனால் சர்வதேச அளவில் அவர் ரணிலைவிடவும் பலவீனமானவராகவே காணப்படுகிறார்.

எனவே உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் தன்னைப் பலப்படுத்தும்வரை அவர் தமிழர்களுக்கு மேலும் விட்டுக்கொடுக்கக்கூடும்.

விட்டுக்கொடுத்தால்தான் சமாதானம் செய்யலாம். நாடாளுமன்றத்தில் தனது கூட்டு முன்னணியை ஸ்தரப்படுத்தலாம். சமாதானம் செய்தால்தான் நிதியுதவி பெறலாம். நிதியுதவி கிடைத்தால்தான் பொருளாதாரம் அசையும். எனவே சந்திரிகா தனது சமாதானத்தின் ஆரம்ப கட்டங்களில் சில விட்டுக்கொடுப்புகளுக்கு போகும் வாய்ப்புக்கள் தென்படுகின்றன. இப்படியே அவர் எதுவரை விட்டுக்கொடுப்பார்?

நிதியுதவிகள் கைக்கு வரும் வரையிலுமா? அல்லது சர்வதேச அளவில் தன்னைப்பலப்படுத்தும் வரையிலுமா? அல்லது நாடாளுமன்றத்தில் விலைக்கு வாங்கக் கூடிய எதிர்கட்சி ஆட்களை விலைக்கு வாங்கும்வரையிலுமா? அல்லது ஆர்தர் சி கிளாக் முன்பு ஒரு முறை தீர்க்கதரிசனம் உரைத்ததுபோல சமாதானத்துக்கான நோபல் பரிசை வெல்லும் அவரது கனவு மெய்ப்படும் வரையிலுமா?

## மதவடி மயிலர்



சாண் ஏற முழம் சறுக்கிறது என்று சொல்வார்கள் அந்தப் பழமொழிக்கு பொருத்தமா இருக்குது பாருங்கோ கதிர்காமரின் கதையும் செயலும் பாருங்கோ..... கொழும்பிலை ஒருகதை, டில்லியிலை ஒருகதை, இப்ப அமெரிக்காவிலை போய் வேறொருகதை.... கிட்டத்தட்ட அறளை பெயர்ந்தவையின்ரை அலம்பல் மாதிரியே.

'அலம்பல் மாதிரியென்ன....அலம்பலே தான் '....

இந்தியாவிலை நின்று கொண்டு விடுதலைப்புலிகளை தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதியாக ஏற்று அரசு பேசும் என்கிறார்... அமெரிக்காவில் போய்க்குதித்து இந்திய புதிய அரசு பிரபாகரனைப் பிடித்துத்தருமாறு கேட்டால் தாங்கள் அது குறித்து பரிசீலிக்கும் என்கிறார்... இனிக் கொழும்புக்குத் திரும்பி வந்து என்ன உளறப்போகிறாரோ.....?

இங்கை சந்திரிகா அம்மையார் சமாதானம் என்று பெரிதாய் பேசிக் கொண்டு என்னென்னமோ வேகவேகமாய் செய்யப்பாக்கிறா என்றால் அங்கை இந்தியாவிலையும், அமெரிக்காவிலையும் கதிர்காமர் பாதுகாப்பு ஒப்பந்தங்கள் செய்யப்போகிறாராம்....

'அம்மையார் ஒருகதை...ஆலோசகர் கதிர்காமர் வேறொருகதை....'

இதுக்கிடையில் தோழர் (சந்திரிகாவின்ர தோழர்) ரில்வின் சில்வா விடுதலைப்புலிகளை ரணில் அரசு உயர்ந்த நிலையிலை கொண்டுவந்து இருத்திப் போட்டுதாம் அதனாலை தான் தாங்களும் அவர்களை அந்த இடத்தில் வைத்து பேசவேண்டி வந்திட்டுதாம்... சமாளிப்புக் கதையல்லே சளாப்புறார்....

'புலிகளோட பேசவும்வேணும், பேசுறத்துக்கும் வெட்கமென்றால்... யார் என்ன செய்யிறதாம்?

இது தான் சொல்லிறது சனத்துக்கு முன்னால் போய் நிண்டு கொண்டு வெட்டுவன் விழுத்துவன் என்று வாய்ச்சவடால் அடிக்கக் கூடாதென்று... தேர்தல் மேடையிலை அவிட்டு விடாததையெல்லாம் பதவிக் கதிரையில் இருந்தவுடனை மறந்து போகவேணும் என்று இப்பத்தான் விளங்குது போலை...

அது எங்கடை ஹெல உறுமயக்காரர் இரண்டாய் பிரிஞ்சு நிக்கினமாம் கேள்விப்பட்டியளே...! பாவங்கள் பிரித் ஓதிக் கொண்டு கிடைத்த தானத்தைப் பெற்றுக் கொண்டு 'புத்தம் சரணம் கச்சாமி என்று போர்த்து மூடிக் கொண்டு இருக்க வேண்டியவர்கள்... அரசியல் சரணம் கச்சாமி என்று வந்து அவமானப் படுகினம் பாருங்க... தம்மபதத்தை படிக்க வேண்டியவர்கள் அரசியல் யாப்பையெல்லே படிக்க வேண்டியிருக்குது...!

மென்மையான உறக்கம் மரணத்தின் போலி. - ஷேக்ஸ்பியர்

# நறுக்கென...



## கண்ணதாசன் பாட்டும் ஜெயலலிதாவின் கூத்தும்

ஆடிய ஆட்டம் என்ன, பேசியவார்த்தையென்ன, தேடிய செல்வமென்ன திரண்டதோர் சுற்றமென்ன...?

தேர்தலிலே தோல்விகண்டால் திரும்பி யார் பார்ப்பாரிங்கே...? என்ன! பாட்டையே மாற்றிப்பாடுகிறேன் என்று நினைக்கிறீர்களா...?

ஜெயலலிதாவை நினைத்தால் இப்படித்தான் பாடத்தோன்றுகிறது. கண்ணதாசன் எல்லாருக்கும் எல்லாக்காலத்திற்கும் பொருத்தமாகப்பாட்டெழுதி வைத்திட்டுத்தான் போயிருக்கிறார்.

ஒரு தடவை கருணாநிதி கூட துறைமுகத் தொகுதி தனது இருப்பை மயிரிழையில் தக்கவைத்துக்கொண்டுதான் ஏனைய தொகுதிகளை ஜெயலலிதாவிடம் இழந்தார்.

இந்த முறை அண்ணா திராவிடமுன்னேற்றக்கழகத்தினரைக் கூண்டோடு கைலாசம் அனுப்பிவிட்டார்கள் தமிழக மக்கள்.

'எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே...

சொந்த நாட்டிலே... நம் நாட்டிலே என்று அந்தக்காலத்தில் மலைக்கள்ளன் படத்தில் எம்.ஜி.ஆர் பாடிய பாடல்தான் இப்போது நினைவுக்கு வருகிறது.

எல்லாமே எம்.ஜி.ஆர் பெயரைச்சொல்லி நடந்த ஏமாற்று மோசடிகளை எத்தனை காலம் தான் தமிழக மக்கள் பொறுத்துக்கொள்வார்களாம்?

-இது ஜெயலலிதாவுக்கு கிடைத்த மிகப்பெரிய தண்டனை.

'பொடா' சிறைவாசத்தைவிடக்கொடியது.

அண்ணா, எம்.ஜி.ஆர்.. வழிவந்த திராவிடர் கழகத் தொண்டர்களை பேய்க்காட்டி இந்துத்துவ [illegible]னதாவுடன் கூட்டுச்சேர்[illegible]குத்தறிவுக் கொள்கைகளைக் குழிதோண்டிப்புதைத்தவர் ஜெ[illegible]தா... இது திராவிட பாரம்பரியத்திற்கு அவர் செய்த அப்பட்டமான துரோகமே....

பெரியார் பாதையில் இந்த சின்னத்தனமெல்லாம் நடந்தேறுவதுதான் துயரம் தரும் விடயமாகும்..

சரி ஜெயலலிதா தன் பார்ப்பனிய சிந்தனையால் தோற்றார், பாரதீய ஜனதாவையும் தமிழ்நாட்டில் விலாசமில்லாமலாக்கினார்..

அதற்கு நன்றி...!

அதேவேளை கருணாநிதி காங்கிரஸுடன்.... அதுவும் காலம் காலமாக...தி.மு.கவின் ஜென்ம விரோதியான காங்கிரஸுடன் கூட்டுச்சேர்ந்து அரசியல் நடத்தப்போவது இனி வரலாற்றுப்பதிவாகவே இருக்கப்போகிறது.

தமிழகத்தில் தமிழன் தனித்து நின்று தன்னைத்தானே ஆள வழிகாட்டும் ஒரு தமிழ் உணர்வாளர் கட்சி.. இல்லாமல் போய்விட்டதே...!

அண்ணாவின் பின்னால் அரியணை ஏறியோர் வெறும் அரசியல்வாதிகளாக இருந்தது தான் அனைத்திற்கும் காரணம்.

தமிழை-தமிழனை வெறும் கட்சி அரசியலுக்காகப் பயன்படுத்தி தமிழ்நாட்டை, அதன் தனித்துவத்தை, சீரழித்துவிட்டார்கள் 'திராவிடம் பேசிய பின்னாள் தலைவர்கள்.. இனியாவது தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக இந்தத் தலைவர்கள் உழைக்கவேண்டும்.

## என்ன அரசு எப்படிப்பட்ட அமைச்சர்



புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக்கான திட்டவரைபானது எதிர்காலத்தில் தனித்தமிழ் நாடொன்றை உருவாக்குவதற்கான நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட ஒன்றேயாகும்.

இவ்வாறு திருவாய் மலர்ந்தருளியிருப்பவர் வேறுயாராக இருக்கும்?

சந்தேகமேயில்லை அந்த புலம்பல் கதிர்காமரின் அலம்பல் தான் இது. அன்னார் இதனை அமெரிக்கா பறந்து சென்று வாஷிங்டனில் நின்றுகொண்டு உரைத்திருக்கிறார்.

அதுமட்டுமல்ல இந்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனையை இறமையுள்ள எந்த அரசும் ஏற்றுக்கொள்ளாது.. அதுமிகக்கடினமானவிடயமாகும் என்றும் கூட அவர் அங்கு விளக்கியுமுள்ளார்.

கதிர்காமருக்கு இப்போது நன்றாக அறளை பெயர்ந்து வாக்கு த்தடுமாற்ற நிலை வந்து விட்டது போலும்.

-வயதும் அப்படியான தொங்கல் நிலையை எட்டிவிட்டதுதானே..?

இரண்டு வாரங்களின் முன்னர்தான் புதுடில்லியில் நின்றுகொண்டு புதுவேதம் ஒன்றை ஓதி அனைவரையும் திகைக்க வைத்தார்.

விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என ஏற்று அரசு பேச்சுவார்த்தை நடத்தும் என்றார்.

அந்த வகையில் டக்ளஸ் தேவானந்த உட்பட அரசு தோளோடு தோளும் காலோடு காலுமாக ஒட்டியபடி செயற்படும் அனைவரும் தமிழ்மக்களின் பிரதிநிதிகளல்ல என்பதை பகிரங்கமாக ஒப்புக்கொண்டார்.

இந்தியா செல்ல சில வாரங்களின் முன்னர்கூட இனப்பிரச்சினை தொடர்பான விவகாரங்களில் இந்தியா நேரடியாகவும், முழுமையாகவும் தலையிடும் காலம் வந்துவிட்டது என்று ஓங்கி ஒலித்தவர் இந்தியா சென்றதும் குரலை மாற்றிக்கொண்டார். இனப்பிரச்சினைக்கான சமாதான முயற்சிகளில் இந்தியா எந்த அளவு தலையீடு செய்யலாம் என்பதை விடுதலைப்புலிகளுடன் பேசி அவர்களின் சம்மதத்துடனேயே தீர்மானிக்கப்படும் என்றார்.

அது இந்தியாவுக்கு விழுந்த அவமானகரமான அடியேயாகும்.

அதன் பின்னர் இலங்கை வந்ததும் சந்திரிகாவைச் சந்தித்து விட்டு சமாதான முயற்சிகள் குறித்து அமெரிக்காவுக்கு விளக்கமளிக்கப்போவதாகக் கூறிக்கொண்டு விமானமேறினார்.

அங்கு போய் மேற்குறிப்பிட்டவகையில் சமாதான விளக்கமும் அளிக்கிறார். கதிர்காமர் அமெரிக்காவில் நின்றுகொண்டு இ.த அதிகாரசபையை எந்த இறமையுள்ள அரசும் ஏற்றுக் கொள்ளாது என்று அலம்பிக் கொண்டிருக்கும் அதேவேளை, இங்கு அவரது எஜமானி சந்திகா இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்கத் தயார் என்று அறிவித்துவிட்டார்.

என்ன அரசு? எப்படிப்பட்ட அமைச்சர்? ஆனால் பாவம் உலகமும் நாட்டுமக்களும்..!

முன்னர் கதிர்காமரும் ரத்வத்தையும் சேர்ந்து சந்திரிகாவை குழப்பினார்கள் இப்போது கதிர்காமர் தனியாகவே குழப்புகிறார். அவ்வளவுதான். அதுசரி.... சந்திரிகா சொல்லாமல் கதிர்காமர் குழப்புவாரா என்றா கேட்கிறீர்கள்? அதுவும் யோசிக்கவேண்டிய விடயம்தான்......!

## சோனியாவின் வெற்றி மதவாதத்துக்கான தோல்வி



அயல்நாட்டில் ராமராஜ்ஜியம் அஸ்தமித்து ரோம ராஜ்ஜியம் உதயமாகியுள்ளது. இந்திய மக்களுக்கு தேசியத் தலைவர்கள் மீதான நம்பிக்கை குறைந்து விதேசியத்தலைவி மீதான எதிர்பார்ப்பு அதிகமாகி விட்டதையே இந்த நாடாளுமன்றத்தேர்தல் முடிவுகள் நிரூபித்துள்ளன...

சோனியா ஒரு இத்தாலியப்பெண், ஆனாலும் இந்தியப்பாஷையில் கூறுவதானால் அவரின் புக்ககம் இந்தியா.. இந்திராகாந்தியின் மருமகள்.. அவர் ராஜீவ் காந்தியின் மனைவி.. நேரு பரம்பரையுடன் திருமணம் மூலம் இந்தியக்குடிமகளானவர்.

இவ்வளவும் போதும் இந்திய மக்கள்அவரை அரசியல் தலைவியாக ஏற்றுக்கொள்வதற்கு.

வாஜ்பாய் தலைமையிலான பாரதீய ஜனதா அரசு சர்வதேச அளவில் இந்தியாவின் மதிப்பை உயர்த்த கடுமையாக முயன்றதென்னவோ உண்மையாக இருந்தாலும் உள்நாட்டில் அவர்கள் மக்களின் பிரச்சினைகளை திசைதிருப்ப இந்துத்துவக்கோட்பாட்டை தத்தெடுத்தது மகா தவறு.

மிதவாத இந்திய அரசியலில் மதவாதம் ஏற்படுத்த அவலத்திற்கு குஜராத் வன்முறைகளின் கொடூரம் சான்றாகும். இது ராமராஜ்ஜிய பரிபாலகர்கள் குறித்த அவநம்பிக்கையையும், அச்சத்தையும் மக்களுக்கு ஏற்படுத்தியதை இந்தத்தேர்தல் வெளிப்படுத்தியுள்ளது.

மதவாத அரசியலை, இந்திய மக்களில் கணிசமானோர் நிராகரித்துள்ளார்கள் என்பது இடது சாரிகளுக்குக் கிடைத்துள்ள வெற்றியையும் உதாரணமாகக் கூறலாம்.

அரசியலில் மதவாதம்... அதாவது மதசார்பு நிலமை எத்தகைய ஆபத்தானது என்பது இந்திய மக்களுக்கு புரியத்தொடங்கியுள்ளது மகிழ்ச்சியான விடயமே.

(ஆனால் இலங்கையில் மீண்டும் மதவாதம் தலையெடுக்கத் தொடங்கியுள்ளதை கவனத்தில் கொள்வது அவசியம்..)

சோனியாவின் அரசியலுக்கான வருகை ஆரம்பத்தில் காங்கிரஸின் வளர்ச்சிக்கு அனுதாப அலையைத் திரட்ட, அவசியமானதாகக் கருதப்பட்டது. என்னவோ உண்மைதான்... ஆனால் வீழ்ச்சிநிலையில் இருந்த காங்கிரஸின் பல சிரேஷ்ட தலைவர்கள் அடித்த குத்துக்கரணங்கள் அவரை காங்கிரஸின் தலைவி ஸ்தானத்திற்கு உயர்த்த, காங்கிரஸை இன்றுள்ள நிலைக்கு இழுத்துவரவேண்டிய பொறுப்பை அவர் வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளார்.

இது இந்தியத் தேசியம் பற்றி வாய்ச்சவடால் அடித்துவந்து இந்திய மரபுவாத அரசியல் தலைவர்களுக்குக் கிடைத்த பெரும்தோல்வியேயாகும்...

மதச்சார்பின்மையை வலியுறுத்துவோர் சோனியாவை ஆட்சியில் அமர்த்த உதவ முன்வந்துள்ளனர்.. குறிப்பாக இடதுசாரிகள்...

இந்த நிலையில் இந்தியா தனது எதிர்கால வளர்ச்சியை தொலைநோக்குடன் கருத்தில்கொண்டு உள்ளக-அயலக சர்வதேச கொள்கைகளில் தீவிரமான மாற்றங்களை விஞ்ஞான பூர்வமாக சிந்தித்து கொண்டு வருதல் அவசியமாகும்.

புதிய ரோம ராஜ்ஜியத் தலைவி பிரச்சினைகளை உணர்ச்சிபூர்வமாகவன்றி உணர்வுபூர்வமாக அணுகவேண்டும். சோனியா அதைச்செய்வாரா?

அதற்கு இந்தியாவை ஆட்டிப்படைக்கும் பார்ப்பனீயச்சக்திகள் அனுமதிக்குமா?

அல்லது

இராமர் ஆண்டால் என்ன ரோமன் ஆண்டாலென்ன... என்ற கதைதான் தொடருமா?

## சலியாத அகாஷிக்கு பரிசு வழங்கலாம்



அந்த வரலாற்று புகழ் மிக்க றொபேட் புரூஸ் என்ற மன்னனைப் போலவும் அந்தக் கர்ணபரம்பரைக் கதைகளில் வரும் மன்னன் விக்கிரமாதித்தனைப் போலவும் மீண்டும் மீண்டும் சலியாத நபர் ஒருவர் இருக்கவே செய்கிறார்.

அவர்தான் யசூசி அகாசி. ஜப்பானிய விசேட தூதுவர்.

மீண்டும்.... மீண்டும்.... சமாதானத்தின் பேரால் ஜப்பானுக்கும், சிறிலங்காவுக்கும், வன்னிக்குமாக அலையும் அலைச்சல் இருக்கே.. அதற்காகவே அவருக்கு நோபல் சமாதானப்பரிசை வழங்கிவிடலாம்.

அமெரிக்க அபிலாஷையை நிறைவேற்ற வேண்டும்...

கொழும்பு அரசைத் திருப்திப்படுத்த வேண்டும்....

விடுதலைப்புலிகளையும் சமாளிக்கவேண்டும்...

எல்லாமே சமாதானத்தின் பேரால்.... பேச்சுவார்த்தையின் பேரால்... மேற்கொள்ளவேண்டும். ஆனால் கடந்த காலங்களில் அவர் எடுத்த சகல முயற்சிகளும் அடுத்தடுத்து ஏமாற்றத்தை யேயளித்தன.

ரோக்கியோ கடன் வழங்கும் நாடுகளின் உச்சிமாநாட்டில் விடுதலைப் புலிகளைக் கலந்து கொள்ளவைக்க அவர் மேற்கொண்ட முயற்சியின் பின்னால் இருந்த உள்நோக்கத்தை புலிகள் தெளிவாகப் புரிந்துகொண்டதால் அகாஷியின் முயற்சி தோல்விகண்டது.

புலிகள் எச்சரிக்கையாகவும், தீர்க்கமான முடிவோடும் இருக்கிறார்கள் என்பது அகாஷிக்கும் தெளிவாகி இருக்கவேண்டும்.....

ஆனாலும் ரணிலின் அப்போதைய அரசை மகிழ்ச்சியின் எல்லைக்கே கொண்டு போகும் அளவுக்கு பெருந்தொகை நிதியை அள்ளிவழங்க உறுதி தெரிவிக்கும் வகையில் அந்த உச்சிமாநாடு அகாஷியின் தோல்விக்கு மத்தியிலும் நடத்தி முடிக்கப்பட்டது.

ஆனாலும் நிதியை கையளிக்க சமாதானத்தை நிபந்தனையாக்கியதில் கைக்கெட்டியது வாய்க்கெட்டாமற்போயிற்று.

இன்னமும் அந்த நிபந்தனை செல்லுபடியாகக் கூடிய ஒன்றாகவே இருப்பதால், புதிய அரசு சமாதானத்தைப்பற்றி மீண்டும் தீவிரமாகப் பிரஸ்தாபிக்கத் தொடங் கியுள்ள வேளையில் அகாஷியின் மறுவருகை ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்ட ஒன்றாக நடந்தேறியுள்ளது. இம்முறையும் அரசுடன் பேசிவிட்டு விடுதலைப்புலிகளுடனும் பேசி சமாதானம் தொடர்பாக என்ன உத்தரவாதத்தைப் பெறப்போகிறார். என்பது விபரமாகத்தெரியப்போவதில்லை....

ஆனால் நிதிவேண்டுமா?...(அதுதான் கடன் வேண்டுமா?) சமாதான வழியை நாடுங்கள் என அரசிடம் அவர் கோரலாம்...

ஆனால் விடுதலைப்புலிகளிடம் இந்தப் 'பாச்சா' பலிக்காது என்பது அகாஷிக்கு தெளிவாகவே தெரியும்.


எனவே வன்னிக்கு வருகை தரும் அகாசி என்ன பேசப்போகிறார் என்பது அவர் ஜப்பானிலிருந்து கொண்டுவரும் செய்தியைப் பொறுத்தே அமையும் எனலாம்.

மீண்டும் சமாதானத் தூதுவர்கள் கொழும்பையும், வன்னியையும் குறிவைக்கத் தொடங்கிவிட்டார்கள்.

சோழியன் குடும்பி சும்மா ஆடுமா.?

— செங்குட்டுவன்

விவேகத்தை இல்லாத படிப்பு, மனத்தை நீங்கவே செய்கின்றது. - டி. ஸ்டட்ன்





# அரசு ஒரு முடிவுக்கு வருமா?

**இந்த அரசால் முன்னைய அரசுகள் பெற்ற அல்லது முன்னர் சந்திரிகாவே, பெற்ற அனுகூலங்களைப்போல பேச்சின் சுவாரசியங்களின் பின்னால் சமாதான முயற்சிகளின் மயக்கங்களின் பின்னால் எந்த அனுகூலங்களையும் அவ்வளவு இலகுவாகப் பெற்றுக்கொள்ளமுடியாது.**

**அத்தகையதொரு நிலைப்பாட்டுக்கான அஸ்தமனமானது 1994இல் சந்திரிகா தலைமையிலான அரசினுடனான சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்ததும், இனிமேல் நடைபெறும் சமாதானப் பேச்சுக்களுள் மூன்றாம் தரப்பான சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடன்தான் நடைபெறும் என மாவீரர் தின உரையில் தலைவர் பிரபாகரன் அறிவித்ததை தொடர்ந்து அது ஆரம்பித்து விட்டது.**

தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வு எப்பொழுதும் ஒரு கால்பந்து போல மாறிமாறி இரு அணிகளிற்கிடையில் மைதானத்தில் படாதபாடுபடும் பந்து போல அங்கும் இங்கும் அடிக்கப்பட்டதே வரலாறு.

1931 ல் டொனமூர் அரசியல் யாப்பு நடைமுறைக்கு வந்த போதும் அதன் பின்னர் நடந்து முடிந்துவிட்ட 13 நாடாளுமன்ற மாற்றங்களின் பின்பும்கூட இது வெற்றி இலக்கை நோக்கி கொண்டு செல்லும் வகையில் தமிழரின் இனப்பிரச்சினைக் கையாளப்படவில்லை.

இங்கு இரண்டு அணிகள் என்று சொல்லப்படும் இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஆட்சியைக் கைப்பற்றிவரும் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திர கட்சியும் தமிழரின் பிரச்சினைக்கான தீர்வு என்ற பந்தை மைதானத்தில் வெற்றி இலக்கை எட்டவிடாது. ஆனால் பார்வையாளராக இருக்கும் சர்வதேச சமூகத்தையோ, அல்லது இலங்கையின் எந்த குடிமக்களையானாலும் சரி கூடுதல் சுவாரசியம்மிக்க ஒரு போட்டியைப்பார்க்கும் பார்வையாளராக அதில் அவர்களை வசியப்படுத்தி வைப்பதில் கவனமாக இருந்து வந்துள்ளன.

இதில் இவ்விரு கட்சிகளுமே இலங்கைக் குடியரசு ஆனதன் பின்னான இன்று வரையான காலப்பகுதியிலும் சரி அல்லது முன்னான டொனமூர் யாப்பு கொண்டு வரப்பட்ட 1931 காலப் பகுதியிலும் அதற்கு முன்னான காலப்பகுதியாக இருந்தாலும் சரி பந்து மைதானத்தில் மட்டுமே வைத்திருப்பதில் கவனமாக இருந்து வருகிறது.

அதாவது தமிழரின் இனப் பிரச்சினை பேச்சுக்களோடும் பேச்சுக்கள் தொடரும் போது ஏற்படும் எதிர்பார்ப்புக்களோடு மட்டும் இருந்து விட்டு அவை வெற்றி இலக்கை எட்டாமலே முடிந்து விடுகிறது.

இது ஏறத்தாள இலங்கையின் அதிகாரம் மிக்க நான்கு பிரதமர்களின் காலம்தொட்டு நிறை வேற்று அதிகாரம்கொண்ட நான்கு சனாதிபதிகளின் காலம்வரை 1947 ல் இருந்து 2004 வரையான இன்று வரை தொடருகிறது.

ஆனால் பிரச்சினையின் ஆட்டத்தில் மட்டும் சுவாரசியம் குறைந்ததில்லை. இதற்கு நல்ல உதாரணமாக 1994ல் சந்திரிகா பதவி ஏற்றதோடு யாழ்ப்பாண பேச்சுக்கள் என்று சொல்லப்படும் அரசு புலிகள் பேச்சுக்களிலும், பின் ரணிலின் அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்களிலும் ஒரு விறுவிறுப்பு மிக்க திரைப்படத்தின் காட்சி போலவும் அந்த காட்சியை ரசிக்கும் ரசியர்களின் மனநிலையைப் போல ஒரு ஆர்வத்தை ஏற்படுத்தி விட்டு பேச்சின் முடிவும் அதோடு முடிந்துவிட்டது.

ஆனால் திரைப்படத்தின் காட்சிகளுக்கான போலியான நடிப்புகளாக இல்லாது அப்பாவி மக்களின் உயிரோடு அரசு விளையாடுவதுதான் மகாகொடுமை. இதைத்தான் ஒவ்வொரு கட்ட பேச்சின் முடிவும் அதன் பின்னான துயரங்களும் இலங்கையில் ஏற்படுத்தியவரலாறு.

பேச்சுக்களின் போதான சுவாரசியத்தை அரசு ஏற்படுத்துவது என்பது அது அரசின் ஒரு கபட நோக்கம் கொண்ட குறி. இந்த சுவாரசியங்களின் பின்னால் கிடைக்கும் இலாபங்கபை பெறும் நோக்கங்களைக் கொண்டவை இதற்காக அரசுகள் உச்ச சுவாரசியங்களை ஏற்படுத்துவதை ஒரு கலையாகவே கையாண்டு வருகின்றனர்.

முன்னர் ரணிலின் அரசு ஏற்படுத்திய சமாதான முயற்சிகள் தொடர்பான சுவாரசியமும் கவர்ச்சியும் இத்தகையதே. இதன்மூலம் ஒவ்வொரு அரசுக்கும் தேவையான நிதிப்பலத்தையும், இராஜதந்திர பலத்தையும் பெற்றுக் கொள்வதே குறி.

மாறாக தமிழர்களின் இனப் பிரச்சினையை ஒரு தீர்வை நோக்கி கொண்டு செல்வது அல்ல.

இப்போது சனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசு மீண்டும் விறுவிறுப்பு மிக்க சமாதான முயற்சி எனும் காட்சியை ஆரம்பிப்பதும் இத்தகையதே.

ஆனால் இந்த அரசால் முன்னைய அரசுகள் பெற்ற அல்லது முன்னர் சந்திரிகாவே பெற்ற அனு

**சிறி.இந்திரகுமார்.**

கூலங்களைப் போல பேச்சின் சுவாரசியங்களின் பின்னால் சமாதான முயற்சிகளின் மயக்கங்களின் பின்னால் எந்த அனுகூலங்களையும் அவ்வளவு இலகுவாகக் பெற்று கொள்ள முடியாது.

அத்தகையதொரு நிலைப்பாட்டுக்கான அஸ்தமனமானது 1994 ல் சந்திரிகா தலைமையிலான அரசினுடனான சமாதானப் பேச்சுக்கள் முடிவடைந்ததும் இனிமேல் நடைபெறும் சமாதானப் பேச்சுக்களும் மூன்றாம் தரப்பான சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடன்தான் நடைபெறும் என மாவீரர் தின உரையில் தலைவர் பிரபாகரன் அறிவித்ததைத் தொடர்ந்து அது ஆரம்பித்துவிட்டது.

இதன் விளைவுகள்தான் ரணிலால் நினைத்தது போல் எல்லாம் சமாதானப் பேச்சுக்களைக் கொண்டு செல்லவும் முடியவில்லை. சனாதிபதி சந்திரிகா நினைத்தது போல் பேச்சுக்களுக்கு நிபந்தனை போடவும் முடியவில்லை. தமிழர்களின் இனப் பிரச்சினையை அரசுகள் நினைப்பது போல் எல்லாம் கையாள முடியாதவாறு புலிகள் இயக்கம் தமிழர் பிரச்சினையை ஒரு சர்வதேச பிரச்சினையாக்கிவிட்டார்கள்.

இது ரணில் நாடுகள் தோறும் அலைந்து திரிந்து ஏற்படுத்த முயன்ற சர்வதேச வலைப் பின்னலைப்போல இடைநடுவில் நழுவிப்போகக்கூடியதல்ல. இதனைப் புலிகள் இந்த நான்கு ஆண்டுகால சமாதான முயற் சிகளின் போதான காலப்பகுதியை புலிகள் திட்டமிட்டு பயன்படுத்திக் கொண்டதாகும்.

புலிகளின் இந்த சர்வதேச மயத்தை இலங்கையின் ஆட்சிபீடம் ஏறும் எந்த அரசும் இலகுவில் தாண்டக் கூடியதொன்றாக இருக்கப்போவதில்லை.

இது நான்கு ஆண்டு சமாதான காலத்தில் ரணிலினதும், சந்திரிகாவினதும் அரசுகள் பெறமுடியாத அல்லது சிங்கள மக்களின் தலைவர்கள் பெறமுடியாது போன ஒரு இராஜதந்திர வெற்றியாகும். இது புலிகளுக்கும் தமிழ் மக்களுக்குமான வெற்றியாகும்.

தமிழரின் இனப்பிரச்சினை வரலாற்றில் தமிழர்களுக்கான தீர்வு என்ற பந்தை ஆட்சியில் எந்த அரசு இருக்கிறதோ அந்த அரசு கையில் வைத்திருப்பதும் இது ஒரு முடிவை நோக்கி நகரும் போது அழுத்தங்கள் என்றும் எதிர்ப்புக்கள் என்றும் எதிர் கட்சியிடம் வீசிவிட்டு பழியை எதிர் கட்சி மீது சுமத்துவதும் பின்னர் எதிர் கட்சி ஆளும் கட்சியாகும் போது எதிர் கட்சியான ஆளும் கட்சியிடம் பிரச்சினையை தள்ளிவிடுவதுமாக மாறிமாறி நழுவி வந்த போக்கை இம்முறை இலங்கையின் அரசியல் போக்கை புலிகள் மாற்றியுள்ளனர்.

அதாவது தமிழரின் பிரச்சினைக்கான தீர்வு என்பதை அதாவது தமிழ் மக்களின் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு என்பதை ஆளும் கட்சியாக இருந்த ஐக்கிய தேசிய கட்சியிடமும் கொடுத்தாகிவிட்டது. எதிர் கட்சியாக இருந்து இப்பொழுது ஆளும் கட்சியாக ஆட்சியைக் கைப்பற்றியிருக்கும் சிறிலங்கா சுதந்திர கட்சியிடமும் கொடுத்தாகி விட்டது.

அதுவும் பிரச்சினைக்கு ஒரு இலக்கை எட்டும் மார்க்கத்தையும் இரண்டு கட்சிகளிடமும் கொடுத்துவிட்டு புலிகள் பார்வையாளராக மாறிவிட்டார்கள். இதில் எந்த சிங்கள அரசுகளானாலும் ஒரு முடிவுக்கு வந்தே ஆகவேண்டும்.

இது ஒரு நுட்பமான தந்திர நகர்வு அதுவும் புலிகளின் நான்காண்டுகால அரசியல் நகர்வு.

இப்பொழுது சனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசு அதில் நழுவுமானால் இந்தப் பிரச்சினைக்கான தீர்வு எனும் பந்தை இரண்டு கட்சிகளுக்கும் அப்பால் வெளியில் எறிந்து விட வேண்டிய ஒரு கட்டாய நிலை சிங்கள அரசுகளுக்கு தோன்றவே செய்யும்.

இத்தகைய ஒரு நிலைதான் தமிழர்களுக்கு அதிக நன்மையை ஏற்படுத்தும்.

மாறாகப்பந்தை வெளியில் எறியாமல் மூன்றாவது புதிய அணியிடம் தள்ளிவிடுவதானாலும் அதற்கு பலம்மிக்க மூன்றாவது சக்தியாக உடனடியாக இலங்கையின் அரசுபீடத்தை பிடிக்கக்கூடிய எந்தத் கட்சியும் வலுமிக்கதாக இல்லை அவ்வாறு தோன்றவேண்டுமாயின் அதற்கு நீண்டகாலம் இலங்கையில் காத்திருக்கவேண்டும். ஆனால் அதற்கு புலிகளாயினும் சரி, சர்வதேச சமூகமாயினும் சரி அதுவரை பொறுத்திருக்கப்போவதில்லை.

இத்தகையதொரு நிலையை புலிகள் இயக்கம் இரண்டு பிரதான கட்சிகளையுமே சமாதான பேச்சு எனும் ஒருமைதானத்தில் ஒரு குறிப்பிட்டகால எல்லைக்குள் கொண்டு வந்ததுதான். ஒரு முக்கிய காரணம். ஆகவே உண்மையில் இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் இரண்டு பிரதான கட்சிகளுமே புலிகள்தான் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என ஏற்றுக்கொள்ளவேண்டிய ஒருகட்டாய நிலையை தோற்று வித்தது. அவ்வாறே தமிழ் மக்களின் பிரச்சினையை ஒரு உறுதியான தீர்வை நோக்கியும் தள்ளவே செய்யும்.

நேர் நோக்கு

# சமாதானத்துக்கு விரோதமான ஜே.வி.பி யின் முயற்சி

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளில் விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தைக் குறைக்கும் வகையில், அரசாங்கத்திற்கு அழுத்தங்களைப் போடஜே.வி.பி தீர்மானித்திருப்பதாகச்செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுதொடர்பாக ஜே.வி.பி யின் 9 மத்திய குழு உறுப்பினர்கள் கூடி ஆராய்ந் துள்ளதாகவும் இந்த அழுத்தம் போடும் குழுவில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, மற்றும் பொது சன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் தினேஸ்குண வர்த்தனவின் மக்கள் ஐக்கிய விடுதலை முன்னணி, பேரியல் அஷ்ரப் தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணி ஏனைய இடது சாரிக்கட்சிகள், ஈ.பி.டி.பி முஸ்லிம் காங்கிரஸ் என்ப வற்றிடமிருந்து ஆதரவுதிரட்டப் போவதாகவும் ஜே.வி.பி கூறியி ருக்கிறது.

கடந்த வாரத்தில் ஜே.வி.பி வெளியிட்ட கருத்துக்கள் அது சமாதான நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போட வில்லை எனக் காட்ட முயன்றது ஆனால், இப்போது சமாதான நடவடிக்கைகளுக்கு எதிரான அழுத்தக்குழுவொன்றை அமைக்கும் அதன் திட்டம் வெளிப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே ஜே.வி.பி இச் சமாதான முயற்சிகளுக்கு ஆதர வான அமைப்பல்ல என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். அது தமிழ் மக்களின் பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலமாயின் உள்ளூராட்சிச் சபைகள் மட்டத்தில் தீர்த்து வைக்கும் நோக்கத்தைக்கொண்டிருக்கிறது. அதே வேளை தமிழர்கள் போராட்டம் நடத்தினால் அதற்கு இராணுவ வழிமுறைகளை தான் வைத்திருப்பதாகக் கூறிவருகிறது.

ஆனால் இன்று அது ஆட்சியில் பங்காளியாக இருக்கின்ற காரணத்தினாலும் களயதார்த்தம் காரணமாகவும் சமாதான நடவடிக்கைகளுக்குத் தான் எதிரியில்லை எனக் காட்ட வேண்டிய தேவையுள்ளது.

இன்றைய சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடனான பேச்சுக்களிலிருந்து விலகுவது என்பதும் அதற்குக் கடினமான விடயம். அது நிதி உள்ளிட்டு பல்வேறு தேவைகளில் பாதிப்பை ஏற்படுத்தும்.

எனவே பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பித்து நடத்துவதெனில் அதற்கு முன்னர் இவர்கள் எந்த நடவடிக்கைகளை யெல்லாம் கடுமையாக எதிர்த்தார்களோ அதனை நடைமுறைப்படுத்தவேண்டிய நிலையிலேயே அவர்கள் உள்ளனர். இதன் காரணமாக அவர்கள் பெரும் மனச் சங்கடத்துக்கு ஆளாகியுள் ளனர்.

ஒன்று அவர்களை வளர்த்துவிட்ட இனவாதத்தை/இன வாதசக்திகளை அவர்கள் கைவிட வேண்டிய நிலை உள்ளது. அது நீண்டகால நோக்கில் அவர்களுக்குப் பாதகமான நிலையை உருவாக்கும். அதேவேளை கடந்த காலத்தில் இவர்கள் பேசிய பேச்சுக்களால் உசுப்பிவிடப்பட்ட ஜே.வி.பி உறுப்பினர்கள் இன வாதிகளின் கோபத்திற்கு ஆளாகி அந்த அணி வேறு இனவாதசக்தி களைத் தேடி இணைந்து விடுமோ? என்ற அச்சம் காரணமாக அவ்வாறானவர்களை ஒரு வழிப்படுத்த வேண்டிய தேவையும் உள்ளது.

இரண்டாவதாக இடைக்கால தன்னாட்சி முறை குறித்து பேச்சுக்கள் ஆரம்பிக்கவேண்டிய நிலை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. இதனை அனுமதிக்க முடியாத நிலையிலும் நேரடியாக எதிர்க்கமுடியாத நிலையிலும் ஜே.வி.பி. இவ்வாறு அழுத்தம் ஒன்றை அமைக்கமுயன்று வருகிறது.



இந்த முயற்சிக்கு ஆதரவு தெரிவிக்கக் கூடிய பல சக்திகள் தென்னிலங்கையில் உள்ளன. தேசப்பற்றாளர் முன்னணியில் முன்னின்ற பிக்குகள் இப்பொழுது ஹெல உறுமயவில் இணைந்து நாடாளுமன்ற உறுப்பினர்களாகியுள்ளனர். அத்துடன் மேலும் பல தீவிரவாதப் பிக்குகள் சிறிலங்காவில் உள்ளனர். அதேவேளை மக்கள் ஐக்கிய முன்னணி ஈ.பி.டி.பி உட்பட சில கட்சிகளும் இந்த அமைப்பில் இணைந்து செயற்பட முன்வரக்கூடும்.

இவ்வாறானதொரு அமைப்பு பலம் பெறுவது சனாதிபதி சந்திரிகாவுக்கு கூட விருப்பமளிப் பதாக இருக்கலாம். ஏனெனில் இனப்பிரச்சினைக்கு சமாதானத்தீர்வு காணத் தமக்கு விருப்பம் இருப்பது போலவும் சிறுபான்மை அரசாங்கமாக உள்ள நிலையில் தம்மால் பேச்சு வார்த்தைகளைத் தொடர முடியாத அல்லது இணக்கப்பாடு கண்ட விடயங்களை அமுல் படுத்த முடியாதுள் ளதாக காட்டுவதற்கு உதவலாம்.

இவ்வாறான செயல் முறைகள் எல்லாம் ஜே.வி.பி க்குப் புதியவையாக இருக்கலாம். ஆனால் தமிழ் மக்களுக்கு இவையெல்லாம் பழைய பாடங்களே.

ஆனால் சமாதானத் தீர்வொன்றை காண்பதற்கு முயன்று கொண்டிருக்கும் சர்வதேச சமூகம் சிங்கள ஆட்சியாளர்களின் இக்கபட நாடகத்தைப் புரிந்துகொண்டு அதற்கு எதிராக முளையிலேயே நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தமிழ்மக்களைப் பொறுத்தவரை ஒரே நிலைப்பாட்டுடன் சமாதானத் தீர்வொன்றை நோக்கி உறுதியாக நிற்பதுடன் அதற்கு சர்வதேச சமூகம் எடுக்கும் முயற்சிகளுக்கு உறுதுணையாகவும் இருந்து வருகின்றனர். இதனைப்பயன்படுத்தி கொள்வது இனவாதிகளின் பொறுப்பு இல்லாவிடின் சமாதானத் தீர்வை வழங்கினால் என்ன நடக்கும் எனக் கூறித்திரிகின்றாரோ அதுவே வேறு வழிமுறைகளில் ஏற்படும் நிலை உருவாவதைத் தடுக்கமுடியாது போய்விடும்.

**வேலவன்**

# இந்தியாவின் கொள்கையில் மாற்றம் ஏற்படுமா....?

இந்தியாவில் நாடாளுமன்றத்தேர்தல் நடந்து முடிந்ததில் பாரதீய ஜனதாக் கட்சி தோல்வியைதழுவி காங்கிரஸ் வெற்றிபெற்றுள்ளது.

இந்தியாவின் 539 தொகுதிகளுக்கான தேர்தலில் 217 இடங்களை காங்கிரஸ் கைப்பற்றி நாடாளுமன்றின் பெரும்பான்மையை தனதாக்கி கொண்டுள்ளது.

இந்த நிலையில் இலங்கையின் அயல்நாடு என்ற வகையிலும் இந்து சமுத்திர பிராந்தியத்தில் ஒரு முக்கியமான நாடு என்றவகையிலும் இந்தியாவில் நிகழும் ஆட்சி மாற்றம் இலங்கையின் அரசியலிலும் செல்வாக்குச் செலுத்தவே செய்யும்.

ஆனால் இந்தியாவில் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையில் முன்னர் காங்கிரஸ் தலைமையிலான அரசு ஒரு வித அணுகுமுறையினையும், பாரதீய ஜனதாக் கட்சி தலைமையிலான அரசு இன்னொரு விதமான அணுகுமுறையினையும் கடைப் பிடித்து வந்தன.

இதற்கு இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையானது பாரதீய ஜனதா கட்சித் தலைமையிலான அரசுக் காலத்தில் மாறியதற்கமையவே இது நடைபெற்றன.

ஆனால் இப்போது இந்தியாவில் ஆட்சி மாற்றம் நிகழ்ந்திருக்கிறதேயொழிய அதன் வெளியுறவுக் கொள்கையில் எந்த மாற்றமும் நிகழ்ந்துவிட்டதாக நாம் கருதிவிடக் கூடாது.

இந்தியாவின் இலங்கை தொடர்பான ஒரு மாற்றம் நிகழ வேண்டிய தேவை மட்டும் உள்ளது என்பது மெய்.

ஏனென்றால் இலங்கையில் தொடரப்படும் சமாதான முயற்சிகள் மூலம் ஒரு தீர்வை எட்டுவதற்கு புலிகள் இயக்கம் பற்றுறுதியுடன் செயற்பட்டு வருகின்றது.

இது தீர்க்கப்படாத ஈழத்தமிழ் மக்களின் நீண்ட பிரச்சினைக்கான ஒரு முன்னேற்றமான ஒரு முயற்சியாகும்.

அத்தோடு ஈழத்தமிழ் மக்களுக்குக் கிடைக்கும் உருப்படியான தீர்வு என்பது இந்து சமுத்திர பிராந்தியத்திலும் ஒரு அமைதியைக் கொண்டு வருவதற்கான முன்னோடி முன்னுதாரணமாக நிச்சயம் திகழும். இது உலக பொருளாதார மாற்றத்தில் இந்தியாவுக்கும் அதிக இலாபங்களை ஈட்டிக் கொடுக்கவே செய்யும்.

இதற்கு இந்தியா தமிழ் மக்கள் தொடர்பான தனது கொள்கையில் மாற்றத்தைக் கொண்டு வந்து தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒரு தீர்வினை எட்ட தனது விசுவாசமான பங்களிப்பை வழங்கவேண்டும்.

இதற்கு தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாகவும், அவர்களுக்கு வழங்கப்படும் தீர்வினால் இந்தியாவுக்கு பாதகம் ஏற்பட்டுவிடும் என்ற தேவையற்ற கற்பனை ஐயங்களை நீக்குதல் வேண்டும்.

ஈழத்தமிழ் மக்கள் அவர்களின் வரலாற்று வாழ்நிலத்தில் ஒரு உண்மையானதும் உருப்படியானதுமான ஒரு தீர்வினை பெற்றுக் கொள்வதற்காகவே போராடி வருகிறார்கள்.



இந்தியாவுடன் வரலாற்று ரீதியாகவும் சரி, நிகழ்கால அரசியல் நகர்விலும் சரி நட்பு சக்திகளாக திகழக்கூடியவர்கள் ஈழத்தமிழ் மக்கள் மட்டுமே.

இதனை இந்தியா உணர்ந்து செயற்பட வேண்டும் என்றே ஈழத் தமிழ் மக்கள் விரும்புகின்றனர்.

இந்தியாவை இலங்கை இனப்பிரச்சினையில் பங்குபற்றுமாறு சிறிலங்கா அரசு கோரினாலும் அது ஈழத்தமிழ் மக்களுடன் இந்தியாவின் உறவை மேலும் சீர்கெடச்செய்யும் கபட நோக்கமே அன்றி வேறில்லை.

இந்த நிலையில் இந்தியாவில் ஒரு தேர்தல் மூலம் ஆட்சி எவ்வாறு மாறியிருக்கிறதோ அதே போன்று இலங்கையிலும் ஒரு தேர்தல் மூலம் ஆட்சி மாற்றம் நடந்துள்ளதுடன் அந்த அரசும் சமாதான முயற்சியினை முன் தொடரவிருப்பு காட்டுகிறது. இதற்கு இந்தியா ஈழத்தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கா தனது ஆதரவினை இதய சுத்தியுடன் வழங்க வேண்டும் அதற்கு இந்தத் தேர்தலில் ஈழத்தமிழ் மக்கள் புலிகளுக்கு ஆதரவாக வழங்கியிருக்கும் தேர்தல் முடிவினை கவனத்தில் கொள்ளவேண்டும் என தமிழ் மக்கள் விரும்புகின்றனர் என்பது முக்கியமானது.

**நக்கீரர்**

# கணனிக் கற்கைகள்

# கணனிப்பயிற்சி மையங்கள்

## பயில்வோரின் பரிதாப நிலை

வெளிவாசல்பாலன்

பத்துவயதுடைய ஒரு பிள்ளை கணனியில் வெகு சுவாரஷ்யமாக விளையாடிக் கொண்டிருக்கிறது. அங்கே வந்திருந்த இன்னொருவர் கணனியில் சோதிடம் பார்ப்பதற்கு காத்திருக்கிறார். ஆனால் பிள்ளையோ தன் முழுக்கவனத்தையும் வைத்து அதில் விளையாடுகிறது. இன்னொருவர் Email லில் தகவல் அனுப்ப வந்திருக்கிறார். இது கணனிமையமொன்றில் 10 நிமிடத்தில் நடந்தது.

இது கணனி யுகம். எல்லாம் கணனிமயம். சிறுபிள்ளைகள் விளையாடுவது தொடக்கம் சோதிடம்பார்ப்பதுவரையில் இன்று மிகச் சாதாரண புழக்கத்துக்கு வந்திருக்கிறது கணனி.

அலுவலகங்களில், பாடசாலைகளில், வங்கிகளில், தகவல் பரிமாறும் நிலையங்களில், ஆவணப் பகுதிகளில், நூலகங்களில், படைத்துறை இடங்களில், ஆராய்ச்சி மையங்களில், வீடுகளில், வியாபார நிலையங்களில், தொடர்பு ஊடகங்களில் என்று எங்குமே கணனி முக்கிய புழக்கத்துக்கு வந்துவிட்டது. அது தவிர்க்கமுடியாததேவையாகியும்விட்டது.

இன்னும் சொல்லப் போனால் பாட்டுக்கேட்க, படம்பார்க்க, தகவல் சேகரிக்க, தகவல் பரிமாற என்று மிகச்சாதாரண விடயங்களையும் கணனியூடாக கூர்மையாகப் பெறலாம் என்பதால் எங்களின் சூழலில் இதற்கு இன்னும் கூடுதல் கவர்ச்சியுண்டு.

அவரவர் கொள்ளளவுக்கு ஏற்றமாதிரி அவரவர் கணனியைப் பயன்படுத்துகிறார்கள். கணனியும் அதற்கெல்லாம் இசைந்துகொடுக்கும் நெகிழ்ச்சியுள்ள ஒரு நல்ல பிள்ளைதான்.

ஒரு இசைஞன் தன்னுடைய இசைச்கோர்வைகளை, புதிய நுட்பங்களை - சுரங்களை, ஆலாபனைகளையெல்லாம் கணனியில் சேமிக்கலாம். கணனியில் சோதித்து புதியவைகளை உருவாக்கலாம்.

இராணுவத்துறையைச் சேர்ந்தவரோ தனக்குத்தேவையான தரவுகளைச் சேர்க்கலாம்; மதிப்பிடலாம். புதிய பரிசோதனைகளை நிகழ்த்திப்பார்க்கலாம்

ஒரு விளையாட்டுப் பிரியர் அதில் விளையாடிக்கொள்ளலாம். அல்லது புதிய 'கேம்'களை எழுதலாம்.

கணக்குத்துறையைச் சேர்ந்தவர் அதில் கணக்குகளைச் செய்யலாம்; மதிப்பிடலாம்.

ஒரு விஞ்ஞானி கணனியையே இன்று முழுதாக நம்பியிருக்கும் நிலையுண்டு.

இப்படி எல்லாவற்றையும் செய்யும் சர்வ வல்லமை படைத்த கருவியாக உருப்பெற்றிருக்கிறது கணனி. அதேவேளையில் அது பரந்த தளத்தில் அறிமுகமாகியுமிருக்கிறது. அத்துடன் பயன்பாட்டிலும் சாதாரண புழக்கத்துக்குரியதாயுள்ளது. ஆழமும் எளிமையும் கூடிவந்த படைப்பு அது.

இலகுவாகவும் விரைவாகவும் கையாளக்கூடியதாக கணனிகள் இன்று உருவாகிவிட்டன. பல விதங்களில் மிகச்சாதாரணமாக எடுத்துச்செல்லக்கூடிய அளவுக்கு அவற்றின் அளவுகளும் வடிவமைப்பும் உண்டு.

கணனியின்றி இனி வாழ்வில்லை என்னுமளவுக்கு அதன் பயன்பாடு சகலதளங்களிலும் விரிந்துள்ளதை நீங்கள் ஒவ்வொருவரும் அறிவீர்கள்

இது அறிவின்யுகம். விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் மனிதனை இயக்கும் யுகம். இந்த இரண்டையும் எந்தச்சமூகம் முழுதாகப் பெறுகிறதோ, அவற்றை உச்சமாகப் பயன்படுத்துகிறதோ அச்சமூகத்தின் வளர்ச்சிவேகமும் உச்சமாகவே இருக்கும். எந்தசமூகம் விஞ்ஞானத்தையும் தொழில் நுட்பத்தையும் பெறத்தவறுறதோஅல்லது வாய்ப்பில்லாமல் போகிறதோ அது வளர்ச்சி அற்றுவிடுகிறது. அதேவேளைமிகவும் பின்தங்கியும் போகின்றது.

கணனி விஞ்ஞானத்தின் சிறந்த விளைபொருள் தொழில் நுட்பத்தின் உச்சமான படைப்பு.

இந்த அடையாளங்களெல்லாம் இன்று கணனிக்கான கேள்வியைக் கூட்டியிருக்கின்றன. இதனால், கணனிக் கல்விக்கான ஈடுபாடும் அவசியமும்கூட கூடியுள்ளது.

வெளியே கணனிப் பயன்படுத்துகை அதிகரிக்க அதிகரிக்க கணனித் தேர்ச்சியாளர்களும் கூடியே இருக்கவேண்டும். கணனித்தேர்ச்சி மட்டும் உயர்ந்தே இருக்க வேண்டும். ஆனால் இதற்கான வாய்ப்புவீதம் அரசசார்கல்வியில் மிகக்குறைவு.





அதிலும் தமிழ்ப்பகுதிகளில் இல்லை என்னும் அளவுக்கே நிலைமை அங்கீகார மளிக்கப்பட்ட, அரசு சார்பான கணனிக்கல்வி பல்கலைக் கழகம் வரை அடிப்படையாக உண்டு என்று வாதிட்டாலும் யதார்த்தத்தில் அது சிறுபுள்ளி அளவுதான்.

இதனால் கணனிக் கற்கையை வெளியேயுள்ள தனியார் நிறுவனங்களும் அரசு சாராத அமைப்புகளும்தான் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. இந்தநிலைமையைதமக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் மேற்படி தரப்புகள் கணனிக் கல்விக்கான ஏற்பாடுகளை முற்று முழுதாக வணிகநோக்கிலேயே செய்திருக்கின்றன. 'கடும்பிடி' என்று சொல்லக்கூடியமாதிரியே இந்த நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளின் விதிமுறைகளும் நடைமுறைகளுமிருக்கின்றன.

என்னதான், எப்படித்தானிருந்தாலும் தவிர்க்கமுடியாமல், வேறுவழியின்றி இந்த நிறுவனங்களில் தான் கணனியைப் படிக்கவும் வேண்டியிருக்கிறது பலருக்கும்.

கணனிஇயக்குநர் என்பது கவர்ச்சிக்குரியதொழிலாகவும் பன்முகப்பட்டநிறுவனங்களிலும் வேலை வாய்ப்புக்கான வசதிகள், சந்தர்ப்பங்கள் இருப்பதாலும் என்ன சிரமமென்றாலும், எவ்வளவுதான் கஷ்ரம் என்றாலும் எப்படியாவது எங்காவது படித்துவிடுவது என்றிருக்கும் பலரது நிலை இந்த நிறுவனங்களுக்குப் பெரும் சாதகமாயிருக்கிறது.

இந்த வாய்ப்பை உச்சமாகப்பயன்படுத்திக்கொள்வது என்றே பல இடங்களிலும் இயங்குகின்ற கணனிப்பயிற்சி மையங்கள் இருக்கின்றன.

இந்தப் பயிற்சி மையங்களில் பலதுறைகள்பற்றி படிப்பிக்கப்பட்டாலும் அங்கே படித்துவிட்டு வெளியே வருகின்ற பெரும்பாலானவர்கள் கணனியைதிரும்ப இயக்கும் ஆற்றலுடன் வருவதில்லை. பலருக்கு கணனிபற்றிய போதிய அறிவோ தனியாக ஒரு கணனியை இயக்கக்கூடிய வல்லமையோ இருப்பதில்லை. ஆனால் அவர்களிடம் கணனிபயின்றதற்கான சான்றிதழ்கள் இருக்கும். அந்தந்தப் பாடத்துறைகளில் தேர்வுக்குத் தோற்றித் தேர்ச்சி பெற்றதற்கான சான்றுப்பத்திரமும் இருக்கும். ஆனால் கணனியில் எந்தப் பயில்கையில் தேர்ச்சி பெற்றார்களோ அதில் அவர்கள் வேலைசெய்யமாட்டார்கள். அதற்குரிய திறனிருக்காது.

பல இடங்களிலும் நேர்முகத்தேர்வுக்கு வருகின்ற கணனியாளர்களிடம் இந்தக்குறைபாட்டை நிரம்பவும் அவதானிக்கலாம்.

O/L,A/L பரீட்சைகளை எழுதிவிட்டு அதில்வரும் இடைப்பட்ட காலத்தில் கணனிபடிக்கும் மாணவர் தொகையே அதிகம். அவர்களுக்கு கணனி என்பது பெருங்கவர்ச்சி மையம். பெற்றோர்களுக்கோ கணனி பற்றியும் கணனிக்கல்விபற்றியும் அறிவிருப்பதில்லை. அத்துடன் அது பற்றிய சிறு அனுபவமும் கிடையாது. ஆனால் பிள்ளைகளின் புதிய துறைக் கற்கைக்கு அவர்கள் ஊக்கமளிக்கிறார்கள்.

மூன்றுமாதம், ஆறுமாதம், ஒன்பதுமாதம், ஒருவருடம் ஒன்றரை வருடம் என்று படித்துவிட்டு வெளியே வருவோரில் சிலர் - குறைந்த வீதத்தினர் மட்டுமே கணனியில் வேலை செய்யக்கூடிய அறிவோடும் தேர்ச்சியோடும் வருகிறார்கள். ஏனையோரிடம் சான்றிதழ்கள் மட்டும்தானிருக்கிறது.

இதில் தனியே, படிப்போரை மட்டும் குற்றம் சொல்லமுடியாது. படிப்பிக்கும் கணனிப்பயிற்சி நிறுவனங்களின் குறைகளும் பொறுப்பற்றதனங்களுமே இதற்குக் காரணம்.

இந்த நிறுவனங்களுக்கு என்ன அடிப்படையில் கணனிப் பயிற்சியை வழங்குவதற்கான அனுமதி வழங்கப்படுகிறது என்பது முதலில் கவனிக்கவேண்டியது.

அடுத்தது, இந்த நிறுவனங்களில் படிப்பிக்கும் கணனி ஆசிரியர்களின் தகுதி?

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் இருந்துதான் திறமைசாலிகள் உருவாகின்றார்கள் என்று இங்கே கூறவில்லை. ஆனாலும் படிப்பிக்கும் ஆசிரியர்களுக்கான அடிப்படைத்தகுதிகள் பல இடங்களிலும் குறைவாகவே உண்டு. அதைக்கவனிக்கவேண்டும்.

சில பயிற்சி நிலையங்களில் முதல் வகுப்பில் படித்தவர்கள் தொடர்ந்து ஒரு தேர்ச்சி நிலைக்கு உயரமுதலே புதிதாக வருவோருக்குப்படிப்பிக்கத்தொடங்கிவிடுகிறார்கள்.

இவையெல்லாம் யாழ்ப்பாணம், வன்னி, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு என்று எங்குமுள்ள பொதுவானதொரு நிலையே.

சில பயிற்சி நிலையங்களில் வாரத்துக்கு ஒரு ஆசிரியர் அல்லது மாதத்துக்கு ஒருவர் என மாறிமாறிப் படிப்பிக்கப்படுகிறது. காரணம் என்னவென்றால், பயிற்சி ஆசிரியருக்கும் அந்த பயிற்சி நிறுவனத்துக்குமிடையிலான உடன்படிக்கை முறிந்துவிட்டிருக்கும். அல்லது அந்த ஆசிரியர் எந்தப் பொறுப்புமின்றி வேறொரு இடத்தில் தொழில்செய்யவோ படிப்பிக்கவோ மேலே படிக்கவோ போய்விடுவார். படிப்போர் பற்றிய அக்கறையாருக்குத்தாணுண்டு?

சில பயிற்சியிடங்களில் முற்பணமாக பெருந்தொகையை வாங்கி விடுகிறார்கள் இதுதான்.

தொண்ணூறு வீதத்துக்கும் மேலான பயிற்சிநிலையங்களின் பொது நடைமுறை. முற்பணத்தை மொத்தமாக வாங்கிவிட்டு வகுப்புக்களை இழுத்தடித்து ஒழுங்காக நடத்தாமல் விடுகின்ற நிலையங்களும் அநேகமுண்டு. யார்தான் இவர்களிடம் விளக்கம் கேட்கமுடியும்? அப்படிக்கேட்டாலும் தமக்குச் சாதகமான சாட்டுகளை நியாயங்களாக்கி சமாளித்துவிடுவார்கள். இல்லையென்று பிடிவாதமாக பிழையைச் சுட்டிக்காட்டினால் தப்புவதற்கு வேறுவழியில்லாமல் "பிழைதான் பொறுத்துக்கொள்ளுங்கள். வகுப்பை ஒழுங்கா நடாத்திமுடிக்க ஒழுங்குகளைச் செய்கிறோம்" என்பார்கள்.

சில நிலையங்கள் ஒழுங்கான முறையில் வகுப்புகளை நடத்தி திறமையாளர்களாக படிப்போரை உருவாக்கி வெளியே விடுகின்றனதான். இது மிகமிக அபூர்வமாயிருக்கிறது. முழு இடங்களிலுமாக கணக்கிட்டால் இரண்டு மூன்று வீதத்துக்குள்தான் இவ்வாறு பொறுப்போடும் நேர்மையோடும் இயங்குவேரைக்காணலாம்.

கணனிக்கல்வியில் செய்முறைகள் முக்கியமானவை, பல இடங்களிலும் கணனியில் பயிற்சி செய்வதற்கான நேரவாய்ப்புகள். சந்தர்ப்பவாய்ப்புகள் குறைவு.

பெயரே 'கணனிப் பயிற்சி நிலையம்' என்று இருக்கும். ஆனால் பயிற்சிக்கான ஏற்பாடுகளும் சந்தர்ப்ப வாய்ப்புகளும்தான் இருப்பதில்லை.

ஒரு நண்பர் சொன்னார், "கணனிப்பயில்கை என்றால்கூட ஓரளவு இதை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால், கணனிப் பயிற்சி நிலையம் என்று போட்டுவிட்டு எப்படிபயிற்சி வழங்காமல் விடுவது?" என்று.

இது முற்றிலும் உண்மையே.

கணனி இயக்குநர் ஒருவர் தேவையென்று நீங்கள் விண்ணப்பம் கொடுத்து அழைத்துப்பாருங்கள் வருவோரில், அழகான சான்றிதழ்களை வைத்திருப்போரில் எத்தனைபேர் வேலைசெய்யும் திறனுடையோராக இருக்கின்றார்கள் என்று.

அப்படியென்றால் இந்தச் சான்றிதழ்களில் பெறுமதி என்ன? அர்த்தமென்ன? இந்தச்சான்றிதழ்கள் வழங்கப்படுவதன் நோக்கமென்ன?

பதிலாக,பயிற்சி நிலையங்களில் மாதக்கணக்காக அலைவேரைவிடவும் தொழில் நிலையங்களில் பயிலும் வாய்ப்புடையோர்கள் மிகவிரைவாகவும் நடைமுறைச் சாத்தியமாக கணனியை இயக்கி வேலை செய்யக்கூடியவராகவும் இருப்பதைக் காணலாம். செயன்முறைத்தேர்ச்சி இவர்களிடம் அதிகமிருக்கும்.

இவ்வாறு இங்கே பயில்பவர்களுக்கு சொல்லிக்கொடுப்போர் அல்லது வழிகாட்டுவோர் தகுதிச் சான்றிதழுடையோரா என்று யாரும் கேட்கலாம். ஆனால் அவர்கள் உதவும் நோக்குடன் இயங்கி, மற்றவரை உயர்த்துகிறாரே தவிர 'பயிற்சி' என்ற அழைப்புடன் இயங்கவில்லை. அத்தகைய பொறுப்பை அவர்கள் எடுத்தவர்களுமல்ல. தங்களால் முடிந்தளவுக்கு அவர்கள் உதவுகிறார்கள். அவ்வளவுதான்.

ஆனால் கணனிப் பயிற்சி மையங்களோ அறிவித்தல் அழைப்புடன் பயில்வோரைச் சேர்க்கின்றன. அதற்குரிய பொறுப்பை எடுக்கின்றன. பயில்வோரிடம் பணம் பெறுகின்றன. அதிலும் முற்பணமாக மொத்தமாக வாங்குகின்றன. பின்னர் பொறுப்பில்லாமல் நடந்துகொள்கின்றன.

இதுமட்டுமன்றி பயிற்சி நிலையங்கள் இயங்குவதற்குரிய இடஅமைவுகளையும் கவனிக்க வேண்டும். பயில்கைக்கான இட அமைவாக இந்த மையங்கள் இருப்பதுகுறைவு. யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை ஆகிய இடங்களில் ஒன்றிரண்டு பயிற்சி மையங்களைத்தவிர, ஏனையவையெல்லாம் சிறுகடை அமைப்புக்குள்தான் பயிற்சியை வழங்குகின்றன: கணனிக்கல்வியைப் போதிக்கின்றன.

அவற்றின் அமைவிடத்தை வைத்தே அவை வழங்கும் பயிற்சித் திறனை மதிப்பிடலாம். குறுகலான சிறுகடை அமைப்புக்குள் மிக்க குறைந்தளவு கணனிகளை வைத்துக்கொண்டு இரண்டுமூன்று அணிகளுக்கு எத்தனை மணிநேரம் நேர்ப்பயிற்சியைக் கொடுக்கமுடியும்? செயன்முறைக்கு உதவமுடியும்?

ஏதாவது ஒரு தீர்மானகரமான தீர்வை சம்மந்தப்பட்டவர்கள் இதற்கு முன்வைக்க வேண்டும். இல்லையேல் இந்தச் சுரண்டல் பெருகுவதைத் தவிர்க்கவும் முடியாது. கணனிபற்றிய தேர்ச்சிக் குறைபாட்டை விரைவாக நீக்கவும் இயலாது.

சகலதரப்பிலும் பொறுப்பும் விரிந்த சிந்தனையும் தேவை.

எப்போது இது சீர்செய்யப்படும் என்றார்கள் படிக்கும்பலர்: படிக்கவிருக்கும் ஏராளமானவர்:

யார்நிற்பார் துணை?

# விசில் ஊதுவது குற்றமா?

அன்பரசு

இருபதாம் நூற்றாண்டின் கடைப் பகுதியில் பாவனைக்கு - வந்த சொற்றொடர்களில் 'விசில் புளோயிங்' (WHISTLE - BLOWING) என்ற ஆங்கிலத் தொடர் மிகவும் பிரசித்தமானது. இதற்கு விசேட அர்த்தம் இருப்பதால் அது பற்றி அறிய வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. ஒரு நிறுவனத்தில் பணியாற்றுபவர் தான் பணியாற்றும் காலத்தில் அவதானித்த அந்த நிறுவனம் செய்த அல்லது செய்து கொண்டிருக்கும் முறைகேடுகளை வெளியுலகிற்கு அம்பலப்படுத்துவதை விசில் புளோயிங் அல்லது விசில் ஊதுதல் என்று வரையறை செய்துள்ளனர். அம்பலப் படுத்துவதற்கு அவர் பணம் பெற்றிருக்கக்கூடாது. தூயபொதுநலன் நோக்கில் செய்யப்பட்டிருக்க வேண்டும். அப்போதுதான் அது உண்மையான விசில் ஊதுதலாகக் கணிப்பிடப்படும்

விசில் ஊதும் இயல்பு மனித வர்க்கத்தின் அடிப்படைக்குணங்களில் ஒன்றாக அமைகின்றது. அடுத்த வீட்டில் என்ன நடக்கின்றது என்ற கூர்மையாக அவதானிக்கும் இயல்புடன் ஆரம்பிக்கும் இந்த வழக்கம் வேலை செய்யும் இடத்திற்கும் சென்றடைகின்றது. வேலைசெய்யும் இடத்தில் நடக்கும் தில்லுமுல்லுகளை அனேகம்பேர் ஆட்சேபிப்பதில்லை. அப்படி ஆட்சேபிப்பதை விசுவாசக் குறைவு அல்லது பெற்ற ஊதியத்திற்குச் செய்யும் துரோகமாக அவர்கள் கருதுகின்றனர். பொறுத்துக்கொண்டிருக்க முடியாத நபர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்களைப் பிரச்சினைகளை உருவாக்குபவர்கள் என்று கண்டிக்கிறார்கள். சமுதாய முன்னேற்றத்திற்கு விசில் ஊதுபவர்கள் செய்யும் உயர்வான பங்களிப்பு பற்றியும் பரவலாக்கப்பேசப்படுகின்றது.

இந்தியாவின் நான்கு தரை எல்லைகளையும் நெடுஞ்சாலை மூலம் இணைக்கும் பாரிய வேலைத்திட்டத்தை வாஜ்பாய் தலைமையிலான பிஜேபி அரசு 1990களில் ஆரம்பித்தது. பல பில்லியன் டொலர்கள் இப்பணிக்கு ஒதுக்கப்பட்டது. 5,850 கி.மீ (3,650 மைல்) நீளமான பிரதான நெடுஞ்சாலைகளும் அதன் கிளைகளும் நாட்டில் பல ஒப்பந்தக்காரர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. அவர்கள் திட்டத்தை நிறைவேற்றும் போது செய்த ஊழல்களும் மோசடிகளும் அவ்வப்போது வெளிவரத் தொடங்கின. ஆனால் இதுவெல்லாம் 'நாட்டின் நடவாத காரியமா' என்று யாவரும் அசட்டையாக இருந்து விட்டனர்.

பீகார் மாநிலத்தில் பிறந்த நெடுஞ்சாலைப்பொறியியலாளரான சத்தியேந்திரா குமார்துபே (SATYENDRA KUMAR DUBEY) பொறுத்திருக்க மறுத்ததோடு விசிலையும் ஊதினார். இவர் பிரதமர் வாஜ்பாயுக்கு எழுதிய கடிதத்தின் மூலம் தனது மாநிலத்தில் நடக்கும் படுமோசமான நெடுஞ்சாலைப் பணிபற்றியும் அது தொடர்பான நிதிமோசடிகள் பற்றிய விவரங்களையும் அந்தரங்மாக வெளிப்படுத்தினார். தனது பெயரை வெளியிடவேண்டாம் என்று பிரதமர் வாஜ்பாயை அவர் மிகவும் பணிவாக வேண்டினார். ஆனால் வேண்டுதலுக்கு மாறாக அவருடைய பெயர் வெளியிடப்பட்டது. இதன் பயனாய் ஆத்திரமடைந்த ஒப்பந்தகாரர்களால் சத்தியேந்திராகுமார்துபே நவம்பர் 1993ல் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்த விவகாரத்தை மூடிமறைக்க வாஜ்பாய் அரசு கடும்முயற்சி எடுத்தது. இந்தியன் எக்ஸ்பிரஸ் என்ற தினசரிப்பத்திரிகை படுகொலை பற்றிய பின்னணி செய்திகளையும், நெடுஞ்சாலைசம்பந்தமான ஊழல்களையும் வெளியிட்டுப் பரபரப்பை ஏற்படுத்தியது. இன்று துபே விசில் ஊதுவோர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக உயர்ந்துள்ளார். பிரித்தானியாவில் இயங்கும் ஊழல் தடுப்புக் கழகம் மார்ச்சு 2004ல் துபேயின் குடும்பத்தினருக்கு தனது அதியுயர் விருதை வழங்கிக் கௌரவித்துள்ளது. தியாகி என்று வர்ணிக்கப்படும் சத்தியேந்திராகுமார் துபேயைப் போன்ற இன்னுமொருவரின் வரலாறும் அண்மையில் கிடைத்துள்ளது.

மோர்டிச்சாய் வனூனு (MORDEC HAI VANUNU) என்ற பெயருடைய அணுசக்தி நிலையப் பணியாளன் இஸ்ரேயில் நாட்டின் தென்பகுதி டெமோனா (DEMONA)அணுசக்தி நிலையம் பற்றிய இரகசியங்களை 1986ல் வெளிப்படுத்தினார். 200வரையிலான அணுகுண்டுகளை இஸ்ரேயில் செய்து வைத்திருப்பதாக அவர் புகைப்படங்களுடன் தகவல் கொடுத்தார். பிரான்சின் உதவியோடு இந்த அணுகுண்டுகள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும் எப்போதும் தாக்குதலுக்குத் தயாரான நிலையில் அவை வைக்கப்பட்டுள்ளன என்றும் வனூனு தெரிவித்தார்.

மோர்டிச்சாய் வனூனு மொறக்கோ நாட்டைச் சேர்ந்த யூத குடும்பத்தைச்சேர்ந்தவர். இவருடைய குடும்பம் அதிதீவிர யூத மதக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் பாரம்பரியத்தைக்கொண்டது. இஸ்ரேயில் நாடு உருவான பின் இக்குடும்பத்தினர் இஸ்ரேயிலுக்குச் சென்று குடியேறினர். வனூனு திருமணமாகாதவர், இவருடைய குடும்பப் பின்னணியை ஆய்வு செய்து யூத உளவுப்படையினர் இஸ்ரேயிலின் இரகசிய அணு நிலையத்தில் பணியாற்ற அனுமதித்தனர். டிமோனா அணுசக்தி நிலையத்தில் பணியாற்றும் போது இவருக்குப் பாரிய மன மாற்றம் ஏற்பட்டது. அரபு மக்களைக் கொல்வதற்காகவே இஸ்ரேலில் அணுகுண்டுகளைத் தயாரிக்கின்றது என்ற எண்ணம் அவர் மனதில் பதிவாகியது.




மோர்டிச்சாய் வனூனு காவலர்களால் அழைத்துச்சென்றபோது

அண்மைத்தகவல்களின்படி 1967 வரையிலான காலப்பகுதியிலேயே இஸ்ரேயில் அணுகுண்டுகளைத் தயாரித்து வைத்துள்ளது. இதற்கு விளக்கம் கூறும்விதத்தில் ஒரு யூத விஞ்ஞானி "நாம் அரபுக்கடலில் மிதக்கும் ஒரு சிறு தீவு. எமது இறுதிப்பாதுகாப்பு ஒழுங்கை நாமே தயாரித்துவைத்திருக்கவேண்டும்" என்று கூறியுள்ளார். இதற்குப் பதில் கூறும் விதமாக வனூனுவின் வாதம் பின்வருமாறு அமைகின்றது "ஒரு அரபு நாட்டிலாவது அணுகுண்டுகள் இல்லை. உங்களுக்கு ஏன் அது தேவைப்படுகின்றது, அதுகும் நூற்றுக்கணக்காக"

1985ஆம் ஆண்டில் வனூனுவின் பணிநிலை தேவையற்றதானபோது அவர் இளைப்பாறுவதற்கு அனுமதிக்கப்பட்டார். இதைத்தொடர்ந்து அவர் அவுஸ்திரேலியா சென்று அகதி அந்தஸ்துடன் அங்குவாழ்ந்தார். அடுத்த வருடம் அவர் லண்டன் பயணமானார். இங்குதான் அவருடைய வாழ்க்கை திசை திரும்பி மீள முடியாத துயரம் சென்றது. டிமோனா அணுசக்தி நிலையத்தில் பணியாற்றும்போது அனுமதியின்றி இரகசியமாக பிடித்த புகைப்படங்களோடு அவர் உலகப் பிரசித்தி பெற்ற லண்டன் ரைம்ஸ் பத்திரிகை அலுவலகம் சென்று இஸ்ரேயிலின் அணுத்திட்டங்கள் பற்றிய தகவலைச் வெளியுலகிற்கு வெளிப்படுத்தினார்.

மொசாட் எனப்படும் இஸ்ரேயில் உளவுப்படை அவரைக் கைதுசெய்து இஸ்ரேயில் கொண்டு வருவதற்குத் திட்டம் தீட்டிய போது பிரிட்டிஷ் சட்டம் குறுக்கே நின்றது. இப்படியான ஆட்கடத்தல் நடவடிக்கைகளுக்கு எந்த நாடும் ஒத்துழைப்பு வழங்கமாட்டாது என்பதை நன்கு அறிந்த யூதர்கள் பிறிதோர் உபாயத்தைக் கையாண்டார்கள். சிஐஏ, மொசாட் ஆகியவற்றின் உளவுப் பணியாளரான சின்டி என்ற பேரழகி அமெரிக்காவில் இருந்து வரவழைக்கப்பட்டாள். அவள் வனூனுவைக் குறிவைத்துச்செயற்பட ஆரம்பித்தாள். அப்பாவியான அவர் அவள் விரித்தவலையில் மாட்டிக்கொண்டார்.

இத்தாலித்தலைநகர் ரோமுக்கு உல்லாசப் பயணம் செல்வதற்கு அவள் ஒழுங்குசெய்த போது வனூனு மிகவும் மகிழ்ச்சியாக அதற்கும் சம்மதித்தார். ரோம் சென்றவுடன் சின்டியின் சகாக்கள் வனூனுவுக்கு மயக்க ஊசி ஏற்றினார்கள். பின்பு மரப்பெட்டியில் அடைத்து விமானம் மூலம் அவர் இஸ்ரேயில் கொண்டு செலலப்பட்டார். பெண்களைப்பயன்படுத்தி ஆட்கடத்தல் செய்வதை ஆங்கிலத்தில் 'தேன்பானை நடவடிக்கை' (HONEY POT OPERATION) என்று அழைப்பார்கள். சின்டி ஒரு தேன் பானை, வனூனு அதில் வீழ்ந்த இலையான் என்று பொருள்.



வனூனு விடுதலை செய்யப்பட்டபோது

தேசத் துரோகக் குற்றத்திற்காக நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட வனூனுவுக்கு பதினெட்டுவருடக்கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டது. இதில் பத்து வருடங்களுக்கு அவர் 3x2 மீற்றர் விஸ்தீரணமுள்ள தனிமைச் சிறை அறையில் அடைத்துவைக்கப்பட்டார். இந்த அறைக்கு யன்னல்கிடையாது. இரவு பகலாக ரியூப் லைற் எரிந்துகொண்டிருக்கும், பொறிக் கதவு மூலம் குறைந்தளவு உணவு அவருக்கு வழங்கப்பட்டது. எனினும் அவருடைய மன உறுதியை குலைக்க இஸ்ரேலிய அரசினால் முடியவில்லை.

பத்து வருடம் முடிந்தபின் அவர் அடிப்படைவசதிகூடிய இன்னுமோர் அறைக்கு மாற்றப்பட்டார். அவருடைய சிறைவாச விவகாரம் வெளியுலகிற்கு எட்டியதால் இந்த ஒழுங்குசெய்யப்பட்டது. தீவிரயூத மதத்தினரான அவருடைய குடும்பத்தினர் அவரைப்பகிரங்கமாக நிராகரித்து உறவு முறையை முறித்துக் கொண்டனர். அவருடைய ஆண்சகோதரரான மையர் மாத்திரம் அவரைச்சிறையில் பார்க்கச் சென்றார். இஸ்ரேயில் நாட்டில் அவருக்கு எதிரான நிலைப்பாடு வலுத்த அதேகாலத்தில் அவருக்கு ஆதரவான அபிப்பிராயங்களும் எழுந்தன. அவரைத் தேசத்துரோகி என்று தூற்றியவர்கள் தான் எண்ணிக்கையில் கூடுதலானவர்களாகக்காணப்பட்டனர். இவருடைய வரலாற்றைத் தாங்கிய மேடை நாடகம் இஸ்ரேயிலின் பலபாகங்களில் மேடை ஏற்றப்பட்டது. ஆதரவாளர்களால் மிகவும் இரகசியமாகப் பதிவு செய்யப்பட்ட வனூனுவின் குரல் இந்த மேடை நாடகங்களில் ஒலிபரப்பப்பட்டது.

இதற்கிடையில் தான் யூதக்குடியுரிமையையும் யூதமதத்தையும் கைவிடுவதாக அவர் சிறைச்சாலையில் இருந்து அறிவித்தார். தான் கிறிஸ்தவமதத்திற்கு மாறிவிட்டதாகவும் அவர் அறிவித்தல் கொடுத்தார். 18 வருட சிறைவாசம் முடிந்து அவர் 21 ஏப்ரல் 2004ஆம் நாள் நிபந்தனையுடன் விடுதலை செய்யப்பட்டார். அவர் சிறைச்சாலைக்கு வெளியே வந்தபோது அவருடைய அபிமானிகள் மகத்தான வரவேற்பு அளித்தனர். மன உறுதி சற்றேனும் தளராத வனூனு பலத்த குரலில் சிறைவாயிலில் நின்று இஸ்ரேயிலைக் கண்டித்தார். விடுதலை ஆகும்போது அவர்மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள்: இஸ்ரேலில் நாட்டைவிட்டு வெளியேற முடியாது. அந்நியநாட்டவர்களோடு பேசக்கூடாது. பத்திரிகையாளர்களுக்கு செவ்விவழங்கக்கூடாது.

இஸ்ரேயில் அணு ஆயுதத்தடைச்சட்டத்தில் ஒப்பமிடாத நாடு, 1968ல் நிறைவேற்றப்பட்ட அணு ஆயுதப் பரவல் தடைச் சட்டம் (NVCLEAR NON - PROLIFERATION TREATY) அமெரிக்காவால் மிகவும் இறுக்கமாக அமுலாக்கப்படுகின்றது. லிபியா, ஈரான், ஈராக்போன்ற மத்தியகிழக்கு முஸ்லிம் நாடுகள்மீது ஐநாவின் அணுசக்தி முகவரகம் ஊடாக (IAEA) பல்வேறு அழுத்தங்களை அமெரிக்கா பிரயோகிக்கின்றது. இஸ்ரேயில் மீது ஏதோவொரு நடவடிக்கையையும் ஐநாவின் அணுசக்தி முகவரகம் எடுக்காதிருக்கிறது. உலகின் ஆறாவது மிகப்பெரிய அணுசக்திநாடு என்று இஸ்ரேலில் மதிப்பிடப்படுகின்றது. இன்று 49 வயதினராகவிருக்கும் மோர்டிச்சாய் வனூனு மாத்திரம் தொடர்ந்தும் தண்டிக்கப்படுகிறார். விசில் ஊதுவது சுகம், அதற்கான தண்டனையைத் தாங்குவதுதான் கடினம். மனவுறுதி உள்ளோர் துணிந்து ஊதலாம்.

# வகுப்பறையில் சிறுவர்கள் பாதுகாக்கப்படவேண்டும்



சிறார்களுக்கான உடலியல் பாதுகாப்பு பற்றிய சிந்தனையும் அறிவூட்டலும், எமது சூழலிலுள்ள ஆரம்ப வகுப்பு "(Primary)"ஆசிரியர்களுக்கு மிக அவசியமாக்கப்படுகின்றது. ஏனெனில் பாரம்பரிய கற்றலுக்குத் தண்டனை என்ற முறைமையிலிருந்து இன்னும் அதிகமான ஆசிரியர்கள் விடுபட்டதாகத்தெரியவில்லை.

குறிப்பாக 1 ஆம் வகுப்பு தொடக்கம் 6 ஆம் வகுப்பு வரையான பச்சிளம் சிறார்கள், ஆசிரியர்களை நம்பி விடப்படுகையில் அங்கு தாயன்பு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் படித்தவர் படியாதவர் என்ற பேதங்களுக்கப்பால் ஆசிரியர்களை பெற்றோர் காருண்யவான்களாக கருதுகிறார்கள் மாறாக தண்டனைகளை வழங்கி இயல்பான ஊக்கத்தைக் கெடுப்பதாக வகுப்பறைக் கற்பித்தல்முறை எமது சூழலில் அமைந்துவிடக்கூடாது.

ஆரம்பப் பிரிவில் கற்பிக்கும் சில ஆசிரியர்களால் வழங்கும் தண்டனைகளுள் ஒன்று தலையில் அடித்தல் குட்டுதல் இதனை அவர்கள் உடனடியாகக் கைவிடவேண்டும்.

அப்பாவியான குழந்தைகள் மீது ஊமைவன்முறை ஒரு புறமிருக்க தலையில் குட்டுவதால் ஏற்படும் மூளை விருத்திப்பாதிப்பும் பெரிய அளவில் ஏற்படுகிறது.

தலையில் குட்டப்படும், அடிக்கப்படும் ஒரு சிறுவன் அல்லது சிறுமிக்கு கல்வியில் மந்தநிலை ஏற்பட்டுவிடுவதாக பேராசிரியர் "நிர்க்கலம்" குறிப்பிட்டுள்ளார். இங்கிலாந்துப் பேராசிரியரான இவர் உலகம் பூராக்வுமுள்ள குழந்தைகளை ஆசிரியர்களின் இத்தண்டனை முறையிலிருந்து உடனடியாகக் காப்பற்றவேண்டுமென அறைகூவல் விடுத்துள்ளார்.

குளோனிங் முறையில் புத்திசாலிகளை உருவாக்க உலகத்தார் நினைக்கும் இவ்வேலையில் புத்திசாலிக் குழந்தைகளை திருத்துவதற்காக குட்டுவது, அடிப்பது என்பவற்றால் அவர்களின் இயல்பான வளர்ச்சி பாதிக்கப்படுகிறது.

எமது பகுதி கல்வி நிறுவனங்கள் தமது ஆசிரியர்கட்கு பிள்ளையின் தலையில் ஏற்படுத்தப்படும் தாக்கத்தால் மெல்லக் கற்போரை உருவாக்காது தக்கன செய்தல் வேண்டும்.

சிறுவர் உரிமைசாசனங்கள் பலவாறு தண்டனை தடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்த அது செவிடன் காதில் ஊதப்பட்ட சங்காகவே இருக்கிறது.

வகுப்பறையில் "எழும்புகிற பிள்ளையை குட்டு" என்ற ஆசிரியரின் குரலுக்குப் பின்னால் மறைந்திருப்பது "அந்தப் பிள்ளையின் ஆராய்வூக்கத்தை (Queriosity) கருக்கிவிடு என்ற அர்த்தமே, அதை விட தண்டிக்கும் பிள்ளையின் எண்ணத்தில் அடக்கு முறைச் சிந்தனை விதைக்கப்பட்டும் விடுகிறதல்லவா..?

ஒழுங்காக அனுப்பப்படும் குழந்தையின் போக்கை இத்தகைய தண்டனைகள் மாற்றிவிடலாம். எனவே வகுப்பறைச் செயற்பாடுகளை சகல ஆசிரியர்களும் புரிந்து.

*பிள்ளையின் ஆராய்வூக்கத்தை அங்கீகரித்தல்

*பிள்ளையின் உடலியல் செயற்பாட்டைப் பாதுகாத்தல்.

*பிள்ளையின் கௌரவத்தை காத்தல்.

*பிள்ளைக்கு சமூகத்தையும், மனித இயல்புகளையும் ஏற்றுச் செயற்பட வழிவகுத்தல் ஆகிய அடிப்படையில் கல்வியூட்டுதல் வேண்டும்.

பெரும்பாலும், ஆராய்வூக்கத்தின் வெளிப்பாடே குழப்படி எனப் புலப்படுகிறது இதைப்புரியவேண்டும்.

என்சார் உடம்பிற்கு சிரசே பிரதானம் என்பர்.பொதுவாக எமது சூழலில் உள்ள முன்பள்ளிகளில் சில நடவடிக்கைகளும் மன நெருடலைத் தருகிறது.

முன்பள்ளிகளில் சமூகத்திலுள்ள பல்வேறு வகுப்பினர்களிலிருந்தும் வேறுபட்ட பிள்ளைகள் வருகிறார்கள். ஆனால் ஆசிரியர்கள் தம்மையறியாமல் மேலோர், கீழோர் பார்க்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு விடக்கூடாது.

சமூகத்திலுள்ள ஒரு உயர் தொழில் பார்க்கும் பிள்ளைகளையும் ஒருவிதமாகவும் ஏனைய பிள்ளைகளை இன்னொரு விதமாகவும் பார்க்கும் நிலைமுற்றாகக் கலையப் படவேண்டும். இது பிள்ளைகளுக்கிடையிலான உரை யாடல்களாக இருந்தாலும் சரி பிள்ளைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையிலான உரையாடல்களாக இருந்தாலும்சரி கனிவோடும் அக்கறையோடும் அமைதல் வேண்டும். எந்த வகையிலும் பிள்ளைகளின் மனதில் பாரபட்சம் காட்டப்படுகிறதென்ற ஒரு ஐயப்பாடான மனநிலை தோன்றுவதற்கு ஆசிரியர்கள் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது.

எனவே எல்லாப்பெற்றோரையும், எல்லாப்பிள்ளைகளையும் சமமாகக் கையாளும் விதத்தை ஆசிரியர்கள் கற்றுக்கொள்ளவேண்டியது மிக அவசியமானது.

பாடசாலை ஆரம்பப் பிரிவினர் வீட்டில் கைவினைப் பொருட்களை செய்துவரச் செய்வதிலும் பல்வேறு உள நெருக்கடிக்கு பெற்றோரும் பிள்ளைகளும் ஆளாகிறார்கள்.

எனவே செய்துகாட்டல் மூலம் திறனை வளர்க்க மூலப் பொருட்களை பிள்ளைகளைக் கொண்டு வரச்செய்து வகுப்பின் பிள்ளைகளைக் கொண்டு பொருட்களைச் செய்ய வழிகாட்டவேண்டும்.

எனவே குழந்தைகளை கையாளும் புதிய சூழல் அமைவு ஒன்றை ஆசிரியர்கள் கட்டி எழுப்ப வேண்டியுள்ளது.

சிறுவர் உரிமை பற்றிய சாசனங்களில் பின்வரும் எண்ணக்கரு முன்னுரிமையை பெறுகிறது.

*-ஒவ்வொரு பிள்ளையையும் மதித்துக் கனம் பண்ணுதல்.

* - சிறுவர்களின் கருத்துக்களுக்கு செவிமடுத்தல்.

* - எல்லாப்பிள்ளைகளுக்கும் நம்பிக்கையையும் வாய்ப்பையும் வழங்குதல்.

குழந்தைகள் சிறுவர்கள் நலன்கள் எவை எனத் தீமானிப்பதில் எங்களது 'பார்வைக்கோணமும் எமது அபிலாசைகளும் எமது கனவுகளுமே முக்கியமான பங்காற்றினலே தவிர குழந்தைகளுடனான தொடர்பாடல் உறவு என்பன கூட அதிகாரத்தை மையமாக வைத்தே இடம்பெற்று வந்துள்ளன.

தண்டனை வழங்குவதும் அடிப்பதும் (அடி உதவுவது போல அண்ணன் தம்பி உதவமாட்டார்கள் என) பயமூட்டுவது தான் பிழை திருந்த வழியாகக் கையாளப்பட்டு வருகிறது இது நீடிக்கிறது.

தண்டனை வழங்குமுறை, தண்டனை என்ற கோட்பாடே இப்போது குழந்தைகள் வளர்ப்பில் அர்த்த மற்றதாகவும் மிகுந்த உளவியல் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

ஒழுங்கான தொடர்பாடல் தொடர்ச்சியும் எமக்கும் குழந்தைகளுக்கும் இடையில் இருக்க முடியுமானால் இத்தண்டனை முறை வழக்கற்றுப்போய்விடும்.

சமூகத்தில் மட்டுமல்ல குடும்ப உறவுகளிலும் அமைப்பினும் குழந்தை வளர்ப்பிலும் பாடசாலை வகுப்பறைச் செயற்பாடுகளிலும் கூட சமத்துவமான சனநாயக நெறிமுறை பேணப்பட வேண்டியது சீரான சமூக உருவாக்கத்துக்கு அவசியம்.

எனவே நவீன உலகோடு ஒட்டி வாழுகின்ற புதிய சமூக ஒழுங்கமைப்பை ஏற்றுக்கொள்ளுதலும் சில செயற்பாடுகளை தயங்காமல் முன்னெடுத்தலும் ஆசிரியர் பெற்றோர் என்போரின் பாரியகடனாகும்.

**பெருநிலன்**

# பெண்களுக்குள் மாற்றம் வேண்டும்

சிறுபராயங்களில் குழந்தைகளிடையே காட்டப்படுகின்ற பாகுபாடு அல்லது பாரபட்சமானது மிகவும் மோசமான பின்விளைவுகளைத் தரக்கூடியது. நாம் அறிந்தோ அறியாமலோ ஆண், பெண் குழந்தைகளிடையே காட்டும் பாரபட்சம் எமது சமூகத்திற்கும் தேசத்துக்கும் பெருந் தலையிடியாக அமையும்.

தொழில் நிமிர்த்தம் வெளியூர் செல்லும் தந்தை திரும்பிவரும் போது தன் குழந்தைகளுக்கு பரிசுப் பொருட்களோடு வருகின்றார். ஆண் குழந்தைக்கு குட்டிச்சைக்கிள் அல்லது விளையாட்டுத்துவக்கு, அல்லது துடுப்பு வாங்கிவரும் தந்தை தன் பெண்குழந்தைக்கு என்ன வாங்கி வருகின்றார்? அழகான பொம்மை அல்லது அழகான சட்டையாகத்தான் இருக்கும். இது வேண்டுமென்று செய்யப்படுவதல்ல. ஆனாலும் இன்னமும் பல இடங்களில் இவ்வாறிருக்கிறது.

அம்மாதன்குழந்தைகளை கோயில் திருவிழாவுக்கு அழைத்துச்செல்கிறார். வழிபாடு முடிந்ததும் விளையாட்டுப் பொருட்களை வாங்கித்தருமாறு குழந்தைகள் அடம்பிடிக்கின்றன. ஆண் குழந்தைக்கு பந்து, துவக்கு பெண்குழந்தைக்கு அலிஸ்பான். ஸ்ரிக்கர்பொட்டு, பிளாஸ்ரிக் வளையல்.

வெளிநாட்டிலிருந்து உறவினர் ஒருவர் வீட்டுக்குவருகிறார். அன்பளிப்பாக சில பொருட்களை நீட்டுகிறார். பெண்குழந்தைக்கு அழகான கைக்கடிகாரம், ஆண்குழந்தைக்கு ரி.வி.கேம்.

இவையெல்லாம் நாம் சமூகத்தில் அடிக்கடி பார்க்கும் விடயங்கள். இது யாராலும் திட்டமிட்டுச் செய்யப்படுவதல்ல. காலம்காலமாய் ஆணும் பெண்ணும் இப்படிஇப்படித்தான் இருக்கவேண்டும் என்று பேணப்பட்டு வந்த சமூக அமைப்பில் ஊறிய எண்ணங்களின் வெளிப்பாடே இது.

இந்த பேணல் மரபில் ஊறி வளரும் குழந்தைகளும் நாளடைவில் இந்த எண்ணங்களையே பிரதி பலிக்கத் தொடங்கிவிடுகின்றன. அம்மாவின் சேலையை அல்லது துவாயை எடுத்து பெண்குழந்தை தாவணியாக பாவனை பண்ணிக்கொள்ளுவதும் ஆண் குழந்தை அப்பாவைப்போல் சாரம் கட்டுவது சுத்தியல், அலவாங்கு போன்றவற்றை கையாள்வதும் இந்த ஆழ்மனபடிவுகளின் வெளிப்பாடுகளே.

'சிறுவயதில் நிகழும் செயற்பாடுகளே எதிர்காலத்தில் ஒருவனுடைய அல்லது ஒருத்தியினுடைய ஆளுமையில் சமூகத்துக்குரிய நடவடிக்கைகளை நிர்ணயிக்கின்றன' என்கின்றார் உளவியல் ஆய்வாளர் ஒருவர்.

குழந்தைகள் பாடசாலைக்குச் செல்கின்றன. அம்மாவுக்கு உடம்பு ஏலாது என்றால் பெண்பிள்ளை யைத் தான் அம்மாவுக்கு உதவியாக வீட்டில் நிறுத்தி விடுகிறார்கள். இதே போன்று குடும்பங்களில் ஆண்களும் தொழிலுக்கு செல்கின்றார்கள் பெண்களும் தொழிலுக்குச செல்கின்றார்கள். ஆனால் குழந்தைக்கோ அன்றிவீட்டில் ஒருமுதியவருக்கோ உடல் நலம் இல்லையென்றால் வேலைக்குப் போகும்பெண்ணே வீட்டில் நிற்கவேண்டியதாக இருக்கிறது.

பல இடங்களில் பெண் குழந்தைகள் மரத்தில் ஏறினாலோ, அல்லது தந்தையின் சையிக்கிளை எடுத்து உருட்டினாலோ வீட்டிலிருக்கும் பெரியவர்கள் துடித்துப்போய் தடுத்துவிடுகிறார்கள். இப்படியெல்லாம் தடுக்கப்படும் பொழுது 'ஏதோ தவறுசெய்துவிட்டோம்' என்கின்ற எண்ணம் குழந்தையின் மனதில் விழுத்தப்படுகிறது. அதன் மனதில் முகிழ்த்த எண்ணமும் ஆர்வமும் கற்பனையும் மழுங்கடிக்கப்பட்டுவிடுகிறது. 'நான் இதற்கு லாயக்கற்றவள்' எனும் நினைவு ஊன்றப்பட்டு, காலப்போக் கில் அது மனதில் தாழ்வுச் சிக்கலை உருவாக்கிவிடுகிறது. இந்ததாழ்வுச் சிக்கல் குழந்தையை ஏனையவர் களிடமிருந்து ஒதுங்கி நிற்கச்செய்கிறது. இந்த ஒதுங்கி நிற்கும் உணர்வு குழந்தையின் எல்லா முன்னேற்றங்களுக்கும் தடையாகிவிடுகிறது. வளர வளர மனதில் ஊறிஊறிவிசுவரூப மெடுக்கிறது. பின்னாளில் தன் சார்ந்தவர்களையும் தன் வழியிலேயே நெறிப்படுத்தி, ஆரோக்கியமற்ற சமூகத்துக்கு வித்திட்டு விடுகிறது.

குழந்தைகளை வழிநடத்தவேண்டியவர்களாக பெரியவர்கள் இருந்த போதிலும் சில சமயங்களில் குழந்தைகளிடம் நாம் நிறையவே கற்றுக் கொள்ளவேண்டியவர்களாயிருக்கின்றோம். ஒரு குழந்தையின் ஆணாக இருந்தாலென்ன பெண்ணாக இருந்தாலென்ன எதிர்காலத்தை திட்டமிட வேண்டியவர்கள் பெரியவர்களாகவே இருக்கின்றனர். ஆண் பெண் என்கின்ற பாகுபாடு எதுவுமின்றி குழந்தைகளிடம் காணப்படும் திறமைகளை இனங்கண்டு இலக்கைநோக்கி அவர்களை வழிநடத்தவேண்டியது கடமை அடுப்பூதும் பெண்களுக்குப்படிப்பெதற்கு? என்று கேட்டகாலம் கரைந்து போய்,

"பட்டங்கள் ஆள்வதும்
சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள்
நடாத்த வந்தோம்"

என்று ஒருகாலத்தைப்படைக்க பாரதி பாடினான். உலகம் கொஞ்சம் புதுமையுற்றது. பெண்கள் கல்விகற்கத் தொடங்கினார்கள். ஆனால் அவர்களுக்கென சிலதுறைகள் தெரிவு செய்யப்பட்டன. இப்போது அதுவும் மாற்றம் கண்டுள்ளது. பெண்கள் பல துறைகளில் மிளிர்கின்றார்கள். மிகவும் கடினமானதுறைகள் எனக் கருதப் பட்டதுறைகளிலும் பெண்களின் காலடிகள் பதிகின்றன.

ஆனபொழுதிலும் அறிவியல் ரீதியாகவும் பெண்களின் வளர்ச்சிப் போக்கு மாற்றங்கொள்ளவேண்டியதாகிறது. இந்த மாற்றங்கள் குழந்தைகளினூடாக கொண்டு வரப்படுவது சிறப்பாக அமையலாம் குழந்தைகளின் கற்பனைகளை சிந்திக்கும் ஆற்றலை வளர்த்துவிடுவதன் மூலம்இது சாத்தியமாக்கப்படலாம். குழந்தை எனும் சொல் ஆண்பெண் என்கின்ற படைப்பியல் பாகுபாட்டுக்கு அப்பாற்பட்டது.

**ஆதிலட்சுமி சிவகுமார்**




# பெறுமதி



**சூரியநிலா**

"அண்ணா,விளையாடவா" என்று கையைப் பிடித்து இழுத்த தங்கையை வாஞ்சையுடன் பார்த்தான் அவன்.

"நாளைக்கு வாறன்" அவளது தலையைத் தடவியபடி மெதுவாகச் சொன்னான்.

"நாளைக்கு நீ நிக்கமாட்டாய்." என்று சொன்னாவளின் முகம் சோர்ந்தது. அவளது முகவாட்டம் இதயத்திற்குள் யாரோ கத்தியால் எதையோ அறுப்பது போலிருந்தது. பாசம் இவ்வளவு வேதனைக்குரியதா? என்று நினைத்தவன் அவள் இழுத்த திசைக்கு இழுபட்டான்.

"ஒரு ஆட்டத்திற்கு மட்டும் வாறன். என்ன?" என்ற அவனது கதையைக்கேட்காமல் அவள் அவனை இழுத்துக் கொண்டுபோனாள்.

அவளது விளையாட்டுத் தோழர்கள் அவனை ஆரவாரமாக வரவேற்றார்கள். கிளிக்கோடு வரையப்பட்டிருந்தது. தான் கிளியாகப் போனால் சுகமாய் எட்டி அடித்துவிட்டு அவர்களிடமிருந்து விடுபடலாம் என்று நினைத்தான் அவன். ஆனால் இன்றைய தலைமுறை புத்திக்கூர்மையானது. அவர்கள் அவனைக் கிளியாக அனுமதிக்கவில்லை.

நான் பாய்ந்து போனால் இவர்களால் எட்டித் தொடமுடியாது என்று அவன் நினைத்தான். ஏனெனில் அவன் அவ்வளவு பயிற்சி எடுத்திருந்தான். முதலாவது பெட்டிக்குள் நின்றபடியே அனைவரையும் பார்த்தாள். துடிப்பும், சிரிப்புமாய் எதிர்காலம் பற்றிய கவலைகளற்று இப்போது எப்படி அவனை தாங்கள் நேசிக்கும் அந்தப் பெரியவனை வெல்வது என்ற சிந்தனையுடன் ஓரக்கண்ணால் அவனைப் பார்த்தவாறே எல்லோரும் விளையாட்டில் தீவிரமாயிருந்தார்கள்.

ஓ! இவர்களுக்காகத்தான் நான் பயிற்சி எடுத்தேன். ஆனால் இவர்களை வெல்லவல்ல.

என்று நினைத்தவன் அவர்களைத் தன்னால் வெல்ல முடியாது என்பது போல் பயந்து, பயந்து விளையாடினான். அவர்கள் உற்சாகமானார்கள். எப்படியோ அவனை ஐந்து ஆட்டங்கள் விளையாட வைத்துவிட்டார்கள்.

அவனது நேரம் கொஞ்சம் கடந்திருந்தது. இனியும் தாமதிக்க முடியாது என்று தீர்மானித்தவன் தனது கால்களையும், கைகளையும் சுற்றிப் பற்றிய அத்தனை கரங்களிடம் இருந்தும் பகீரதப் பிரயத்தனம் செய்து வெளியேறினான்.

தேநீருடன் அவனைத் தேடிவந்து அவன் விளையாடுவது கண்டு அதில் ஒன்றிப்போய்ப் பார்த்துக் கொண்டிருந்த அம்மா புதிதாய்த் தேநீர் தயாரிக்க அவசரமாய் உள்ளே போனார்.

மாலை வகுப்பிற்குப்போகப் புறப்பட்டு அண்ணா விளையாடுவதைக் கண்டு அதைப் பார்த்துக்கொண்டு வகுப்பைத் தவிர்த்திருந்த உயர்தரம்படிக்கும் தம்பி. அவன் தொடர்ந்து விளையாட மாட்டானாஎன்று எண்ணியபடி அவனைப் பார்த்தான். தங்கைக்கு அழுகைவந்திருந்தது. 'நான் இனி விளையாட வரேல்லை" என்று சொன்னாவள் ஓடிப்போய்த் தனது இருபத்திநான்கு வயதுக்குழந்தையின் விளையாட்டை ரசித்துக் கொண்டிருந்த அப்பாவின் கதிரையின் கைபிடியால் ஏறி அவரது மடிக்குள் விழுந்தாள். அவளது விளையாட்டுத் தோழர்கள் மெதுவாகக் கலைந்தனர்.

இவற்றையெல்லாம் கவனிக்கும் நிலையில் அவன் இல்லை. விளையாடிய அலுப்பிற்கு அவசரமாய்க் குளித்து வெளியேபோகப் புறப்பட்டான்.

அவன் வெளியே போகப் போவதைக்கண்ட சின்னவள் அழ ஆரம்பித்தாள்.

ஈருருளியில் ஏறிய மகனிடம் அம்மா தேநீரை நீட்டினார். அதை வாங்காமல் அப்பா இருந்த திசைதிரும்பினான் அவன்.

"ஏனபா தங்கச்சி அழுகிறாள்?" யாருமே பதில் சொல்லவில்லை. ஏனெனில் பதில் அவனுக்கும் தெரிந்ததுதானே?

அவனது இதயம்... அது பாவம். சோகங்களைச் சுமந்து சுமந்தே களைத்துப்போயிருந்தஅது தங்கையின் கண்ணீரைக் கண்டும் உருகியது. எனினும் நொடிப்பொழுதில் அவன் சுதாகரித்துக்கொண்டான்.இவளுக்கு தனது முழுமையான அன்பைக்காட்டக்கூடாது. காட்டினால் மேலும் மேலும் அவள் பரதிக்கப்படுவாள் என்று உணர்ந்தவன்.

"ஏனடி அழுகிறாய்?" என்று முறைத்தான்.

அவள் இன்னும் பெரிதாக அழ ஆரம்பித்தாள். அவளிடமிருந்து பார்வையைத் திரும்பி வானம் பார்த்தபடியே அவசரமாகத் தேநீரைக் குடித்து முடித்தான்.

"ஒருக்கா வெளியால போட்டு வாறனம்மா" என்று நிற்காமல் சொல்லிக்கொண்டே-போன அவனது கண்கள் பளபளத்ததைஅம்மா மட்டும் பார்த்தார்.

சிந்தை முழுவதும் தங்கையின் கண்ணீர்முகம் நிழலாட எவ்வளவு தூரம் போயிருந்தானோ தெரியவில்லை. ஈருருளியின் பின்சக்கரம் காற்றில்லை என்று அறிவித்தல் தந்தது.

அருகிலேயே ஈருருளி திருத்துமிடம் இருந்தது. ஒட்டாக இருக்காது என்று மனம் சொன்னது. ஓட்டுவதற்கு நேரமும் இல்லை. தீர்மானித்தவன்.

"அப்பா காத்தடிக்கப்போறன்" என்றான் கடைக்காரரிடம்.

"தம்பி ஒரு ரூபா தந்திட்டு அடியும். என்றார் அவர்.

அவன் தனது சட்டைப் பைக்குள் பார்த்தான். இல்லை. காற்சட்டைப்பைக்குள்... அங்கேயும் இல்லை வேறுபை எதுவும் அவன் கையில் எடுத்து வரவுமில்லை.

இப்போது என்ன செய்வது? திகைப்புடன் அவன் கடைக்காரரைப் பார்த்தான்.

"அப்பா காசு இல்லை" அப்பா நிமிர்ந்தார்.

ஆடைகளும் ஆளும். அழகாய்... களையாய்... ஈருருளிகூடப் புதிதாய்ப் பளபளத்தது. நன்றாய்த் திரைப்படம் பார்ப்பான் போலிருக்கிறது. அவனைப் பார்த்து அப்படித்தான் நினைக்க முடிந்தது அந்த அப்பாவால். அவருக்கு எரிச்சல் வந்தது.

பச்சைத் தண்ணீரைக் குடித்து விட்டுத் தன்னை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மூன்று உயிர்களுக்கு இரவு ஒரு வேளையாவது ஏதாவது உணவு கொடுக்கவேண்டும். மனைவிக்கு மருந்து வாங்க வேண்டும். பிள்ளைகளுக்கு ஒழுங்கான ஆடைகள் இல்லை. வீடு ஒழுகித் தொலைகின்றது. கொஞ்சம் கொஞ்சமாய்ப் பட்டகடன் இப்பொழுது பெரியதொரு தொகையாய் மாறிவிட்டது. ஒட்டுவதற்குரிய பொருட்கள் வாங்கவேண்டும். இந்த இலட்சணத்தில் இவன் வேறு...

இப்படியானவர்களிடம் வாங்காமல் வேறு யாரிடம் வாங்குவது? என்னைப் போலவே வாழ்க்கைப் படகு ஓட்டச் சிரமப்படுபவர்களிடமா வாங்கமுடியும்? அவரது வயிற்றுக் கொதிப்பு பேசியது.

"அவரும் அவற்றை அலங்காரமும்... ஒரு ரூபாவுக்குப் பெறுமதியில்லாதவங்கள்"

சாட்டையாய்த் தன்னைத் தாக்கிய வார்த்தைகளைக் கேட்டுத் திடுக்குற்று நிமிர்ந்தான் அவன்.

"நான் ஒரு ரூபாவுக்குப் பெறுமதி அற்றவனா?

தன்னைத்தானே கேட்டான் அம்மாவின் மனக்கோட்டை அரியாசனத்தின் ராஜகுமாரன் அவன். அப்பாவின் இளவரசன்.

அவன் எதிர்காலத்தில் ஒரு பொறியியலாளனாய் வரவேண்டும் என்று அம்மா இயல்பாய் ஆசைப்பட்டாள்.

அவனது புத்திக் கூர்மைக்கும், மென்மையானஇயல்புக்கும் அவன் ஒரு சத்திரசிகிச்சை நிபுணராக வரவேண்டும் என்று அப்பா விரும்பினார்.

அவன் வெளிநாடு சென்றால் நன்றாயிருக்கும் என்று உறவினர்கள் நினைத்தார்கள்.

விருப்பப் பாடமாய் அளவையியல் படித்தபோது தான் ஒரு சட்டவாளனாய் வரவேண்டும் என்று அவனே கனவு கண்டதுண்டு.

தான் உதைபந்தாட்ட வீரனான இன்னாரின் தம்பி என்று சொல்லித் திரிவதில் பெருமைப்பட்டான் அவனது தம்பி.

தங்கை பாவம். சின்னவள் அவளும் ஏதும் நினைத்திருக்கலாம். யாருக்குத் தெரியும்.

அவன் நினைத்திருந்தால் இவற்றில் ஏதாவதொரு நிலையை அடைந்திருக்கலாம். அதன் மூலம் கட்டுக்கட்டாய்க் காசைக் குவித்து அதன் மேலே படுத்து உறங்கியிமிருக்கலாம்.

ஆனால், அவன் இவற்றைவிட வேறு எதையோ தீவிரமாக விரும்பியிருந்தான். அதனால் இன்று ஒரு ரூபாவுக்குக் கூடப் பெறுமதி அற்றவனாக...

அவன் எதுவும் பேசாதது கண்டு திரும்பிப் பார்த்தார் கடைக்கார அப்பா.

எங்கேயோ பார்த்துத் தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்த அவனது முகத்தைப் பார்த்தபோது "இவன் பாவம்" என்று தோன்றியது அவருக்கு. அவனது கவனம் சிதற முதல் காற்றடிக்கும் கருவியை எடுத்துக்கொண்டு அவனருகில் போனார். சிந்தனை கலைந்து திரும்பியவனிடம்.

'காசைப் பிறகு கொண்டு வந்து தாரும்" என்று இறுக்கம் குறையாமல் சொன்னார். அதே கணத்தில் அவனது தம்பி அந்த வழியால் வர தம்பியிடம் ஒரு ரூபாய் வாங்கி அவரிடம் கொடுத்தான்.

"இவர் உங்கடை சொந்தமோ?" கடைக்காரர் தம்பியிடம் கேட்டார்.

தம்பி சந்தோஷமாக வாய் திறக்க முன்.'

"இவர் என்ர தம்பியோட படிக்கிறவர்ப்பா" என்று விட்டு அவனை அதில் நிற்கவிடாமல் தன்னுடன் அப்பால் கூட்டிக்கொண்டுபோய்.

"அண்ணா வந்து நிற்கிறான் எண்டு ஒருத்தருக்கும் அறிக்கை விடாதை என்ன" என்று எச்சரித்துவிட்டு வேகமாகப் போனான்.

தம்பிக்கு அவனைப் புரியவேயில்லை.

● ● ●

விடுமுறை முடிந்து போகும்போது சினேகமாய் அந்த ஈருருளி திருத்தும் அப்பாவைப் பார்த்துச் சிரித்து விட்டுப் போனான் அவன். அவருக்குள் ஏதோ ஒன்று உறுத்தியது.

● ● ●

அவன் வந்து போன இரண்டு கிழமைகளின் பின் எதிரிமீது ஒரு பாரிய அடி விழுந்தது. அதன் மூலம் எதிரியின் கோடிக் கணக்கான ரூபாய்கள் பெறுமதியான போர்தளபாடங்கள் அழிக்கப்பட்டன.

பத்திரிகை பார்த்த அந்த ஈருருளி திருத்தும் கடைக்காரர், அந்த நிழல்களை நினைத்துப் பெருமூச்செறிந்தார்.

பெறுமதியானசாவு" அவர் மனம் சொல்லிற்று.

எனினும் அவரால் அதை ஏற்க முடியவில்லை. பெறுமதியானது என்றால் எவ்வளவு பெறுமதியானது? அதனை யாரால், எப்படிக் கண்டு பிடிக்க முடியும்? அவர் குழம்பித் தெளிந்தார்.

"இது விலை மதிப்பற்றசாவு. இதற்குப் பெறுமதி கிடையாது. அந்தப் பிள்ளைகள் விலை மதிப்பற்றவர்கள்"

அவர்களின் நினைவுகளில் ஆழந்து 'ஆராரின் பிள்ளைகளோ' என்று எண்ணி ஏங்கினார் அவர். இனத்துக்காக இத்தனை பெரிய தியாகத்தை இவர்கள் செய்கின்றார்களே என்று வேதனைப்பட்டார்.

பாவம் அவர் தன்னால் ஒரு ரூபாய்க்குப் பெறுமதியற்றவன் என்று கூறப்பட்டவனும் அவர்களுக்குள் அடக்கம் என்பதை அவர் அறிவதற்கு வாய்ப்பேயில்லை.

●

உரக்கக் கைதட்டாதீர்கள்; இது மிகப் பழைய கட்டடம். -ஜன் ஆஸ்பார்ன்

# நூல்நோக்கு

பாட்டுக்களும், மொட்டுக்களும் தாயின் தாலாட்டிலிருந்தே புலர ஆரம்பிக்கின்றன. இவை குழந்தை உள்ளங்களை மகிழ வைக்கவும், துயிலவைக்கவும், மெல்ல மெல்லக் கற்றலை ஆரம்பிக்கவும் வழி காட்டுகின்றன. மொழியின் வரி வடிவங்களைக் கற்றுக்கொள்ளும் முன்பே, பாடல்களின் மூலம் குழந்தைகளின் ஆரம்பக்கல்வி துளிர்

| | |
|---|---|
| நூலின் பெயர் | : சின்னப்பாப்பா பாட்டு |
| நூலாசிரியர் | : கவிஞர் ச.வே.பஞ்சாட்சரம் |
| நூலின் விலை | : 150/= |
| வெளியீடு | : கிளிநொச்சிக்கல்விவளநிலையம் |




விடுகிறது. படித்தவைகளை மேல் நோக்கி எழச்செய்வதைவிட, பாலர்களுக்கு கல்வி புகட்டுவதே மிகத் திறமையான சவாலாகும். பாடல்கள் மூலம் பலவற்றை இலகுவாகவும் இசைவான வையாகவும் புகுத்திவிட முடியும். "எதிர்காலத்தில் எதை எதைச் செய்ய விரும்புகிறாயோ எந்த மாபெரும் காரியத்தைச் சாதிக்க விரும்புகிறாயோ அதைக் குழந்தைகளின் பிஞ்சு நெஞ்சங்களில் புகுத்திவிடு" என்று உளவியல் ஆய்வாளர்கள் சொல்லி வருகின்றார்கள்.

கவிஞன் இயற்கையாகவே பிறக்கிறான். அவன் தனது சமூக, சூழல் மையங்களிலிருந்தே தனது பாடல்களைப் படைக்கவேண்டும். இந்தவகையில் கவிஞர் ச.வே. பஞ்சாட்சரம் ஒரு இயற்கை கவிஞர். அவர் தம் வாழ்நாளில் பல கோணங்களில் பல தலைப்புகளில் பற்பல இலக்கிய வடிவங்களில் உருவாக்கம்பெற்றவை அனேகப்படைப்புக்கள். எழிலி என்ற காவியம் மூலம் சாகித்திய மண்டலத்தின் பரிசு பெற்று ஏற்றமுற்றவர். அவரது குழந்தைக் கவிதைகள் தொகுப்பு "சின்னப்பாப்பா பாட்டு" என்ற நூலாக வெளிவந்துள்ளது. வயதானவர்களுக்கு வைத்தியம் செய்வதைவிடக் குழந்தைகளுக்கு வைத்தியம் செய்வது மிகவும் கஷ்டமானது என்று கிராமங்களில் சொல்வதுண்டு. பெரியவர்களுக்கான பாடல்களை எழுதுவதைவிடச்சிறுவர்க்கான பாடல்களைப் புனைவதும் அப்படியேதான். இவரது தனித்துவமான ஆளுமையினால் பல்வேறு தலைப்புக்களில், சொல்லடுக்கும், இசையோடிணைந்த கருத்துக்களின் நகர்வுகளும் பாடல்களை மேலும் வளமாக்குகின்றன.

இவரது சின்னப் பாப்பாபாட்டு என்னும் நூல் 63 தலைப்புக்களில், அரு. மையான சொல்லாட்சிகளுடன் பல் வேறு இசை நயத்தோடு இணைந்த பாடல்களை உள்ளடக்கியுள்ளது. ஆரம்பகாலக் கிராமிய வட்டத்திலிருந்தே தன் முதற் பாடலைப் படம் பிடித்துக் காட்டுகிறார். நாலுவயதுச் சிறுவன் தன்னையே ஆசானாக்கி நாற்புறமும் கிடக்கும் மரங்களை மாணாக்கராக நினைத்துப் பாடுவ தாகத் தன் ஆழ்மனத்திலிருந்து எழும் உணர்வலைகளைப் பாடல்களில் பருக்குகிறார். இதில் கிராமியச் சூழலையும் இணைத்திருக்கிறார். காலவோட்டத்தின் ஒரு புறத்தில் நாகரிகத்தின் பின் புலத்தில் மறையவிடாது "கப்பும், கிளுவையும்" போன்றவற்றைக் கண் முன்னே காட்டுகிறார். கடந்துகொண்டிருக்கும் கிராமியச் சொற்களைப் பாடல்களில் மறையவிடாது கோத்துச் செல்கிறார்.

வன்னியிலுள்ள பள்ளி ஆசிரியர்களிற் சிலர், அதிபர்கள், கல்வி வள நிலையம், கிளி மாவட்டக் கல்விப் பணிப்பாளர் உட்படப் பலரின் கூட்டு முயற்சியில், குழந்தைகளின் மன வளத்தைச் சிறக்க வைக்கும் அம்சங்கள் பலவற்றை உள்ள டக்கி உருவான சிறுவர் பாடல் தொகுதி நூல் "சின்னப்பாப்பா பாட்டு" அண்மையில் வெளிவந் துள்ளது.

இத் தொகுதியில் பலவயது மட்டங்களிலுமுள்ள சிறுவர்கட்கு இசைவான 63 பாடல்கள் உள்ளன. இதில் "நானே நல்ல வாத்தியார் ஆனால் வயது நாலுதான்" எனத் தொடங்கும் பாடல்தாத்தாவும், தம்பியும், "பொள்ளல் வந்துவிட்டால் பொய்யர் வாழ்வு போலே துள்ளியேறல் இன்றித் துவண்டு மண்ணில் வீழும்" பட்டம் பாடல் போன்ற 10 பாடல்கள் குழந்தைகள் பாடியாடத் தக்க சிறந்த அபிநயப்பாடல்களாயுள்ளன.

பிஞ்சு நெஞ்சங்களின் அனுபவங்களுக்குட்பட்ட ஆனால் கிளர்ச்சியூட்டும் விடயங்கள் "குரு விக்கூடு குருவிக்கூடு கொப்பில் உள்ள வீடு" போன்று அவர்களுக்குப் பரிச்சயமான எளிய பழகு தமிழ்ச் சொற்களில் பேச்சோசையில் பாடல்களாகப்பாடப் பட்டிருப்பது சிறந்த சிறுவர் இலக்கியப்பண்பாகும்.

பக்கத்துக்குப் பக்கம் பல்வேறு வர்ணங்களோடு அச்சிடப்பட்ட இந் நூலில் அமைந்துள்ள படங்களைக் குழந்தைகளுக்குப் பொருட்களின் உண்மைத் தோற்றத்தைத் தெளிவாக உணரவைக்கவேண்டிய பொறுப்புணர்ந்து, (அவற்றைக் கூர்ந்து பார்த்து மூளையைக் குழப்பி இனங்காண வைக்கும் நவீன ஓவியப் பாணியைத் தவிர்த்து) உள்ளதை உள்ளபடி காட்டும் மரபு ஓவியவகையில் வரைந்திருப்பது. வரவேற்கத்தக்கது. சிலவகை நவீன ஓவியங்கள் குழந்தைகளின் பிஞ்சு நெஞ்சங்களில் சிக்கலான மனவோட்டங்களை உருவாக்குவதாக அண்மைக்கால ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

கால வோட்டத்தில் இறைவனின் உருவங்களும் நவீன ஓவியப் பாணியைப் பின்பற்றும் நிலை உருவாகுவதால் பக்தி மார்க்கத்தில் இள மனங்கள் தடுமாற்றமடைந்து சுய நம்பிக்கை, சகிப்புத் தன்மை விட்டுக் கொடுத்தல் போன்றவை குறைவடைந்தே வருகின்றன. இந்நூலின் மிக முக்கிய பண்பாகப் படங்கள் மரபு ஓவிய வடிவில் தீட்டப்பட்டுள்ளமை கவனிக்கவேண்டிய விடயம்.

சிறுவர் பாடல்கள் சிறுவர்களால் வாய்விட்டுப்பாடக்கூடிய ஓசைச் சிறப்பு மிக்கவையாக அமையும் போதே பயன் தரமுடியும். அப்பாடலை ஓசையோடு மாணவர்கள் தாமாகவே பாடக்கூடிய விதத்தில் பாடலின் முதல் 4 வரிகளாவது ஓசை அலகுகளாகச் சீர்பிரித்து அச்சிடப்படுவது பாடும்பிள்ளை, பாடுவிக்கும் ஆசிரியர் ஆகியோருக்கு வேலையை இலகுப்படுத்தும். இத் தொகுதியிலுள்ள பாடல்கள் அவ்வாறு சீரபிரித்து அச்சிடப்பட்டிருப்பது உவப்பான செயலாகும். அதே வேளை மாணவருக்குதவும் வகையில் ஒவ்வொரு பாடலுக்குரிய இராக, தாளங்கள் தரப்பட்டுள்ளன. அவை கூடப்பாடற் பக்கத்திலேயே வழங் கப்படுவது மாணவர்க்கு மனமருட்சி தந்துவிடும் என்பதற்காக வேறாக - தனியாக வரிசைப்படுத்தப்பட்டிருப் பது சிறந்து உளவியல் அணுகு முறையாகும்.

மேலும் பாடல்கள் பல, நல்ல படிப்பினைகளைக் கொண்டவையாகவும் அமைந்துள்ளன. "அன்பால் உலகை ஆள்கின்ற ஆர்வம் பெற்றுச் சாய்ந்தாடு" "மாடி குடிசை ஒன்றுமில்லை! வறியன்! என்ற போதிலும் -தாய் வீடு வாசல் போலத் தங்க வேலன் கோவில் போதுமே" போன்றவை கற்பனை ஆற்றல் அதி தீவிரமாகத் தொழிற் படும். அந்தக் குருத்துப் பருவத்தினரின் எண்ண ஓட்டங்களைப் பிரதி பலிப்பவையாகவுள்ளன "நானே நல்ல வாத்தியார் ஆனால் வயது நாலுதான்", துள்ளும் மின்னல் கொடி களாம் வெள்ளி எல்லாம் பூக்க ளாம்,"பளபளபட்டுப் போலே, பஞ்சொடுரத்தம் போலே" குளு குளு மொட்டுப் போலே குங்குமப் பொட்டுப்போலே போன்ற பல பாடல் வரிகள் அழகாக அமைந் துள்ளன.

பழைய புலவர்கள் பாடிய சந்திரன், நாய், பூக்கள் போன்றவற்றையும் புதியவியப் பூட்டும் கண் ணோட்டங்களில் பாடியிருப்பதும் முன்னர் எவரும்பாடாத புதுப்புதுப்பாடு பொருள்களை (தும்பலப்பூச்சி, நாய் வால், நீரும் நிறமும், சருகு பொறுக்குவோம், மின்மினி, மின்னல் தூண்டிற்காரா அகதித்துன்பம் ஒதுங்கிவாடா போன்றவை) பாடியிருப்பதும் நிச்சயமாகப் பல சூழற்காரணங்களாலும் உறைந்து போய்- இறுகிப் போய் கிடக்கும் ஈழத் தமிழ் இளஞ்சிறார்களின் மனங்களிற் கிளர்ச்சியை, நெகிழ்ச்சியைப், அருட்சியை, புத்துணர்வை, எழுச்சியை ஏற்படுத்துமென நம்பலாம் நூலின் ஆரம்பத்தில் இயற்கையோடிணைந்த் வாழ்வின் தொடக்கமாக எழும் சிறுவனின் பாடல்களுடன், தமது கிராமத்து முற்றத்தில் ஆரம்பக்காற்றைச் சுவாசித்து இன்று சொந்த மண்ணுக்கே போக முடியாமல் அகதி நிலையில் வாழும் சிறுவரின் எக்கங்களையும் இப்பாடல்கள் காண்பிக்கின்றன. நாலுவயது வாத்தியார், தனித்த சிறுவன்; அகதித்துன்பம், நாடோடி, அந்தநாள் எந்த நாள் என்பவை தற்காலச் சூழலைத் தட்டி கேட்கின்றன.

எல்லாவற்றிலுமே இடர் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள ஈழமக்கள் தம்கலை உலகப் பண்புக்குள் மீளவும் நிமிர்ந்து எழுவதற்கு ஆரம்ப அத்திவாரமாக இந்நூல் உதவும் இன்றைய குழந்தைகளே நாளைய பெற்றோர்கள் இந்த நாட்டையும் வீட்டையும் சமூகத்தையும் வழி நடத்துபவர்கள். அவர்கள் நல்ல அறிவாற்றல் சீர்மியம்உள்ளவர்களாக இலங்க இந்நூல் அத்திவாரமாகட்டும்! எல்லோர் வீடுகளிலும் இருக்கவேண்டிய நூல் இது.

**கே.எஸ். ஞானமூர்த்தி**

## உயிரின் முகவரி

என் நெஞ்சோரமாய்
நிழல் விரித்து நின்ற
இனிமைகள் விழுங்கப்பட்ட அந்த
இரவுகளின் முகவரியை என்
விழியோரக் கசிவுகள்
இன்னமும் ஆழமாய்
வினவிக்கொண்டேயிருக்கின்றன.
கன்னத்தில் வழியும்
கண்ணீர்க் கோடுகளை
ஒற்றி எடுத்தெடுத்து
என் கரங்களிலும் இப்போது
உப்புக் கரிக்கின்றது
ஊற்றுவாய் அடைத்துப்போன
விழிக்கிணறுகளைத் தோற்றமுனைந்து
தோற்றுப்போன நாசித்துவாரங்கள்
பெருமூச்சுக்களைப் பிரசவிக்கின்றன.
ஆனாலும்,
அவை எதையுமே
அனுபவிக்கமுடியாதபடிநான்...
என் உணர்வுகளுக்கப்பால்
நின்று நிழலாடுகின்ற
அந்தப் பொழுதுகள் பற்றிய
நினைவு நெரிசல்களுக்குள்
நிம்மதியைத் தொலைத்துவிட்டு
இன்னும் உயிருள்ள ஜடமாய் நான்
உலவிக் கொண்டிருக்கின்றேன்.
என் உணர்வுகளுக்கு விலங்கிட்டு,
என் இனிமைகளை விழுங்கி
எனைவிட்டு உருவிச் செல்லப்பட்ட
என் இனிய உறவின் முகவரி,
வினாக்குறிகளைத் தாங்கியபடி
விடிகின்ற
நிசப்தங்களைச் சுமக்கும்
நிகழ் காலத்திலேனும்
என் சிந்தனைக்கு மறுவாழ்வளித்து
நெஞ்சோடு கலக்குமென்ற
நப்பாசை கலந்த,
காங்கை நெருப்பு கனல்கின்ற
கனத்த இதயத்துடன்
நடைப்பிணம் நான் இன்னும்
அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறேன்.
ஆனால்,
எனக்கான விடுதலைமட்டும்
எந்த இரக்கமும் இல்லாமல்
தன் முகவரியை எனக்கு
இனங்காட்டிக்கொள்ள விரும்பாமல்...
இன்னும்,
காணாமற்போனோர் பட்டியலுக்குள்ளேயே
ஒளிந்து கொண்டிருக்கிறது.

க.லிங்கராஜா.

## தென்றல்

கற்காலம் தொட்டு
கணனிக்காலம் வந்தும்
தமிழிசை பாடி
தாழ் போற்றும்
நெஞ்சங்களின்
இதய அறைகளை
இதமாக தாலாட்டி
இன்று வரை
வானேறி வந்து
தன் பணி தொடரும்
தன்னலமற்ற
துணைவி.(காற்று)

சி.க.மகேந்திரகுமார்.



# குழந்தைநாதம்

முரளி பாடசாலை விட்டு வந்ததில் இருந்து அடக்க முடியாமல் அழுதுகொண்டிருந் தான்.

நேரம் ஆகஆக அவனது அழுகை ஆரோகண ஸ்தாயில் ஒலித்தது.

முரளியின் அழுகையை செவிமடுத்த அவனது அம்மா ஆர்த்திகா மகனின் அருகில் ஓடோடி வந்து ஆரத் தழுவி விடயத்தைக் கேட்டாள்.

அதற்கு முரளி விம்மி விம்மி நடந்ததைக் கூற ஆரம்பித்தான்.

தனது வகுப்பில் சகல மாணவர்களும் வகுப்பேற்றுப் பரீட்சையில் தேர்ச்சி அடைந்து விட்டதாகவும், தான்மட்டுமே வகுப்பில் கடைசிமாணவன் என்றும், தான் சித்தியடையவில்லை மீண்டும் அதே வகுப்பில் படிக்கவேண்டும் என்று கூறி அழத்தொடங்கினான்.

முரளியை அவனின் அம்மா தேற்றினாள், அவனின் மனதை சோரவிடாமல் அறிவுரை கூறினாள். விடா முயற்சியுடன் முயன்றால் முடியாதது எதுவுமே கிடையாது. என்றெல்லாம் கூறினாள்.

சிறிய; ஐந்தறிவு பிராணியான எறும்புகூட விடாமுயற்சியுடன் கல்லின் மீது ஊர்ந்தால் கல்லே தேயுமாம்.

நீயும் முயற்சி செய்து படி மகனே! மீண்டும் பாடசாலைக்கு மகனை அனுப்பி வைத்தாள்.

தாயின் அறிவுரைகளை அமுதவாக்காக்கினான். பாடசாலை போக ஆரம்பித்தான். அவனுடன் படித்தவர்கள் ஓர் ஆண்டு கூடவே படித்தார்கள். முரளி சோர்ந்து விடவில்லை "முயற்சியுடையவர் இகழ்ச்சி அடையார்" என்று உட்சாகத்துடன் படிப்பில் முழுக் கவனத்தையும் செலுத்தினான்.

அவனது அம்மாவும் அடிக்கடி பல அறிவுரைகளைக் கூறி மகனை நல்வழிப்படுத்தினாள் "விழாமல் இருந்தோம் என்பது பெருமையல்ல விழுந்த பொழுதெல்லாம் எழுந்தோம் என்பது தானே நமக்குப் பெருமை"

அதன்படி முரளி பாடசாலைவிட்டு வந்து அன்று படித்த கணக்குகள், விஞ்ஞானம் ஆங்கிலம் உட்பட சகலபாடங்களையும் பல K i ;w படித்தும் வந்தான். குழப் படிகளை அடியோடு நிறுத்தினான் நான் ஒரு வைத்தியனாக வேண்டும் என்று எண்ணினான். அந்த இலட்சியத்துடனே ஒவ்வொருஆண்டிலும் திறமையாகப் படித்து முதல் நிலை மாணவனாக வந்தான் அவனது தாய் அகமகிழ்தாள்.



## எறும்பூரக் கற்குழியும்

மகனை மேலும் மேலும் ஊக்குவித்தாள். அதன் பயனாக முரளி இன்று பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீட மாணவனாக இறுதி யாண்டில் படிக்கின்றான்.

முரளியைப் போல நாமும் "எறும்பூரக் கற்குழியும்" என்பதற்கிணங்க நடப்போமாக.

**சு. கீர்த்திகா**

## தம்பலப் பூச்சி

பளபள பட்டுப் போலே
பஞ்சொடு ரத்தம் போலே
குளுகுளு மொட்டுப்போலே
குங்குமப் பொட்டுப்போலே

செம்பக விழியைப் போலே
செந்தணல் நெருப்பைப்போலே
தம்பல வண்ணப் பூச்சி
தத்திடும் அழகைப் பாராய்!

மாதுளம் பூவைப் போலே
மரமுருக் கம்பூப் போலே
வீதியில் மண்ணில் எங்கும்
வெளிவரும் அழகைப் பாராய்!

புவிபசும் கோலங் கொள்ளப்
பொழிமழை மாரிக்காலம்
சிவனது பாக்குத் துப்பல்
சிவந்திங்கு திரிதல் பாராய்!

## சிந்திக்கச் சில

**01)** உன் இனிமையான பேச்சு மகிழ்விக்கும் இழிவான பேச்சு இகழ்விக்கும்.

**02)** மனோதிடம் என்பது எப்போதும் பண்புள்ளவன் நெஞ்சத்திலேயே உற்றெடுக்கும்.


**03)** சந்தேகப்புயலை உன் உள்ளத்திலிருந்து அகற்றாத வரை உள்ளத்தில் அமைதித்தென்றல் நிலவ முடியாது.

**04)** பல பிரச்சினைகள் உன்னை தேடிவந்த போதிலும் திணிக்கப்படுவதில்லை உன் அறிவாயுதத்தால் சிதைத்து விடு.

**05)** நல்லோர்களையும் நற்செயல்களையும் கண்டு நீ ஒதுங்கிவிடாதே சமூகம் உன்னை ஒதுக்கிவிடும்.

**ச.வாமதீஸ்**

## நகைச்சுவை



"ராமு உன் பிறந்த நாள் எப்போ?"

"செப்டெம்பர் ஏழாம் திகதிசேர்.."

"எந்த வருடம்..?"

"ஒவ்வொருவருடமும்தான் சேர்!"



## வாரம் ஒரு குறள்

*போதைதான் வாழ்க்கை அது இல்லையேல் வாழ்வதில் பயனில்லை என்று முட்டாள்தனமாக சிந்தித்துக்கொண்டு, அதை நியாயப்படுத்த குதர்க்கமாக பேசுவோர் தம்மிடையே அதிகமுண்டு.*

*போதைக்கு அடிமையாகும் போது, தன்னிலை மறந்து போகின்றது. தன்னிலை மறப்பவருக்கு, ஏனையோரை பற்றிய சிந்தனை எப்படிவரும்.....? ஒருவர் போதைக்கு அடிமையாகி தானும் அழிந்து அவரை சார்ந்தவர்களையும் அழித்து விடுவதை அறிவதேயேல்லை.*

*அது மட்டுமன்றி போதையில் இருப்பவரை எதிரிகள் மிக இலகுவாக தாக்கமுடியும். ஏனெனில் அவர் தன்னிலை உணர்வுடன் இருப்பதில்லையே இதனால் தான் அவர்கள் தங்களை இழக்கும் போது, முன்பு இருந்த புகழினையும் இறுதியில் தம்மை சார்ந்தவர்களையும் இழந்து விடுகின்றனர். இதனைத் தான்......*

*உட்கப் படாஅர் ஒளிஇழப்பர் எஞ்ஞான்றும்*
*கட்காதல் கொண்டொழுகு வார்.*

*என்று வள்ளுவப்பெருந்தகை மிகவும் அழகாகக் கூறியுள்ளார்.*

## சொற்சிலம்பம் - 36

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ள | ப | ன் | த | நு | ற் | ள் |
| ஞ் | ம் | னை | ங் | பி | யோ | க் |
| மு | பி | கு | பீ | லி | று | தை |
| வ | ர் | ப | ம | மு | சி | லை |
| ப | த | டு | மீ | ய | ல | ம் |
| ம் | நா | பு | பீ | ஷ் | ன | லை |
| ஈ | பு | யா | று | ன் | நீ | ப |

கட்டங்களில் காணப் படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் - 34 இன் விடைகள்

01. பங்குனி
02. ஆவணி
03. மார்கழி

01. நெய்
02. மோர்

### சொற்சிலம்பம் - 34 இன் பரிசுக்குரியவர்

த.தர்சினி,
செமசன் ஸ்டோஸ்ர்ஸ்,
கூமாங்குளம்.

### சொற்சிலம்பம் - 34 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. கோ.போசகாந், ஆண்டு-04, மட்டுவில், பூநகரி.
02. ச.சிவகாந்தன், திக்கரை,களபூமி, காரைநகர்.
03. தெ. சர்மிலா, கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி.
04. ஜெ.தட்சாயினி.ஆண்டு-04, விக்கினேஸ்வரா வி. கோம்பாவில்.
05. தே.கபில்தேவ், தரம்-05, யாழ்ப்பாணம்.
06. செ.மேனகா தரம்-04, கிளி/மத்திய கல்லூரி, கிளிநொச்சி.

01 பனையில் இருந்து எவற்றைப் பெறுகிறோம்?

01) ......................................
02) ......................................
03) ......................................

02. பூவின் மறு பெயர்கள்?

01) ......................................
02) ......................................

பெயர் :- ......................................

முகவரி :- ......................................

......................................

*சொற்சிலம்பம் - 35*
*ஈழநாதம்,*
*யாழ் சாலை,*
*கிளிநொச்சி.*

## இவற்றில் ஒன்றுமட்டும் வித்தியாசமானது அது என்ன?



## புரிதலும் தெளிதலும்

உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டிற்கும் ஒவ்வொரு தனித்துவம் உண்டு.

இதேபோல ஒவ்வொரு இனத்திற்கும், மதத்திற்கும் என்று தனித்துவங்களும் சிறப்புகளும் உண்டு.

இந்த தனித்துவம் உடையிலிருக்கிறது உணவிலிருக்கிறது, அவைகளின் கலை கலாச்சாரப் பண்பாடு என்று தனித்துவம் எல்லாக் கூறுகளிலும் பிரிந்துசெல்லும்.

இது தனிமனிதர்களானால் அவர்களின் குண, நல, நடத்தைகள் என நீளும்.

இப்போது நாம் இங்கு பிரஸ்தாபிப்பது எமது உணவின் தனித்துவத்தையும் சிறப்பையும் பற்றியது.

தொடரும் சமாதான முயற்சிகளின் பின்னான பாதைத்திறப்பின் பின் பிரதேசத்தில் நவீன வசதிகளுடன் கூடிய உணவகங்கள் பல திறந்து வியாபாரம் களை கட்டியுள்ளது.

இங்கு உணவு பரிமாறுவதிலிருந்து, உணவு வழங்குபவர்கள்வரை இன்றைய நவீன உணவகங்களிற்கு இசைவாக இவையையும் தம்மையும் மாற்றிக்கொண்டன.

ஆனால் ஒன்றை இவர்கள் கவனிக்கத் தவறிவிட்டார்கள் அல்லது அதையும் அவர்கள் மாற்றிவிட்டார்கள்.

இப்பொழுது எமது பிரதேசங்களுக்கு பலவேறு பிரதேசங்களிலிருந்தும், நாடுகளிலிருந்தும் ஊடகவியலாளர்களாக பயணிகளாக் ஆர்வலர்களாக அதிகமான வெளிநாட்டவர்கள் பயணம்செய்கின்றனர்.

இவர்கள் எமது உணவகங்களுக்கு விஜயம்செய்யும்போது அவர்களின் நாடுகளில் கிடைக்கும் உணவுக்கு நிகராகவும் அதேவேளை

### தனித்துவங்களை கடைபிடிக்க வேண்டும்

கொழும்பில் எப்படி உணவுகளை பெற்றார்களோ அதேபோன்று இங்கேயும் இறச்சியில் செய்யப்பட்ட பல வகையான உணவு வகைகளையும் இறக்குமதிசெய்யப்பட்ட உணவு வகைகளையும் பெற்றுக்கொள்கிறார்கள்.

ஆனால் எமது பிரதேசத்துக்கே உரித்தான எமது பாரம்பரிய உணவுவகைகளை அவர்களால் பெற்றுக்கொள்ளமுடியவில்லை.

இதனை ஒரு சர்வதேச ஊடகவியலாளரே குறைபட்டுச்சொன்னாராம்.

சிலவேளைகளில் இந்தபிரதேசத்துக்கே உரித்தான மறக்கறி வகைகளில் சமைக்கப்பட்ட உணவைக் கூட பெறமுடியவில்லை என்றாறாம்.

நுகர்வோரை கவருவதற்காக பல உணவுகளையும் தயாரிப்பது தவறு அல்ல, ஆனால் எமக்கே உரித்தான எமது மண்ணிற்கே சொந்தமான உணவு வகைகளையும் நாம் வழங்க வேண்டும்.

வாழையிலையில் உணவு பரிமாறுவது கூட எமது மண்ணிற்கே உரித்தான ஒரு பங்கு. ஆனால் இன்று இது மறைந்து செல்வதை காணக்கூடியதாக இருக்கின்றது.

இது எமது மண்ணின் தனித்துவத்தை பிறருக்கு பறை சாற்றும்.

இன்றும் கூட சிங்கள பிரதேசங்களிலும் இராணுவத்தினர் ஆக்கிரமித்திருக்கும் எமது பிரதேசங்களிலும் கூட அவர்கள் "கமேகட" என்று சிங்களத்தில் அழைக்கும் ஊர் கடைகளைத் திறந்து வைத்து அவர்களின் பிரதேசங்களுக்கு உரித்தான உணவு வகைகளை விற்பனைசெய்து வருகின்றார்கள்.

நாம் மட்டும் ஏன் சிந்திக்க மறக்கிறோம்.

சிந்திக்கவேண்டுமல்லவா?

— வேழினி

---

**தொடர் - 19**

இந்தப் பல்லாங்குழி விளையாட்டு ஆபிரிக்காவிலிருக்கிற தென்பதை முன்னமே லேசாக அறிந்திருந்தேன். முன்னர் ஒருதடவை 'பிரிட்டிஷ் கௌன்ஸில்' நூலகத்தில் ஆபிரிக்கா பற்றிய புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருந்தபோது, ஏதோ ஒரு புத்தகத்தில் ஏதோ ஒருபக்கத்திலிருந்து ஒரு பல்லாங்குழிப்பலகை எட்டிப்பார்த்தது நினைவிருந்தது. அடுத்த தடவை, அதுபற்றி அறிந்து கொள்ளலாமேயென்று போய்த்தேடிய போது அந்தப்புத்தகம் கண்ணிற்படவேயில்லை!

பல்லாங்குழி பற்றி இப்போதைய எங்கள் பிள்ளைகள் கேள்விப்பட்டிருப்பார்களா என்பதும் சந்தேகந்தான். நாயும் புலியும், தாயம், கொக்கான், பல்லாங்குழி - இவையெல்லாம் அந்தக்காலத்து சிறுவர் சிறுமியரின் 'உள்ளக' விளையாட்டுக்களாயிருந்தன. பின்னவையிரண்டும் சிறுமியரின் ஏகபோகம். இப்போது?

இந்தப் பாரம்பரிய விளையாட்டு, தமிழர்களுக்கிடையிலும் ஆபிரிக்கர்களுக்கிடையிலுமிருப்பதைப்




பற்றி யாராவது ஆய்வு செய்திருக்கிறார்களா, தெரியவில்லை. திராவிடர்களுக்கும் ஆப்பிரிக்கர்களுக்கும் தோற்றுவாய் ஒன்றே என்றும் எங்கோ படித்த ஞாபகம். இந்திய துணைக்கண்டமும் ஆபிரிக்கக் கண்டமும் இணைந்திருந்த காலத்தில் இந்தவிளையாட்டு தோன்றியிருந்திருக்க முடியாது. கென்யாவில் வடஇந்தியவம்சாவழியினர் அதிகம். தமிழர்போலவே அவர்களிடமும் பல்லாங்குழி விளையாட்டு இருந்து, அவர்கள்மூலம் கென்யாவுக்கு வந்திருக்குமா அல்லது அதற்கும் முன்பே வந்திருக்குமா, தெரியவில்லை.

முந்திய நாட்களின் நெடுவழிப்பயணங்களின் போது நிறுத்தியதுபோலவே இன்றும் மஸாய் மாறா நோக்கியபாதையில், நய்வாஷா தாண்டியதும் வருகிற பெருஞ்சந்தியில் மேற்கே நறொக்நோக்கித் திரும்பி சற்றுத்தொலைவில் அயூப் நிறுத்திய ஒரு வழிக்கடையில் நின்று கொண்டிருந்தபோது இந்தச் சிந்தனைகள் யாவும் எனக்கு வந்தன. பல்லாங்குழிப்பலகையும் அங்கே இருந்த பல்வேறு கைவினைப்பொருட்களோடு விற்பனைக்கிருந்தது!

வழமைபோலவே, சுத்தமாகப் பேணப்படும் ஒரு கழிப்பிடம், சிற்றுண்டிச்சாலை, கைவினைப் பொருட்கள் விற்பனை நிலையம்' மூன்றும்சேர்ந்திருந்த ஒரு தரிப்பிடம் அது. தடிப்பான பசும்பால்தேநீரை - வஞ்சகமில்லாமல் ஆளுக்கு இரண்டு கிளாஸ் - அருந்திவிட்டு அந்த விற்பனை நிலையத்தைப்பார்க்கப் புகுந்திருந்தோம். இந்த நெடுவழிக் கடைகளுக்கும், நீண்டதூர வாகன ஓட்டுனர்களுக்கும் உள்ள தொடர்புகள் தவிர்க்கமுடியாதவையென்பதும், உலகளாவியவையென்பதும் இங்கே அயூப்பும் அந்தக் கடைக்காரர்களும் அளவளாவிய அந்நியோந்நியத்தைப் பார்த்ததும் மேலும் நிச்சயமாயிற்று.

இந்தக்கடையில் கூடுதலாகப் போர்வைகளும் அதிகமிருந்தன. சிவத்தப்போர்வைகள். சிவப்பும் கறுப்பும், சிவப்பும் வெள்ளையும், சிவப்பும் பச்சையுமென்று... ஆபிரிக்க மக்களுக்குக் கடும் நிறங்களில் விருப்பம் அதிகமென்பது படங்களைப்பார்த்தாலே புரிகிறது. அதிலும் இந்த மஸாய்களுக்கு சிவப்பில் ஏன் இவ்வளவு விருப்பமோ தெரியவில்லை! நல்லகாலம், எங்கள் அந்தநாளையப் புரட்சித்தமிழ்ப்புதுக்கவிதையாளர்கள் எவரும் இந்த ஊருக்கு வந்திருக்கவில்லை..!

பல்லாங்குழி, தான் ஏற்கனவே அவதானித்திருந்த இன்னொரு ஒற்றுமையை நினைவூட்டிற்று அது.மொழி பற்றியது: இரண்டு சொற்கள்: சிம்மா,ஈரி கிக்கியுவில்' சிம்மா' என்றால் சிங்கம் ஈரி என்றால் ஈட்டி, 'இடையில் ஓர் ஆறு' நாவலில்ங்குகி குறிப்பிடுகிற கடவுளின் பெயரும் கூடவே நினைவு வந்தது. முருங்கு! இப்பிடியான தற் செயல் ஒற்றுமைகள் எல்லாமொழிகளுக்கிடையிலும் இருக்கக்கூடும் போலும்! சங்கிலித்தொடராய் நினைவில் இடுத்து வந்தவர் லிவிங்ஸ்ரன் லிவிங்ஸ்ரோன் - சீவரத்தினம். கோண்டாவிலைச் சேர்ந்தவர். ஆங்கிலச்சொற்களுக்கும் தமிழ்ச் சொற்களுக்குமிடையிலிருக்கிற ஒற்றுமைகளை மூன்று தொகுதிகளில் எடுத்துக்காட்டி மூக்கில் விரலை வைக்கப்பண்ணியவர். ஆங்கிலம் - தமிழ் இரண்டும் வெவ்வேறு மொழிக் குடும்பங்களைச் சேர்ந்தவை. என்றாலும் இவ்வளவு ஒற்றுமை எப்படி? லிவிங்ஸ்ரன் என்ற சீவரத்தினத்தாரை அவ்வளவு சுலபமாகப் புறக் கணித்துவிட எனக்கு மனமில்லை...

மற்றவர்கள் என்னை அருட்டியபோது வான் ஒரு பெற்றோல் நிரப்புநிலையத்தில் நின்று கொண்டிருந்தது. என்னையறியாமலே அயர்ந்துவிட்டேனோ வியப்பாகவும் கவலையாகவுமிருந்தது. நேரம் பதினொன்றரை பரவாயில்லை, இழந்தது அரைமணித்தியாலத்திற்குள்




தானிருக்கும் என்பது ஆறுதல்.

"இது நறொக்" என்றவர் அயூப்.

நறொக் அழகான, சிறிய, சோலைநகர் "மஸாய்மாறாபோய்ச்சேர இன்னும் மூன்று மணிநேரமாகும். காட்டுவழி, இடையில் ஒன்றுங்கிடையாது. இங்கேயே சிற்றுண்டி ஏதாவது சாப்பிட்டுவிட்டுப் புறப்படுவது நல்லது.

நல்லதாகத்தான் ஆயிற்று பெயரறியா அந்த உயர்ந்துஅடர்ந்த மரங்களின் தோப்பின் நடுவில் புல்வேய்ந்த 'போமா'வில் உட்கார்ந்து கிழங்குமசியலும் தேநீரும் சாப்பிட்டு, அந்த இடத்தைவிட்டுப் புறப்படமனமில்லாமல் எழுந்து, பன்னிரண்டுக்கெல்லாம் மீண்டும் பெருந்தெருவில் விரைந்து கொண்டிருந்தோம். ஒன்றே கால், ஒன்றரைக்கு அது நடந்தது.

அயூப் காலையில் சொன்னதுபோல நறொக்கைத் தாண்டி சிறிது தூரம் சென்றதுமே, தார்ச்சாலை மண்பாதையாக மாறிற்று. முதல்நாளிரவு மழை பெய்ததற்கு அடையாளங்கள் தென்பட்டன- புழுதியில்லை.

வழமைபோல கண்ணுக்கெட்டிய தூரம்வரைபிரிந்துகிடந்த வெளிநடுவில் நேர்கோடாய் ஓடிக் கொண்டிருந்ததுபாதை.

மந்தை மந்தையாய் மாடுகளும் அவற்றை மேய்கிற மஸாய்களும் இப்போது அடிக்கடி கண்ணிற்பட ஆரம்பித்திருந்தார்கள். ஊரில் பிறகு அவர்களின் படங்களைப் பார்த்துவிட்டு யாரோ சொன்னதுபோல 'கொக்கைத்தடிமாதிரி உயரம், தோளைச்சுற்றிய மேலங்கி மினுமினுக்கும் காறுப்பு, காலில்வலுவான பாதணி, தங்களைப்போலத் தடி ஒன்று கையில் இப்படி காட்சியளித்தார்கள் அவர்கள் தடி வைத்திருந்த கைக்கு மறுகையில், சிலர் கோடரிபோல ஒன்றும் வைத்திருந்தார்கள்-அது என்னவென்று அடுத்தநாள் அறிந்துகொள்ளமுடிந்தது. கைக்கோடரி அளவுதான். இரும்பு கிடையாது. கனத்த வைரமரம். பிடிக்கு எதிர்ப்புறம் மொளிபோல் உருண்டையாய்க் கடைந்திருந்தது. அதில் ஒரு கூர். மந்தைகளோடு காடு மேடெல்லாம் அலைகிறபோது எந்த மிருகம் வந்தாலும் சமாளிக்கவல்ல ஆயுதமாம் அது! வெக்கையேயில்லாத அந்த உச்சிவெய்யிலை நிலவாய் நினைத்து வெட்டவெளி நடுவில் உல்லாசமாய்க் குந்தியிருந்தவர்கள்: எங்கள் பகுதிகளில் பட்டியடைக்கக் கட்டிய அலம்பல்வேலிமாதிரி ஒன்றால் சூழப்பட்டுக்காட்சிதந்த அவர்களின் குடியிருப்புகள் - இவையும் மறைந்து இப்போது மறுக்கணமே தெரியாமல் மாறிக்கொண்டிருந்தது, பாதை.

"ஸீப்ரா குறொசிங்..." என்றார் அயூப், திடீரென்று.

"என்னது?"

"ஸீப்ரா குறொசிங்!" என்றார் மீண்டும், அழுத்தி. தாருக்கே தவண்டை அடிக்கும் இந்த மண் ஒழுங்கையில், மனிதர்களேயில்லாத வனாந்தரத்தில் குறொசிங் ஒரு கேடா! அதுவும் ஸீப்ரா குறொசிங்?

"எங்கே?" ஒன்றும் புரியாமல் கேட்டோம்.

"ஆங்காங்கே...!"

வலு தொலைவில், வரிக்குதிரை மந்தையொன்று பாதையைத் தாண்டிக்கொண்டிருந்தது.

"மஸாய்மாறா காட்டு எல்லைக்குள் வந்தாயிற்று..." அதை நிருபிப்பதுபோல் கூட்டங்கூட்டமாய் ஒட்டகச்சிவிங்கிகளும், வரிக்குதிரைகளும், மான்களும், மரைகளும், 'வைல்ட் பீஸ்ற்ஸ்'எனப்படும் காட்டு மாடுகளும் கண்ணிற்பட ஆரம்பித்தன!

(தொடரும்)

## அம்மா பெருமைப்படு

பத்து மாதம் என்னைச் சுமந்து
பகலிரவாய் கண்விழித்து
பத்திரமாய் வளர்த்தெடுத்தாய்
பசுந்தளிர்கள் இரண்டு டோடு
பக்குவமாய் பார்த்திருந்தாய்
பாலோடு வைந்தமிழின் வீரமதை
சேர்த்தெனக்கு ஊட்டிவிட்டாய்
அன்போடு உனக்கருகிருந்து
ஆசை மொழி பேசவில்லை
வேதனைதான்
எனினும் தருக்கர் படையழித்து
தமிழ் வாழ தனைக் கொடுக்கும்
புலிமகனைப் பெற்றுவிட்டாய்
பெருமைப்படு.

**காவியா**

## முயன்றால் முடியும்

வேண்டியதை வாங்கலாம்
பணமிருந்தால்
கேட்பதைக் கொடுக்கலாம்
குணமிருந்தால்
பார்ப்பதை ரசிக்கலாம்
மனமிருந்தால்
நினைத்ததை முடிக்கலாம்
முயற்சியிருந்தால்.

**ந.விதுரா**

## நியாயமா?

மானிட நேயத்தை புரிபவர்களோ சிலர் - ஆனால்
நேயத்தை புரிந்தவர்கள் போல் நடிப்பவர்கள் பலர்
ஏழ்மைக்கும் இங்கு இடமில்லை
செல்வ த்தை தேடிச் சேரும் உறவுகள்
ஏழையின் மனதை புரிவதில்லை
ஏழையிடம் இருக்கும் இதயம் பண்பட்டது
செல்வந்தனின் மனமோ புண்பட்டது
செல்வம் இல்லையேல் சேருகின்ற உறவெல்லாம்
தூரத்தே சென்று விடும்
ஏழைகளின் வாசற்கதவு எப்போதும் திறந்திருக்கும்
ஏனெனில்
இலட்சியம் நோக்கிய பாதையது.

### தமிழர்கள்

அடக்குமுறை இன ஒழிப்பு
நில் ஆக்கிரமிப்பு~எனும் பாறைக்கு
முட்டுக் கொடுத்து துளைத்து விளைவிட்டு
வெளிவந்து ~உலகையே
வியந்து நின்று பார்க்க வைத்த
புரட்சி மனிதர்கள்!

### சுதந்திரம்!

இரத்தம் சிந்தி; வியர்வை சிந்தி
தியாகங்கள் புரிந்து ~ பெறப்படும்
உலகில் விலை மதிக்கமுடியாத
பொருள்!

**அ.சோமேஸ்ராஜா**

### சோதனை

இறுக்கி அழுத்தப்பட்ட
இதயத்துடிப்பினூடே
இனம் புரியாத ஆக்கிரமிப்பு
சலனம் நிறைந்த
பரீட்சைச் சாம்ராட்சியத்தின்
வளைந்த செங்கோல் அது.

### விளக்கு

பகலில் எனைச்
சேர்ந்திராத தெண்ணி
இரவில் எரிந்து
கொண்டிருக்கும்
இனிய நண்பன.

### எழுது கோல்

குருதி உள்ளவரை
என்கூடவரும்
ஆறாம் விரல்.

### புத்தகம


எனக்குள் இருப்பதை
விட
தனக்குள் இருந்தும்
தலைக்கணம் கொள்ளாத்
தார்மீக வள்ளல

**குணசீலன்**

## ஊக்கமாத்திரை

வாழ்க்கையில் முன்னேற விரும்பும் ஒருவன், தீய பண்புகள், தீய பழக்கங்கள், தீய செயல்கள் அனைத்தையும் அறவே தவிர்த்தல்வேண்டும்- வெறுத்துத் தள்ளுதல்வேண்டும் தன்னுடைய அறிவாற்றலைக் கொண்டு நல்லது கெட்டதைப் பகுத்தறிந்து, தீயவற்றையெல்லாம் எப்போதும் எல்லா இடங்களிலும் தவிர்த்தல்வேண்டம்.

சக்தியற்ற உடலை நோய்கிருமிகள் தாக்கு கின்றன. மனிதன்நோய் வாய்பட்டுப்படுத்தப் படுக்கையில் விழுகின்றான். அதுபோலவே தீய செயல்கள்- தீய பழக்கங்கள் ஒருவனுடைய உள்ளத்தில் புகுந்து தீய இச்சைகளைத் தூண்டி அவனைத் தீயவனாக்குகின்றன. தீய இச்சைகளுக்கு இணங்கு கின்றவன், தீய பழக்கங்களுக்கு அடிமையாகித் தீய செயல்களைச் செய்கின்றான். ஆனால் பல்வேறு



## தவிர்க்க வேண்டியவை

துன்பங்களுக்கு ஆளாகின்றான். வாழ்வில் அல்லற்பட்டு ஆழ்கின்றான். தீய இச்சைகளுக்கு இடம் கொடாதவரின் பழக்கங்கள், செயல்களெல்லாம் நல்லவையாக இருக்கின்றன. அதனால் வாழ்க்கையில் வெற்றியும் மகிழ்ச்சியும் முன்னேற்றமும் காண்கின்றான்.

செழித்து வளர்ந்துள்ள பயிரினங்கள் முளைப்பது இயற்கை அவற்றைப் பிடுங்கி எறிந்து உரம் இட்டுப் பயிரைக் காப்பது நம் கடமை. அது போலவே, நம் மனத்திற்குள் தீய எண்ணங்கள் உண்டாவது இயற்கை அவற்றை வேரோடு பிடுங்கி எறிந்து, நல்ல எண்ணங்களை இட்டு உள்ளத்தைக் காப்பது நமது கடமையாகும். தீய எண்ணங்களும், தீய செயல்களும் அணுகாமல் உள்ளத்தைத் திடமாக வைத்துக் கொள்ளுதல்வேண்டும். அவற்றை உண்டாக்கும் இடங்களையும் நண்பர்களையும்விட்டு விலகிட வேண்டும்.

**எம்.கதிரேசன்**

## குறுக்கெழுத்துப்போட்டி - 71

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 | | | | ■ | 06 | |
| 08 | | | ■ | 12 | 13 | ■ |
| | 16 | | ■ | | | 21 |
| ■ | | ■ | 25 | | | |
| 29 | | ■ | | ■ | | |
| | | 38 | | ■ | | |
| | ■ | | ■ | 47 | | |

பெயர்:-.........................................
முகவரி:-.......................................
...................................................
...................................................

### இடமிருந்து வலம்

01. ஏழு நிறங்களின் கலவை.
06. பாதை.
08. தாய்.
12. தொடக்கம்.
16. குதிரை.

### மேலிருந்து கீழ்

08. வெள்ளம் வரும்முன் கட்டவேண்டியது.
12. கோயில் இறுதிஎழுத்தை இழந்துள்ளது.
13. அருணகிரிநாதரால் பாடப்பட்டது.
16. காற்றில் பறக்கவிடப்படுவது.
21. புதுவருடம்.
25. சூரியன்.
29. அன்பு.
38. நோ.
47. மலர்.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.69 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

01. தொழிலாளர்.
10. அகலிகை.
15. வருடம்.
20. கனி.
22. பச்சை.
26. தாமரை.
33. அரிசி.
38. கருவாடு.
45. கதிரை

**மேலிருந்து கீழ்**

01. தை
09. அருச்சுணன்.
22. பனை.
32. குருதி.
49. பூ

**இளையவர்களே!**
**மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.**

குறுக்கெழுத்துப்போட்டி,இல.71
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.69 இன் பரிசுக்குரியவர்

**சிறீன் பயஸ்,**
**46, சின்னக்கடை,**
**மன்னார்.**

### குறுக்கெழுத்துப்போட்டி இல.69 இன், பாராட்டுக்குரியவர்கள்.

01. மு.சந்திரசேகரம், அளவெட்டிதெற்கு, அளவெட்டி.
02. பு. யோதிகா, இல.867,ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி.
03. ரா. நிஜோத்பவன், சாத்திரி, கூழாங்குளம், வவுனியா.
04. தேவராசா.ஆரணி, மல்லாவி.ம.க, மல்லாவி.
05. வெண்ணிலா, வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு.
06. உ. டிலக்ஷிகா, 425, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.



# உதைபந்தாட்டம் நம்பிக்கை தரும் ஒரு மின்னல் கீற்று







"யுத்தத்தின் வாசலில் எமது தேசம் நின்றபோது துக்கத்தை சுமந்திருந்த எனது மக்களுக்கு ஒரு கனநேர மகிழ்ச்சியை ஏற்படுத்தமுடிந்ததையிட்டு பெருமைப்படுகிறேன். ஏனென்றால் வெற்றிபெறும் கோலைப் போட்டேன்'' என்கிறார் ஈராக்கிய உதைப்பந்தாட்ட இளம்புயல்வீரர் யௌனிஸ் மௌமுட் (Younis Mohmoud) மேற்காசிய உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் வெற்றிக் கிண்ணத்துக்கான போட்டியில் வெற்றிபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். யுத்தத்தின் அச்சத்துக்கும் துயரத்துக்கும் மத்தியிலும் மக்கள் மனங்களில் மகிழ்ச்சிக்கான ஒரு மின்னல் கீற்றை ஏற்படுத்தும் வன்மை உதைப்பந்தாட்டத்துக்கு உண்டு.

இரண்டாம் உலக யுத்தம் முடிவுக்கு வந்தபோது நாம் எல்லோராலும் அவமானப்படுத்தப் பட்டிருந்தோம். உலகமே எமக்கு எதிராக திரும்பியிருந்தது. உதைப்பந்தாட்டமே எங்கள் அவமானங்களைத் துடைத்து இன்று நாம் பெற்றுள்ள நிமிர்வுக்கான அத்திவாரமாக அமைந்துள்ளது. முதலில் சுவிஸ்லாந்துடனான சிநேகபூர்வ உதைப்பந்தாட்டத் துக்காக வெளியேவந்தோம். ஆனால் அடுத்து வந்த உலக உதைப்பந்தாட்ட கிண்ணத்தை கைப்பற்றி எங்கள் அவமானங்களைத் துடைத்துக்கொண்டோம் என்றார் ஜேர்மனியரான திரு. ே... ரிண் ஆசிய ஜேர் மன் விளையாட்டுப் பரிவர்த்தனைத்திட்டத்தின் பணிப்பாளராக பணிபுரியும் இவர் கிளிநொச்சி வந்திருந்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

மொரீசியஸ் தீவின் தமிழ் இளைஞன் ஒருவன் பிரான்ஸ் தேசத்தின் முன்னணி ஆட்டக்காரனாக திகழமுடிகிறது என்றால் சாதனை வீரர்களான உங்களால் ஏன் உலகின் தலைசிறந்த அணியாக உருவாகமுடியாது எனும் கேள்விக்கணையை தமிழீழ விளையாட்டுத்துறைப்பிரதிநிதியிடம் வீசினார், ஆசியவிளையாட்டு ஊடகவியலாளர் சங்க செயலாளர் நாயகம் ஜோர்ஜ் டாஸ் அண்மையில் இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்துக்கு வருகைதந்திருந்த உலக உதைபந்தாட்டசம்மேளன பிரதிநிதிகள் குழுவில் இடம்பெற்றிருந்தார். மலேசிய தமிழரான இவர் உலகின் தலைசிறந்த உதைப்பந்தாட்ட அணியொன்று தமிழர் தாயகத்தில் உருவாகவேண்டும் என்பதைக் கோடி காட்டியிருந்தார்.

அண்மையில் இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் இரண்டாம் பிரிவுக்கழகங்களுக்கான சுற்றுப்போட்டியில் வெற்றியீட்டிய மன்னார் பள்ளிமுனை புனித லூசியா விளையாட்டுக் கழகத்துக்கான பாராட்டு விழா ஒன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக், வலிகாமம் உதைபந்தாட்ட லீக், என்பன இணைந்து ஒன்றுபட்டு செய்திருந்த இப் பாராட்டு விழா தொடர்பாக கருத்து வெளியிட்ட தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் திரு. பாப்பா குறிப்பிடுகையில்; 1976 ஆம் ஆண்டு விளையாட்டமைச்சினால் நடத்தப்பட்ட அகில இலங்கை மட்ட விளையாட்டுப் போட்டியில் யாழ்மாவட்ட அணி கொழும்புமாவட்ட அணியை 4-1 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று சம்பியனாகியது. ஆனால் யுத்தமும் இனரீதியான பாகுபாடும் எமது உதைபந்தாட்டத்தின் தரத்தை வீழ்ச்சிஅடைய வைத்துவிட்டது. மன்னார் சென் லூசியஸ் அணியின்வெற்றி எமது எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது என்றார்.

**அன்ரன் அன்பழகன்**

---

*அண்மையில் இலங்கை அணிக்கும் சிம்பாப்வே அணிக்கும் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டிக்குப் பின்னர் பிரைஸ் வாட்டர் ஹவுஸ் கூப்பர்ஸ் டெஸ்ட் தரவரிசையை வெளியிட்டுள்ளது இதில் முன்னணி வகிக்கும் பத்து வீரர்களின் விபரங்கள் வருமாறு.*

*இதில் துடுப்பாட்டத்தில் பிரையன் லாரா 897 புள்ளிகளைப் பெற்று தொடர்ந்தும் முதலிடத்தில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.*

# டெஸ்ட் தர வரிசைப்பட்டியலில் முன்னணித்துடுப்பாட்ட வீரர்கள்


*இதே வேளை பந்து வீச்சில் இலங்கை அணியின் நட்சத்திர சுழற் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் 907 புள்ளிகளைப் பெற்றும் அவரும் முதலிடத்தில் இருந்து வருகிறார்.*



முழுப்பெயர்:-பிரையன் சாள்ஸ் லாரா
பிறப்பு:- 02.05.1969
பிரதான அணி:- மேற்கிந்தியத்தீவு
துடுப்பாட்டம்:-இடதுகை துடுப்பாட்டவீரர்.
(புள்ளிகள் 897)



முழுப்பெயர்:-ராகுல் ட்ராவிட்
பிறப்பு:- 11.01.1973பிரதான அணி -இந்தியா
துடுப்பாட்டம்:-வலதுகை துடுப்பாட்டவீரர்.
பணி:-விக்கெட் காப்பாளர்



முழுப்பெயர்:- மத்தியூவ் ஹைடன்
பிறப்பு:- 29.10.1961
பிரதான அணி:- அவுஸ்ரேலியா,
துடுப்பாட்டம்:- இடதுகை துடுப்பாட்டவீரர்
பந்து வீச்சு:-வலது கை மிதவேகப் பந்து வீச்சாளர்.
(புள்ளிகள் 881)



முழுப்பெயர்:-ஜாக் கலிஸ்
பிறப்பு:- 16.10.1975
பிரதான அணி:- தென்னாபிரிக்கா
துடுப்பாட்டம்:-வலதுகை துடுப்பாட்டவீரர்.
பந்து வீச்சு:-வலதுகை வேகப்பந்து வீச்சாளர்.
(புள்ளிகள் 883)



முழுப்பெயர்:- ரிக்கி தோமஸ்பொன்டிங்
பிறப்பு:- 19.12.1974
லண்டன்,மனியா
பிரதான அணிகள்:- அவுஸ்ரேலியா,டஸ்மனியா, சொம்கசெட்
துடுப்பாட்டம்:- வலதுகை துடுப்பாட்டவீரர்.
(புள்ளிகள் 864)



முழுப்பெயர்:-கிப்ஸ்கெர்சல் ஹேர்மன் கிப்ஸ்
பிறப்பு:-23.02.1974
பிரதானஅணி-தென்னாபிரிக்கா,
துடுப்பாட்டம்:-வலதுகை துடுப்பாட்ட வீரர்.



முழுப்பெயர்:-இன்சமம் உல் ஹக்
பிறப்பு:-03.03.1970
பிரதான அணி- பாகிஸ்தான்
துடுப்பாட்டம்:-வலதுகை துடுப்பாட்ட வீரர்.
(புள்ளிகள் 785)



முழுப்பெயர்:- சச்சின் ரமேஸ் டெண்டுல்கர்
பிறப்பு:- 24.04.1973
பிரதானஅணி:- இந்தியா
துடுப்பாட்டம்:-வலதுகை துடுப்பாட்ட வீரர்
பந்து வீச்சு:-மித வேகப்பந்து வீச்சாளர்.
(புள்ளிகள் 784)



முழுப் பெயர் :-விரேந்தர் சேவாக்
பிறப்பு:-20.10.1978
பிரதான அணி:- இந்தியா
துடுப்பாட்டம்:-வலதுகை துடுப்பாட்டவீரர்.
பந்துவீச்சு:-வலது கை சுழற் பந்துவீச்சாளர்.
(புள்ளிகள் 782)



முழுப்பெயர்:-கிறேம் கிரேக் ஸ்மித்
பிறப்பு:-01.02.1981
பிரதான அணி- தென்னாபிரிக்கா
துடுப்பாட்டம்:-இடது கை துடுப்பாட்ட வீரர்.
(புள்ளிகள் 759)



# படைப்பும் விமர்சனமும்: சில எண்ணக்கருக்கள்

ஞானுஜா

பொதுவாகவே தம்மைக் குறை கூறுபவர்களை எவருக்குமே பிடிப்பதில்லை. பேச்சளவில் அநேகர் சொல்லிக் கொள்வதுண்டு. தமது குறைகள் சுட்டிக்காட்டப்படின் ஏற்றுக் கொள்ளப்படுமென. ஆயினும் அது பேச்சளவிலேயே இருக்கும்.

சமகாலப் புரிதல்களில் ஒன்றாக, அநேகரிடம் இருப்பது விமர்சனத்தையும் குறை கூறுதலையும் இணைத்த ஒரு புரிதல். தன்னைக் குறை கூறுமொருவரிடம் ''விமர்சனம் செய்யாதே'' என்றுதான் கூறுகிறார்கள். அதாவது விமர்சனம் என்பதன் இன்னொரு அர்த்தமாக குறை கூறுதல் அர்த்தப்படுத்தப்படுகின்றது.

இதனால், விமர்சனம் என்றதும் அநேகர் முகம் சுளிக்கின்றார்கள். விளைவு எல்லாத் துறைகளிலும் அவசியப்படுகின்ற விமர்சனம், தீட்டுப்பொருள் போல விலக்கப்படும் அவலம் நிகழ்கின்றது. குறைந்தபட்சம், விமர்சனம் என்றால் என்ன என்பது பற்றிய கருத்தாடல்களிற்கும் எவரும் தயாராக இல்லை அல்லது அவற்றை முன்னெடுப்பதில்லை.

வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான மிக முக்கிய விடயமாக எல்லா உளவியலாளர்களாலும் குறிப்பிடப்படுவது சுய விமர்சனம். இந்த உலகத்தில் இத்தனை கோடி மனிதர்கள் இருக்கிறார்கள் வாழ்க்கையில் வெற்றியடைந்த அல்லது சாதனையாளர்களான சிலரை பெரும்பாலான சாதாரண மக்கள் இன்னமும் கனம் பண்ணிக் கொண்டுதானிருக்கிறார்கள்.


விமர்சனம் அற்ற வாழ்க்கை மட்டுமல்ல,எதுவுமே முழுமை பெறுவதில்லை. நிகழ்ந்து கொண்டிருப்பது. வளர்ச்சியா வீழ்ச்சியா தேக்கமா எனப்புரிந்து கொள்வதென்றால் கூட இது அவசியம்.

முதலாவதாக விமர்சனம் என்றால் என்ன என்பது புரிந்து கொள்ளப்படவேண்டும். இங்கு இது தொடர்பாக அலசப்படுவதன் நோக்கம் படைப்பிலக்கியம் மற்றும் அதனோடு சார்ந்த விமர்சனம் அதன் அவசியங்கள் குறித்த பதிவுகளே. படைப்பிலக்கியத்திற்கு அவசியப்படும் விமர்சனம் பற்றிய குறிப்புக்களை பதிவு செய்தலே நோக்கம்.

இலக்கிய விமர்சனம் ஒரு கலை முயற்சியா, அறிவியல் சார்ந்ததா என்ற ஒரு விவாதமும் நீண்டு கொண்டிருக்கிறது. இந்த விவாதங்களை இங்கே தவிர்த்து அவசியமான சிலவற்றைப் பார்ப்போம்.

நல்ல விமர்சனமென்பது. நிச்சயமாக கோட்பாடுகளிற்குள்ளோ, பிரதேச இனவரையறைகளிற்கோ நிற்கமாட்டாது. ஒரு படைப்பை குறை கூறுவதையோ பாராட்டுவதையோ நோக்கமாகக் கொண்டிருக்க மாட்டாது. அதனுடைய பிரதான நோக்கமாயிருப்பது அப்படைப்புருவான சமூக, பண்பாட்டுச் சூழலில் அப்படைப்பு சுட்டும் அடையாளம் மற்றும் அதன் இடம். தவிரவும், படைப்பாளன் கவனம் கொள்ளவேண்டிய அழகியல் சமூக, பண்பாட்டுக் கூறுகள் பற்றிய உணர்த்துதல்.

விமர்சனம் ஒரு பெரிய விடயம். விரிவு அடையவல்லது. படைப்பின் எல்லைகள் விரிவடைய விமர்சனமும் விரிவாகிக் கொண்டே போகும். படைப்பை போலவே காலத்திற்கு காலம் வளர்ச்சி அடையும் விமர்சனமும் அவ்வவ் காலங்களில் பல்வேறு அர்த்தப்படுத்தல்களைக் கொண்டிருக்கும். படைப்பையும் விமர்சனத்தையும் பிரிக்க



முடியாது நல்ல படைப்பாளி நல்ல விமர்சனங் களை விரும்புவான். நல்ல விமர்சகர்கள் உள்ள ஒரு சூழலிலேயே வீச்சும் வலிவுமுள்ள படைப்புக்கள் தோன்றும். சிறுவனொருவனை நல்வழிப்படுத்தும் பெற்றோராகவோ ஆசிரியராகவோ கல்வியாகவே விமர்சனத்தைக் கொள்ளமுடியும்.

தமது சமகாலத் தமிழ்ச் சூழலில் குறிப்பாக ஈழத்துச் சூழலில் விமர்சனத்தினதும் படைப்பிற்கும் விமர்சனத்திற்கும் உள்ள உறவு பற்றியும் அக்கறை கொள்ள வேண்டியவர்களாறோம்.

எல்லா இடங்களிலும் இருந்தாலும், நமது சூழலில்தான் படைப்பும் விமர்சனமும் எதிரிகள் போல ஒன்றையொன்று பார்த்துக் கொள்ளும் அவலம் பெரிது முள்ளது இது நீண்ட காலத்துக்கு முன் ஏற்பட்டுவிட்ட ஒன்று தாங்கள் வரித்துக் கொண்ட அரசியல் பொருளாதார சமூக கோட்பாடுகள் சார்ந்து இலக்கியமும் விமர்சனமும் - படைக்க முயன்றதன் விளைவிது. இதன் நீட்சி இப்போதுமுள்ளது. கோட்பாடுகளால் ஒத்தவர்கள் கட்சியாகி தங்கள் கட்சிக்காரர்களை தூக்கி வைத்துக் கொள்ளும் விபத்து. இதன் விளைவு ஒரு காலத்தில் தூக்கிப்பிடிக்கப்படும். சிலர் மறைவதும் அறியப்படாமலிருந்தவர்களைக் காலம் பேணிக் கொள்வதும் நிகழ்கின்றது.

படைப்பும் விமர்சனமும் பகையாகவே வளர்ந்து வந்த சூழலில் இப்போது வலுவிழந்த ஒரு விமர்சனச்சூழலே காணப்படுகின்றது. கடந்த சில காலமாகவே நல்ல விமர்சனமற்றே பலர் இலக்கியம் படைக்கின்றார்கள். அதாவது எந்த வரையறைகளோ ஆலோசனையோ அற்ற நிலை. இதன் விளைவு - நமது சூழலில் உருவாகும். படைப்புக்களின் வீச்சில் ஏற்படும் வீழ்ச்சி பற்றிய ஆபத்து.

இந்தச் சூழலில் வளரும் ஒரு படைப்பாளி, விமர்சனத்தையோ விமர்சகரையோ அறியாமலேயே வளர்கின்றான். ஒரு கட்டத்தில் உயர் இலக்கிய வட்டத்துள் நுழையுமொரு நிலை வரும் போது விமர்சனங்களை எதிர்கொள்ளும்போது அவற்றை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் இருக்கமாட்டாது.

அதாவது வீடுகளில் வளரும் காளைகளையும், காடுகளில் வளரும் காளைகளையும் எடுத்துக் கொள்ளலாம்.

ஈழச் சூழலில் என்று குறிப்பிட்டதில் இன்னும் உருப் பெருக்கக் கண்ணாடி வைத்துப் பார்த்தால் இந்த அவலம் நமது படைப்பாளிகளிற்கே பொருந்தும் நீண்ட நாட்களாக வெளித் தொடர்புகளற்ற ஒரு இறுக்கமான நிலையும், விமர்சனங்களற்ற நிலையும் ஒரு தேக்க நிலையை நம்முள் ஏற்படுத்திவிட்டதென்பதை அனைவரும் ஏற்றுக் கொள்ளவேண்டும். நல்ல விமர்சனங்கள் மற்றும் பரஸ்பரம் படைபாளிகள் ஒன்று கூடல்கள் செய்து இவ்ஒன்று கூடல்களினூடாக மூத்த படைப்பாளி தங்கள் அனுபவம், அறிவு, ஆலோசனைகளைப் பகிர்ந்து ஓரளவுக்கு மாற்றலாம்.

போர்ச் சூழல்மாறி, இப்போது வாய்ப்பான நிலையுள்ளது. நமது படைப்புக்குரிய விமர்சனங்ளையும் படைப்பாளர் சந்திப்புக்களையும் மேற்கொள்ள வேண்டியவர்களாகயிருக்கிறோம். விமர்சனம் அற்ற சூழலுக்குரிய பிரதான காரணமாயிருப்பது, படைப்பாளிகளுக்கிடையிலான சந்திப்புக்கள் அற்ற நிலைதான்.

யாழ்ப்பாணம்,வன்னி, மட்டக்களப்பு, கொழும்பு, மலையகம் என்ற நிலப்பிரிவுகளுள் சிக்கிப்போய் படைப்பாளிகளுள்ளனர். ஒரு பிரதேசத்தின் நல்ல படைப்பாளி பற்றியோ படைப்புக்கள் பற்றியோ எந்த அறிவு மற்று வேறொரு பிரதேசத்தார் இருக்கிறார்கள்.

நமது வன்னிச் சூழலில் குறைந்த பட்சம் எத்தனை படைப்பாளர்கள் இருக்கின்றார்கள்? தங்களுக்கு தாங்கள் தொடர்புகளுடன் எத்தனை பேர் இருக்கின்றார்கள்? கொழும்பில் நிகழ்ந்த சிங்கள-தமிழ்க் கலைக் கூடலின் பின் எங்கே எத்தனை முறை சந்தித்துக்கொண்டார்கள்?

நீண்ட கொடியபோர்கள் நிகழ்ந்த இடங்களில் தான் உலக இலக்கியத்திற்கு வளமூட்டும் உன்னதமான படைப்புக்கள் தோன்றின. நல்ல உதாரணங்களாக, ரஷ்யாவையும் வியட்நாமையும் காணலாம்.

ரஷ்யாவிலோ வியட்னாமிலோ போர் நிகழ்ந்தகாலத்திற்கு குறையாதளவு காலம் நாமும் போர்க்களத்தில் வாழ்கின்றோம். எங்கே அதிக தியாகங்கள் மக்கள்பட்ட இன்னல்கள் இருந்தன என்று சொல்ல முடியாது இவற்றிற்கு ஒப்பீடுகள் இருக்க முடியாது.

இனி நாம் உலக இலக்கியத்திற்கு அல்லது தமிழ் இலக்கியத்திற்கு நல்ல சில படைபபுக்களை வழங்க முயல வேண்டும் படைப்பு என்பது வெறும் தயாரிப்பல்ல. நான் உலக இலக்கியம் படைக்கின்றேன் என்று கூறிக் கொண்டு எவரும் செயற்படமுடியாது. ஆயினும் நல்ல இலக்கியங்கள் தோன்று வதற்கான புறச்சூழலுள்ள பிரதேசமிது நல்ல விமர்சனங்கள், நிறுவனமயப்பட்ட எழுத்தாளர்கள் என்ற ஆரோக்கியமான சூழலினூடாக, வரும் தலைமுறையிலாவது நல்லசூழலை ஏற்படுத்த முடியும்.

படைப்பாளிக்குரிய பணி என்பது, வெறும் படைப்பு மட்டுமல்ல தனித் தனித்தீவுகளாக இருந்து நான் படைப்பதெல்லாம் இலக்கியம் என்ற உணர்வுடன் செயற்படாமல் நல்ல படைப்புக்களிற்கான சூழலையும் வாய்ப்பையும் ஏற்படுத்துவது அவன் கடமையாகின்றது.

இவ் விடயத்தில் ஊடகங்களின் பங்கும் பெரியது. உண்மையில், ஊடகங்கள் இதற்காக உழைக்காது விட்டால் எந்த முயற்சியும் பயனற்றுப் போகும்.நமது சூழலில் இதற்கு ஊடகங்களும் தமது பெறுமானத்தைப் புரிந்து கொண்டு தம் பங்கை ஆற்றமுன்வரவேண்டும்.

புத்தகங்களின் முன்னுரைகளில் புதைந்தும், கோட்பாட்டு ரீதியில் பிரிந்திருப்பவர்களைத் தூற்றுவதற்கும் பயன்படும் விமர்சனத்தை மீட்டெடுக்கவேண்டியது நம் அவசியக் கடமையாகின்றது.

எழுத்தாளர்கள் ஒன்றிணைந்து பரஸ்பரக் கருத்தாடல்களுடன் இலக்கியம் படைக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

இது பற்றிய அக்கறையுடன் இயங்க எத்தனை பேர் தயாராக உள்ளனர்?


தமிழீழப்போக்குவரவுக்கழகம்

## நடத்துநர் பணிக்கான நேர்முகத்தேர்வு

தமிழீழ போக்குவரவுக்கழகம் நடத்துநர் பணிக்கு விண்ணப்பம் செலுத்தியவர்களுக்கான நேர் முகத்தேர்வு 23.05.2004ஆம் நாள் ஞாயிறு காலை 09.30 மணி தொடக்கம் பகல் 2.00 மணிவரை விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகாமையிலுள்ள பணிமனையில் நடைபெறும்.

மேற்படி பணிக்கு விண்ணப்பம் செய்தோர் கல்வித்தகைமை, அகவை ஆகியவற்றை உறுதிப்படுத்தும் உரிய ஆவணங்களுடன் வருகைதருமாறு வேண்டுகின்றோம்.

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப்பகுதி,
தமிழீழப்போக்குவரவுக்கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி-9490)

## பொருண்மிய வாசல்

# எங்கள் பொருண்மிய வளம்

சிதம்பரதிரு

எங்கள் பொருண்மிய வளத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக முதன்மைப்படுத்தப்படுவது கடல் வளமாகும்.

இலங்கையின் கடல்வளத்தில் 2/3 கடல்வளம் எங்களிடம் தான் உள்ளது 1983 க்கு முன்னர் வடக்கு கிழக்குப் பிரதேசமே மீன் பிடித்துறையில் அதிக லாபத்தையும் ஈட்டிக் கொடுத்தது வருடாந்தம் 48 ஆயிரம் மெற்றிக்தொன் மீன்கள் வடக்கு-கிழக்குக் கடலில் பிடிக்கப்பட்டன அதுமட்டுமன்றி பெருமளவிலான அந்நியச் செலாவணியை பெற்றுக் கொடுக்கின்ற கடல் உணவுவகைகளான இறால், நண்டு, கடலட்டை, சங்கு போன்றவற்றையும் எமது கடல் பகுதிகளிலேயே பெருமளவில் உண்டு.

அண்மையில் நடத்தப்பட்ட கருத்தரங்கில் மேற்குறித்த கருத்தை முன்வைத்தவர் யாழ். பல்கலைக்கழக மீன்பிடித்துறைத் தலைவர் கலாநிதி ஏ.சூசை ஆனந்தன் அவர்கள்.

இத்தகைய பொருண்மியப் பெறுமதிமிக்க கடல்வளத்தில் இருந்து நாங்கள் இன்னமும் உச்சபயனைப்பெற்றுக்கொள்ள முடியவில்லை அதற்கான காரண காரியங்கள் என்ன என்று இங்கு பட்டியல் இட்டுக் காட்டுவதை விட எங்களால் அதனை புரிந்துகொள்ள முடியும்.

எங்கள் பொருண்மிய வளங்களை நாங்களே பாதுகாத்து பயன்படுத்தி பொருண்மிய நலன்களைப் பெற்று எங்களது பொருண்மியத்தை மேம்படுத்த எங்களுக்கென உறுதியான அதிகாரமுள்ள நிர்வாகக் கட்டமைப்புத் தேவை.

"எமது கடல் வளம் பாதுகாக்கப்படுவதற்கு மெக்கென்றொரு அரசு அமையவேண்டும்" என கலாநிதி சூசை ஆனந்தன் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக்கருத்து கடல்வளத்திற்கு மட்டும் பொருத்தமானது அல்ல எமது சகல பொருண்மிய வளங்களுக்கும் பொருத்தமானது ஆகும்.

கடற்கரையில் இருந்து கொண்டு நிவாரணம் சாப்பிடும் நிலை என்றைக்கு மாறுமோ அன்றுதான் எமது பொருண்மிய நிலை மேம்படும் அதற்காக நாம் தொடர்ந்து செயற்படவேண்டும்.

(சி-9609)

# ஆரோக்கியபுரம் வளம் பெற பாலன் குளம் புனரமைப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் அக்கராயன் கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ளது ஆரோக்கியபுரம். இக் கிராமத்தின் தென் கிழக்குத் திசையில் பாலன்குளம் எனும் சிறிய நீர்ப்பாசனக்குளம் உள்ளது.

1977 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இனக்கலவரத்தினால் இடம் பெயர்ந்த மலையக மக்களை குடியமர்த்தியுள்ளனர். இங்கே 100 குடும்பங்கள் வாழ்ந்து வந்தனர். 1990 ஆம் ஆண்டு ஏற்பட்ட போர்ச் சூழலாலும் பொருளாதாரத் தடையாலும் 45 குடும்பங்களுக்கு மேல் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றுள்ளனர். தற்போது ஏறக்குறைய 52 குடும்பங்கள்தான் வாழ்ந்து வருகின்றனர்.

இங்கே உள்ள ஒவ்வொரு குடும்பங்களுக்கும் 1ஏக்கர் மேட்டு காணியும், ஒரு ஏக்கர் வயல் காணியும் வழங்கப்பட்டுள்ளது. இக்கிராமத்தில் வாழுகின்ற மக்களின் ஜீவனோபாயத் தொழிலாக விவசாயமும், கடற்தொழிலும் செய்துவருகின்றனர். வரட்சியான காலங்களில் கிணறுகளில் நீர் வற்றிவிடும் நீரின் தட்டுப்பாட்டால் மிகவும் கஷ்டப்பட்டனர்.

இக்கிராமத்தில் அமைந்துள்ள பாலன் குளம் விவசாயச் செய்கைக்கு பயன்படுத்த முடியாத நிலையில் இருந்து வந்தது. இந்தக் குளத்தை நம்பி விவசாயிகள் விவசாயம் செய்யமுடியாது. பாலன் குளம் நீண்ட காலமாக புனரமைப்புச் செய்யப்படவில்லை. இதனால் மக்கள் குடிநீரின்றியே விவசாயத்தை மேற்கொள்ள முடியாத நிலையில் கூலி வேலை செய்யத் தொடங்கினர். இருந்தாலும் மழையை நம்பி மானாவாரிச் செய்கை யில் ஈடுபட்டு இலாபந்தேடினர். விவசாயச் செய்கையில் ஆர்வமுள்ள இந்த குடும்பங்களுக்கு நீர் வசதி இன்மையால் விவசாயத்தைக் கைவிட வேண்டியதாயிற்று.

பாலன் குளத்தின் நீரேந்தும் கொள்ளளவு 48 ஹெக்கோ மீற்றர் ஆகும். இது 60 ஹெக்டேயர் விவசாயநிலத்திற்கு நீர்ப் பாசனம் செய்யக் கூடிய அளவு நீரைத் தேக்கி வைக்க கூடிய விஸ்தீரணம் உடையது. அணைக்கட்டின் நீளம் 970 மீற்றர் ஆகும. உயரம் கடல் மட்டத்திலிருந்து 25.5 மீற்றர் ஆகவும் உள்ளது. இக் குளத்திற்கு கலிங்கு இயற்கையாகவே அமைந்துள்ளது. இதன் நீளம் 30 மீற்றர் ஆகும்.

பாலன்குளம் பல வருடகாலமாக புனர்நிர்மாணம் செய்யப்படாமலும் தொடர் பராமரிப்பு மேற்கொள்ளப்படாததாலும் குளக்கட்டின் பிரதான பகுதியில் உடைப்பெடுத்து நீரைத் தேக்கி வைக்க முடியாத நிலையில் இருந்தது. அத்தோடு கலிங்கு அமைக்கப்படாமலும் துருசு அமைக்கப்படாமலும் இருந்ததால் அடிக்கடி உடைப்பெடுத்தது.

இதனால் கிணறுகளில் நீர் வற்றிவிடுவதால் குடிநீருக்கே தட்டுப்பாடு ஏற்பட்டது. மழைகாலங்களில் மானாவாரிச் செய்கையில் ஈடுபட்டாலும் ஏனையகாலங்களில் கூலி வேலைக்குச் செல்லவேண்டிய நிலை மக்களுக்கு ஏற்பட்டது.

இக் கிராமத்து மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு தமிழர் புனர்வாழ்வு கழகமும் போரூட் நிறுவனமும் இணைந்து இப்பாலன் குளத்தின் அணைக்கட்டை உணவு வழங்கி, அக்கிராமமக்களின் உடல் உழைப்பினால் சீர்செய்து ஓரளவு நீர் தேங்கக் கூடியவாறு புனரமைப்புச் செய்தது. ஆனால் இக்குளத்தில் மேலதிக நீர் செல்வதற்கு வாய்க்கால்களும் துருசுகளும் அமைக்கப்படாமையினால் இவ் அனைக்கட்டு அடிக்கடி உடைப்பெடுத்தது.

2002 ஆம் ஆண்டு உடைபபெடுத்த இக் குளத்தின் அணைக்கட்டை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் முன் வந்து திருத்தி தண்ணீரைத் தேக்கி அணைக்கட்டை அதிலில் இருந்து பாதுகாத்ததோடு கமக்கார அமைப்புடனும் இணைந்து செயற்பட்டது. இதனால் வருடாவருடம் அணைக் கட்டினைக் கட்டி பாதுகாத்ததால் பாலன்குள மக்கள் அத்தியாவசிய தேவைகளுக்கான நீரைப் பெறுவதற்கு வேறு இடங்களுக்கு செல்லும் நிலை தவிர்க்கப்பட்டது. விவசாயம் மேற்கொள்ளக் கூடிய நிலையில் இல்லாமல் இருந்தாலும் 2001 ஆம் ஆண்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நியாப் திட்டத்தின் கீழ் 42 இலட்சம் ரூபா செலவில் 300 அடி நீளமான அணைக்கட்டு, இரு துருசுகள், வலதுகரை இடதுகரை என இரண்டு பெரும் வாய்க்கால்களும் 8 கிளை வாய்க்கால்களும் குளத்தின் மேலதிக நீர் வெளியேற வான் பகுதியும் அம்பலப்பெருமாள் வீதியை இணைக்கும் பெரு வீதி ஆகியவையே அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பாலன் குளம் புனரமைப்புச் செய்யப்பட்டதால் இங்கே வாழும் மக்கள் விவசாயச் செய்கை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கிறது. கால போகம், சிறுபோகம் என விவசாயத்தை மேற்கொள்ளகூடியதாக இருக்கிறது. பாலன்குளம் புனர மைக்கப்பட்தல் கிணறுகளில் நீர் நிலைகளில் நீரைக்காணக் கூடியாதாக இருக்கிறது. இதனால் மக்கள் போதிய வருமானம் பெறக் கூடியதாக உள்ளது. பாலன்குளம் புனரமைக்கப்பட்டதால் அங்கு வாழும் மக்கள் புத்துணர்ச்சி பெற்றுள்ளனர் என்றே கூறலாம்.

எஸ்.கே

# ஈழநாதத்தின் குறுநாவல் போட்டி

## சிறந்த படைப்புக்கு 25,000 /= ரொக்கம் பரிசு

போட்டிக்கான இறுதித்திகதி யூன் 25 வரைநீடிப்பு.

இலக்கியப் படைப்பாளிகளுக்கு ஈழநாதம் குறுநாவல் போட்டி ஒன்றை அறிவித்திருந்தது. இலக்கியப் படைப்பாளிகள் இதில் ஆர்வமுடன் பங்கேற்குமாறும் அது வேண்டியிருந்தது.

இதற்கமைவாக ஏராளமான படைப்பாளிகள் குறுநாவல் போட்டியின் முடிவுத்திகதியை நீடிக்குமாறு வேண்டியதற்கிணங்க எதிர்வரும் யூன் 25 வரை குறுநாவலை அனுப்பிவைக்கவேண்டிய கால எல்லையை நீடித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

கதை எவ்விடயப்பரப்பிலும் அமையலாம். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. போட்டிக்கு அனுப்பப்படும் படைப்பு முன்பு தவறி வந்ததோ, வேறு போட்டிக்காக அனுப்பப்பட்டதோ, முன்பு பிரசுரிக்கப்பட்டதாகவோ, பிரசுரத்திற்குக் கொடுக்கப்பட்டதாகவோ இல்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும். தனது சொந்த ஆக்கம் என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்.


தேர்ந்தெடுக்கப்படும் முதலாவது சிறந்த படைப்புக்கு (25,000/=) இருபத்தி ஐயாயிரம் ரூபா ரொக்கம் பரிசுக் கொடுக்கப்படும்.

பிரசுரிக்கத் தகுதியானவை எழுத்தாளரின் அனுமதியுடன் வெள்ளிநாதத்தில் பிரசுரிக்கப்படும்.

தொடர்புகளுக்கு முகவரியைத் தெளிவாகக் குறிப்பிடவும்.

ஆசிரியர்
வெள்ளிநாதம்,
ஈழநாதம்,
கிளிநொச்சி.

விரைவில் எதிர்பாருங்கள்
உங்கள் வெள்ளி நாதத்தில்
வி.பி.யோசப்பின் புதிய மொழியாக்கத் தொடராக வெளிவருகின்றது
முடுப்னிக்குள் ஒரு தேடல்
ஆவலோடு எதிர்பாருங்கள்

சகலவிதமான கணனி அச்சுப் பதிப்புகளுக்கும்

அழகன் பதிப்பகம்
யாழ் சாலை கிளிநொச்சி

# இலக்கியப் பகிர்வு



"யாழ்ப்பாண இடப்பெயர்வின் பின் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த முதற் சஞ்சிகை தூண்டியே" என்ற வெளிப்படுத்து கையுடன் மீண்டும் "தூண்டி" இலக்கிய சஞ்சிகையின் 7 வது இதழ் (சனவரி-மார்ச் 2004) அண்மை யில் வெளிவந்துள்ளது.

யாழ்ப்பாண இடப்பெயர்வு' என்பது தமிழ் மக்களின் வரலாற்றில் ஒரு திருப்பு முனை. ஆனால் அந்த இடப்பெயர்வினால் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட மாற்றங்களை விட ஏனைய இடங்களிலும் புலம்பெயர் நாடுகளிலும் ஏற்பட்ட மாற்றங்களே அதிகம். அரசியல், பொருண்மிய, கலை இலக்கியத் துறைகளை இங்கு சுட்டலாம். எனினும் கலை இலக்கியத் துறையே நாம் இங்கு எடுத்துப் பார்ப்பது பொருத்தமானது.

யாழ்ப்பாணத்து இடப்பெயர்வின் பின்னரான காலப்பகுதியில் ஏனைய இடங்களில் ஏற்பட்ட கலை இலக்கிய எழுச்சி யாழ்ப் பாணத்தில் எழவில்லை என்றே கூறவேண்டும். இதற்கான நேரடி, மறைமுக காரணங்கள் பல இருக்கலாம். கலை இலக்கிய முயற்சிகளுக் கான புறச்சூழல் இல்லாமல் இருந்தது கூட ஒரு காரணமாகலாம்.

1997-1998 காலப்பகுதியில் வெளியான "தூண்டி" அக்காலப்பகுதியில் 6 இதழ் களை வெளியிட்டது சந்தர்ப்பவசத்தால் அக்காலத்தில் அதனைப் பார்க்கய கிடைக்க வில்லை. இப்போது 2004ல் அதன் 7 ஆவது இதழ் வெளிவந்துள்ளது. எனவே "தூண்டி" இரண்டாவது பிறப்பு எடுத்துள்ளது என்று கூறலாம்.


இப்படித் தூண்டி இரண்டாவது பிறப்பு எடுப்பதற்கு 7வது இதழ் வெளிவர நான்கு ஆண்டு காலம் எடுத்தமைக்கும் முன்னர் கூறிய புறச்சூழலே காரணமாக அமையலாம். மேற்படி யாழ்ப்பாண இடப்பெயர்வின் பின்னரான காலப்பகுதியில் "போஸ்கோ" அதிபர் சந்திரபோஸ் அவர்களால் "அந்தரன்" என்ற இதழும் வெளியிடப்பட்டது.

அது கூட ஆறு அல்லது ஏழு இதழ் களுடன் நின்றுபோய்விட்டது. புதிய படைப் பாளிகள் பலருக்கு இடம் தந்து வளர்த்த அச் சஞ்சிகை நின்று போனது வருத்தத்திற்குரிய விடயம்.

"தூண்டி" ஒரு தரமான இலக்கிய இதழாக வெளிவந்துள்ளமை, ஆர்வத்தை தூண்டும் விடயமாகும். நல்ல கலை இலக்கியப் படைப்புக்களுடனான பரீட்சயத்திற்கு இது போன்ற இதழ்களின் வருகை அவசியமாகும்.

"தூண்டி" இந்த பணியை செவ்வனே செய்யும் என்று நம்பலாம்.

"தூண்டி இதழை மீளக்கொண்டு வருவது பற்றி ஆலோசிக்கப்பட்ட போது இதன்




இலக்கு, தேவை போன்றன பற்றிய உரை யாடல் மிக நீண்டதாகவே அமைந்தது. ஈழத்தை மையப்படுத்திய ஆய்வுகள் மற்றும் வளமையான இலக்கிய வாசகர்களைத் தாண்டி புதிய வாசகத் தளத்தை நோக்கி நகர்தல், பழைய, புதிய படைப்பாளிகளுக்கு களம் அமைத்துக் கொடுத்தல் போன்ற இன்னும் சில அம்சங்க ளையும் புதிய உரையாடல்களையும் மையப் படுத்தி இம் மீள் பிரவேசம் நிகழ்கிறது."

என "தூண்டி"யின் ஆசிரியர் குறிப் பிடுகிறார். அவர் குறிப்பிடுவதே காலத்தின் தேவையாகும். ஆனால் இந்தக் குறிக்கோளுடன் ஒரு சிறு சஞ்சிகை நீண்டகால ஆயுளைத் தேட முடியாது என்பது மறுவழமாக உள்ள ஒரு சோகம்.

எமது நீண்ட இலக்கிய வரலாற்றில் தரமான இலக்கிய சஞ்சிகைகள் பல வெளி வந்து மடிந்து போனதே வரலாறு, தொடர்ந்து வெளிவரக் கூடிய (காலரீதியான) சஞ்சிகை களை தரமான படைப்புக்களுடன் வெளிவரும் சஞ்சிகைகள் என இங்கு பலரும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள்.

இத்தகைய முரண்பட்ட நிலையினை நாம் எப்படி எதிர்கொள்ளப்போகின்றோம். இந்த முரண் நிலையை எவ்வாறு சமாளித்து சிற்றேடுகளைத் தொடர்ச்சியாக வெளியிடும் சூத்திரத்தைக் கண்டு பிடிக்கப்போகின்றோம்.

இது தொடர்பாகக் கலை இலக்கியப் படைப்பாளிகள் வாசகர்கள் சிந்தித்தல் பொருத்தமான செயற்பாடாக அமையும். இல்லாவிடின் ஆர்வமுள்ள இளம் இலக்கிய வாதிகள் அந்த ஆர்வமும், கையிலுள்ள பணமும் கரையும்வரை சிற்றேடுகளை வெளியிடுவார்கள். பின்னர் கண்களை மூடிக் கொள்வார்கள். இதுவே தொடரப்போகும் நடவடிக்கையாக அமைந்துவிடக்கூடாது.

"தூண்டி"யின் மீள் வருகை நல்ல விதமாக அமையவேண்டும். கட்டுரைகள், விமர்சனங்கள், கவிதைகள், நேர்காணல் என்று தரமான படைப்புக்களுக்கு இடம்கொடுக்கும் "தூண்டி" புதிய படைப்பாளிகள் பக்கமும் தன் பார்வையைச் செலுத்தவேண்டும். இந்த இதழில் புதியவர்கள் இல்லை எதிர்வரும் இதழ்களில் இக் குறை நீக்கப்படும் என எதிர் பார்க்கலாம்.

புதியவர்களை அரங்கிற்கு கொண்டு வரும்போது படைப்பின் தரம் என்பது ஒரு பிரச்சினையாகிவிடும் என சஞ்சிகை ஆசிரியர் கள் சொல்வார்கள்.

அந்த ஆசிரியர்களால் தொகுக்கப் படும் சஞ்சிகைகளே முதல் இதழைப்போல அடுத்த இதழ் அமைவது இல்லை. படிமானமான வளர்ச்சியில் அடுத்த இதழ்கள் வளர்ச்சிப் போக்கில்தான் அமைவது வழக்கம்.

முதலாவது இதழைவிட ஏழாவதோ எட்டாவதோ இதழ் தான் தரமாகவும், கனதியாகவும் அமைந்துவிடும். அதற்காக ஏழாவது அல்லது எட்டாவது இதழை முதலாவது இதழ் எனக் கொள்ளவும் முடியாது. பழைய இதழ்களை நிராகரிக்கவும் முடியாது.

இவ்வாறான நிலைமைதான் புதியவர்கள் தொடர்பிலும் இருக்க முடியும். எனவே அவர்களது ஆரம்பப் படைப்புக்களுக்கு இடம் கொடுக்க வேண்டும் அதனைச் செய்யப் போவது யார்?.

**இணுவையூர்**
**சிதம்பர திருச்செந்திநாதன்**

## படித்ததில் பிடித்தது

### ஒருவருமே எஞ்சியில்லையா?

*எங்கள் இளைஞர்கள் எங்கே?*
*அந்த மனிதனைக் கேட்டேன்*
*தூரத் தெரிந்த*
*வயல்களுக்கு அப்பால்*
*அவன் கையைக் காட்டினான்*
*அவர்கள் மரங்களில் தொங்குவதை*
*நான் கண்டேன்.*

*மற்றயோர் . எங்கே?*
*மீண்டும் கெஞ்சிக் கேட்கிறேன்*
*அவன் கள்களில் வெஞ்சினம்*
*அவனுடைய முஷ்டிகள்*
*இறுகிக் கொள்கின்றன*
*"முட்கம்பிகளில்*
*சிக்கிச் சிதைந்திருப்பதை*
*நிலத்தில் காணலாம்" என்கிறான்.*
*சில இளைஞராவது*
*எஞ்சியிருக்க வேண்டுமே?*

*தோளுக்கு மேலாக*
*அருகிலிருந்த*
*வீட்டைப் பார்த்துவிட்டு*
*தோளைக் குலுக்கிக்கொள்கிறான்*
*நான் உள்ளே போகிறேன்*
*புகைமண்டலத்தினூடே*
*நிழலுருக்களைக் காண்கிறேன்*
*வெறித்தனமான சிரிப்புகளை...*
*சூனியத்தை வெறிக்கிற கண்களை...*
*நான் காண்கிறேன்.*

*எவருமே எஞ்சியில்லையா?*
*அவன் பதில் சொல்லவில்லை.*
*நீண்டநேரம் மௌனித்தான்*
*பின் பதில் சொன்னான்*
*" எங்கள் வாழ்க்கைகளை*
*தேடிக்கொள்வதில்*
*அவர்களை மறந்துவிட்டோம்.....*
*...அவர்களை மறந்து விட்டோம்"*
*மறுபக்கம் திரும்பியவன்*
*அழத்தொடங்குகிறான்.*

ஆங்கில மூலம்:- கேற் எல்லிஸ்.
தமிழில்: வின்சென்ற் புளோரன்ஸ்,

## பொறுக்கி எடுத்த பூக்கள்

### ஒரு கருத்து

"அறிவுலகக்காரன் பகிரங்கத்தின் முன்வைக்கும்
விவாதங்கள் யாவற்றிலும் ஒரு நிர்த்தாட்சண்ய
சக்தியும், பொதுமனிதனது அறிவுத்தளத்திற்கான
சிந்தனை அம்சம் மற்றும் தகவல்கள் யாவும்
இருக்கவேண்டும்.

**-பிரேமிள்**

### ஒரு அறிவுரை

கொம்புளதற்கு ஐந்து குதிரைக்குப் பத்து
வெம்புகரிக்கு ஆயிரந்தான் வேண்டுமே
வம்பு செறி தீங்குணர் தம் கண்ணுக் கெட்டா தூரத்தில்
சென்று மறைவதே நல்ல வழி.

### ஒரு கோரிக்கை

சிலையாக்கி நடுத்தெருவில் நிறுத்தவேண்டாம் -தபால்
தலையாக அடித்தென்னை வருத்தவேண்டாம்.
வானுயர பூதமென வரைந்தே என்னை - போகும்
வழியெங்கும் 'கட்டவுட்' டாய் வைக்க வேண்டாம்
என் பெயரில் 'இஸம்'களை பரப்ப வேண்டாம் - அவற்றை
ஏதேதோ கொள்கைகளால் நிரப்பவேண்டாம்.
இன்றிங்கு நானாற்றும் பணிகள் தம்மை - நீங்கள்
என்றென்றும் நிறுத்தாமல் தொடர்ந்தால் போதும்.

**-சுஜாதா விஜயராகவன்**

### திருமணம் பற்றி இவர்கள்

எப்படியானாலும் திருமணம் செய்துகொள் நல்ல மனைவி கிடைத்தால் மகிழ்வாய்: அப்படியில்லாவிடில் தத்துவஞானி ஆகிவிடுவாய்.

**-சோக்ரட்டீஸ்**

நான் தீவிர வாதத்தைப்பற்றி கவலைப்படுவதில்லை. எனக்கு திருமணமாகி இரண்டு ஆண்டுகள் ஆகிவிடுகின்றன.

**-சாம்கினிசன்**

மகிழ்ச்சியான மணவாழ்வை விரும்பும் கணவன் தன் வாயைமூடிக் கொள்ளவேண்டும், காசோலை புத்தகத்தைத் திறந்து வைத்தும் கொள்ள வேண்டும்.

**-கிரௌசோ மார்க்ஸ்**

### இன்னொரு கவிதை

வீடும் நாடும்
வீடு.....
பறவைக் குஞ்சுகள் கூடு
காடு.....
சிறகு தென்றலின் நாடு
நாட்டுள்....
வீடும்:
வீட்டுள்,
நாடும்:
கூடும்! ஒளியோ இருளுடு....!
ஊடும் விதியின் முறையீடு...!

**கம்பதாசன்**

**பொறுக்கி**

**(02ஆம் பக்கத் தொடர்ச்சி)**

வெற்றிபெறச்செய்யக் காரணம் என்றால் அதில் சந்தேகமுமில்லை.

சோனியா இந்தியாவின் பிரதமராக வருவதற்கான அங்கீகாரத்தை மக்கள் தேர்தலின் மூலம் வழங்கியிருக்க, அதனை எதிர்த்து பா.ஐ.கட்சியும், அ.இ. அ.தி.மு.க போன்ற அதன் கூட்டணி கட்சிகளும் பிரசாரம் செய்து, எதிர்ப்பு காட்ட முயல்கிறது. அப்பட்டமான சனநாயக விரோத நடவடிக்கையேயாகும்.

இஸ்லாமியருக்கு எதிராக-கிறிஸ்தவர்களுக்கு எதிராக மதவாதத்தையும் சோனியாவுக்கு எதிராக தேசியவாதத்தையும், ஈழத்தமிழர்களுக்கு எதிராக பிராந்திய மேலாதிக்க வாதத்தையும், இந்திய ஆளும் வர்க்கம் கடந்த காலங்களில் கைக்கொண்டு வந்தமையின் விளைவே, உலகின் மிகப் பெரிய சனநாயக நாடான இந்தியாவில் சனநாயக மற்றும் இந்த உரிமை மீறல்கள் அதிகரிக்க காரணமாகியிருந்தது. சோனியா பிரதமர் பதவியை ஏற்ற கடைசிக் கட்டத்தில் மறுப்புத் தெரிவித்தமைக்கு இந்திய அரசியல் வாதிகளின் சனநாயக ரீதியிலான பன்முகப்பார்வைக் குறைபாடே காரணமாகும்.

ஒரு இஸ்லாமியரான அப்துல்கலாமை சனாதிபதியாக ஒரு அதிகார வழுவற்ற கௌரவப் பதவியில் உட்காரவைத்துவிட்டு இஸ்லாமியருக்கு எதிரான கலவரத்தை குஜராத்தில் கட்டவிழ்த்து விட முடிந்த பா.ஐ.கட்சியினரால் ஒரு இத்தாலியில் பிறந்து இந்திய பிரஜையாகிவிட்ட சோனியாவை பிரதமராக ஏற்கமுடியவில்லை என்றால், பிரதமர் பதவி அதிகார வலுக் கொண்ட பதவியென்பதைத் தவிரவேறு காரணம் ஒன்றும் உண்டு....

அதாவது சோனியா பிரதமரானால் பிரதமர் கிறிஸ்தவ மதத்தவராகவும் சனாதிபதி இஸ்லாமிய மதத்தவராகவும் இந்தியாவில் இருக்க இந்துத்துவ வாதிகள் பொறுக்கமாட்டார்கள் என்பதே அந்தக் காரணமும் ஆகும்....

சரி... சோனியா தனது புகுந்த வீட்டின்-கணவரின் நாட்டின் இநதுத்துவ மதவெறியாளர்கள் பற்றி என்ன நினைப்பார்?

ராமபக்தர்களுக்கு உரோமரைப் பிடிக்காது என்றும் நினைக்கக்கூடும்


**விற்பனையாகிறது......**

*புலமைப் பரீட்சை வழிகாட்டி*
*தரம் -05*
(ஆசிரியர்:- வேலுப்பிள்ளை- அன்பழகன்)
விற்பனையாகிறது.
வன்னியின்:-ஏக விநியோகத்தர்
பிள்ளையார் பொத்தகசாலை
கிளிநொச்சி
T.P 021.2285750
வணிகர்களுக்கும்
பாடசாலைகட்கும் விசேட கழிவுண்டு.
சி.-9621



*வன்னி விழாங்குளம்*
*சிறிமுத்துமாரி அம்மன் ஆயல வருடாந்த*
**பொங்கல் விழா** *28-05-2004*

அம்பாள் அடியார்களே...
மேற்படி அம்பாளின் பொங்கல் விழா எதிர்வரும் 28-05-2004 வெள்ளிக்கிழமை வழமைபோல் நடைபெறும். அன்று நண்பகல் அம்பாளுக்கு விசேட அபிஷேகமும் பூஜையும் இரவு பொங்கல் விழாவும் நடைபெறும். வழமைபோல் அடியார்களுக்கு அன்னதானமும் நடைபெறும்.அடியார்களின் நலன்கருதி பிரயாண ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளது.
குறிப்பு: மேற்குறிப்பிட்ட பொங்கல் தினத்தில் வாணிபம் செய்ய விரும்புவோர் எதிர்வரும் 25-05-2004 முற்பகல் 9.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணிவரை தங்கள் பெயர்களை பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*ஆலய திருப்பணி சபையினர்,*
*வன்னிவிழாங்குளம்,*
*மாங்குளம்.*
(சி.4125)



**For the Water and Habitat Department of its Sub-Delegation in Mallavi, the International Committee of the Red Cross is currently seeking:**

COMITE INTERNATIONAL GENEVE

# Water and Sanitation Technicians

**(male or female)**

**for the position as Field Officer for the Water and Habitat Department**

Duty station is the Mallavi Sub-delegation, which covers the northern Districts of Kilinochchi, Jaffna, Mannar, Mullaitivu, and Vavuniya - North. Eligible applicants should be resident in one of these districts.

**Tasks:**
- Assisting in the development of appropriate solutions, in water access related works
- Preparation of proposals, bills of quantity, reports, etc.
- Independent implementation of supervision and assessment works
- Supervision of the implementation of sewerage and water projects
- Assistance to and co-operation with national and expatriate colleagues in various technical fields

**Requirements:**
- Team spirit, reliability and professional commitment
- High motivation and willingness to learn, resistance to stress
- Good command of English, spoken and written
- Hydraulic, civil or/and mechanical degree, or considerable practise in mentioned fields
- Relevant professional experience
- Good computer and reporting skills
- Valid driving permit is an asset

Applications in English including a curriculum vitae and copies of relevant certificates (no originals!) as well as contact details should be submitted by 15 June 2004 to the ICRC Sub-Delegation, Yogapuram, Mallavi or to the ICRC Head Office in Colombo, 29, Layards Road, Colombo 05.

(4513)


## படத்திற்கு மெருகூட்டுங்கள் -69



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

### படத்திற்கு மெருகூட்டுங்கள் -68

.................................................
.................................................
.................................................
.................................................

பெயர் : ......................................
முகவரி : ......................................
......................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -68



மு.சந்திரசேகரம்
அரசினர் வைத்தியசாலை
மல்லாவி.

### பரிசுக்குரிய வரிகள்

*சினம் தணிந்து சீற்றம் அடக்கி சிறுத்தை உன் மடியில்*
*சிம்மாசனம் கொள்ளவில்லை புரிந்துகொள் இதுபுரிந்துணர்வு*
*பனைமிரட்டி பல சாதனை படைத்து சமாதானம் பேசுகிறது*
*உலகம் இதை உணர்ந்தால் புரியும் பல உண்மைகள்.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*பாயும் புலியைப் பார்.பதுமையாக அவர் மடியில்*
*சிறுத்தையே பாரும் உனைச் சீண்டினால்*
*சினம் கொள்ளு. சீறி எழு.*
*பாய்ந்து சென்று பகைவனை விரட்டிவிடு.*

ம.கலைநிலா,
புதுக்குடியிருப்பு.

*வரிப்புலி வரிப்புலி வளப்புடன் இருக்குது*
*வந்தவர் எல்லாம் வாஞ்சையுடன் அணைக்கிறார்*
*துரோகம் செய்தால் தூக்கியே தின்றிடும்-மடியில்*
*தூக்கி வைத்தால் துணையாய் வந்திடும்.*

மயிலாபுரியான்,
தெல்லிப்பளை.

*தமிழ்ப்புலி, தமிழீழத்துப் புலி, எம் இனத்துப் புலி*
*நீதி நியாயம் புரட்சிமிக்க வீரப்புலி*
*காவித்துணியையும், பழுப்புச் சிரிப்பையும்*
*புரிந்த புலி வஞ்சகத்தை அழிக்கும் வேவுப்புலி.*

கு.சுயதர்சினி
வள்ளிபுனம்.

*அன்பு,நேர்மை, உண்மை பகிர்ந்தால்*
*புலியும் இணைந்து போகும் -கபடம்,*
*லஞ்சம், வஞ்சம் காட்ட யாரும் நினைத்தால்*
*புலியாய் சீறும், வெல்லும் இப் புலிக்குத் தெரியும்.*

கா.சுஜோ
கிளிநொச்சி

*பதுங்கியே எமை அழிக்கும்*
*பகைமைக்கு பதிலடி கொடுக்க வேண்டுமென*
*பாய்ந்த புலிக்குட்டிக்கு*
*பயிற்சி அளிக்கின்றாரோ.*

சு.சிவாஜினி
புதுக்குடியிருப்பு.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.

பழைய நினைவுடன் புதிய அறிமுகம்!

# வடபகுதி மக்களின் மனம் நிறை நாயகன்



# ஏசியா

மீண்டும்
தெருவெங்கும்
வலம்
வருகின்றான்

**உறுதியான உழைப்பு**
**நீடித்த வாழ்வு**
**பயணத்தில் மகிழ்ச்சி**

→ இதுவே ஏசியாவின் தனிச்சிறப்பு

**ISO 2001-4000 & ISO 12001**
தரச்சான்றிதழ் பெற்ற
சைக்கிள்கள்
இப்போது
உங்கள் கையில்



**யப்பான் இந்தியா கூட்டுருவாக்கத்தில் விளைந்த ஏசியா சைக்கிள்களை சிறப்புக்கழிவு விலையில் நீங்களும் பெற்று பயன்பெறுங்கள்.**

சிறப்புச்சலுகை புதிய சைக்கிலுடன் பூட்டு, கரியல், ஸ்ரான்ட் என்பன இணைக்கப்பட்டுள்ளன.

வடபகுதியில் அறிமுகப்படுத்துவோர்:

## ஏசியா இன்டஸ்ரீஸ்

## ASIA LIMITED

**ISO 2001-4000 &**
**ISO 12001 CERTIFIED**
**13/3Mathura Road,**
**Faridabad- 142004,**
**Haryana, India.**

வன்னியில் உங்கள் தேவைகட்கு:

கந்தன் களஞ்சியம்
கிளிநொச்சி.

பிள்ளையார் களஞ்சியம்
கிளிநொச்சி.

திருமுருகன் களஞ்சியம்
கிளிநொச்சி.

மயிலரசன் எரிபொருள் உதிரிகள் களஞ்சியம்
டிப்போ வீதி, கிளிநொச்சி.

பிள்ளையார் புடைவை மாளிகை
புதுக்குடியிருப்பு.

திருக்குமரன் புடைவை மாளிகை
புதுக்குடியிருப்பு-முல்லைத்தீவு.

தெய்வம் வாணிப மாளிகை
புதுக்குடியிருப்பு.

இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மே மாதம் 21 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.